
# உள்ளங்கள் ஒன்றாகி...

லட்சுமி பிரபா



# உள்ளங்கள் ஒன்றாகி...

லட்சுமி பிரபா

விசாலம்
56/35, அய்யம் பெருமாள் தெரு,
இராயப்பேட்டை, சென்னை - 600 014

# உள்ளங்கள் ஒன்றாகி...

## 1

இருள் விலகத் தொடங்கியதும், வானம் சந்தோஷமாய் செந்தூர வண்ணத்தை வாரித் தீற்றிக் கொண்டது.

செந்தூர வானத்தின் அழகைக் கண்ட பரவசத்தில்... பறவையினங்கள் பூபாளம் பாடின.

செண்பக மலர்கள், பவள மல்லி, நித்ய மல்லி, அடுக்கு மல்லி, செவ்வரளி, செம்பருத்தி, சம்பங்கி, சாமந்தி, இரு வாட்சி, ஜாதி, முல்லை போன்ற பூஜைக்கேற்ற பூக்களை... தோட்டத்திலிருந்து பறித்துக் கொண்டு கூடத்திற்கு வந்தாள் நிவேதா.

ஸ்நானம் செய்த கூந்தலை நுனியில் முடிச்சிட்டிருந்தாள். மயிற்தோகை போன்று அடர்ந்து நீண்டு அவளது இடுப்பைத் தாண்டிப் பரவியிருந்த கூந்தலிலிருந்து கொட்டிய ஈரம்... அவளது இளம் பச்சை வண்ணப் பருத்திப் புடவையில் படிந்திருந்தது.

கூடத்துத் தூணோரம் சாய்ந்து அமர்ந்து கொண்டு பித்தளைக் கூடையை நிறைத்துக் கொண்டிருந்த பூக்களை... தரையில் கொட்டிக் கவிழ்த்தாள்.

நித்ய மல்லி, அடுக்கு மல்லி, செண்பகம், பவளமல்லி... என்று பூக்களை வகையாகப் பிரித்துக் கொண்டு... ஆசை யுடன் பார்வையால் வருடிக் கொடுத்தாள் நிவேதா.

மலர்களின் கலவையான நறுமணம் நாசியைத் துளைத்து... கூடத்தையே நிறைத்து விட்டிருந்தது.

அதிகாலையில் ஸ்நானம் செய்துவிட்டு தோட்டத்திற்குச் சென்று சில்லென்று மலர்ந்த புஷ்பங்களை... செடிகளுக்கு வலிக்காமல் மெல்லக் கிள்ளியெடுத்து... ஆழ மூச்செடுத்து சுகந்த நறுமணத்தை ரசித்தபடி பூக்களை நாரில் அழகாய் தொடுப்பதே ஒரு அலாதி சுகம் தான்!

அம்மா மரகதம் வாசல் தெளித்து கோலமிட்டு விட்டு குளியலறைக்குள் புகுந்து விட்டிருந்தாள். அம்மா வெளியே வந்ததும் துளசி மாடத்தை வலம் வந்து விட்டு நேராக பூஜையறைக்குத் தான் வருவாள்.

அம்மா வருவதற்குள் சுவாமி படங்களுக்குச் சாற்ற... பூச்சரங்களைத் தொடுத்துத் தயாராக வைத்து விடுவாள் நிவேதா.

மரகதத்தின் மனமறிந்து நடந்து கொள்வதாலோ... அதீத குடும்பப் பொறுப்புடன் இருப்பதாலோ... நிவேதாவின் மீது அம்மாவுக்கு அலாதிப் பிரியம் இருப்பது வாஸ்தவம் தான்!

படால் என்ற ஓசையுடன் குளியலறைக் கதவு திறந்தது. ''லொக்... லொக்'' என்று இருமியபடி வெளிப்பட்ட மரக தத்தைப் பார்த்ததும்... பாசத்தில் நிவேதாவின் மனம் பாகாய்க் கரைந்தது.

''சைனஸ் பிராப்ளம்... ஒத்தைத் தலைவலி... நைட் டெல்லாம் இருமல்னு அவஸ்தைப் பட்டுட்டு இருக்கியே



அம்மா? ஆஸ்பத்திரிக்குக் கூப்பிட்டாலும் வரமாட்டேன் கிறே?

''அட்லீஸ்ட்... வெந்நீர் வச்சாவது குளின்னு சொன்னா... நீ காதுலேயே போட்டுக்க மாட்டேன்கிறியேம்மா?''

ஜோடி மொட்டுக்களை எடுத்து நாரை லாவகமாக விரல் கள் சுழற்ற... அம்மாவை நிமிர்ந்து பார்த்துக் கேட்டாள் நிவேதா.

''விறகு வெட்டிக்குப் பிளவை வந்தா... கோடாலியால ஒரு போடு போடணும்னு சொல்வாங்க... காய்ச்சலோ தலை வலியோ... எப்படி வந்ததோ... அப்படியே போகட்டும்.

''உடம்புக்கு நோக்காடு வந்திட்டதுன்னு... தலையில துண்டை இறுக்கிக் கட்டிக்கிட்டு தைலத்தைத் தடவிக் கிட்டு... அக்கடான்னு படுத்துக் கிடக்க முடியுமா?

''நம்ம பிழைப்பு என்னாகிறது? படுத்தா பத்து நாளுக்கு எழுந்துக்க முடியாது... அந்தளவுக்கு படுத்துது... நாம்ப படுத்துக் கிடந்தோம்னா... யார் வந்து உதவப் போறாங்க?

''கேஸ் சிலிண்டர் விலை கிர்ருன்னு ஏறிப் போச்சே? நாம்ப இருக்கிற நிலைமைக்கு வெந்நீர் போட முடியுமா ராஜாத்தி? எல்லாம் சரியாயிடும். நீ எதைப் பத்தியும் விசனப்படாம பூவைத் தொடுத்து முடிச்சுட்டு... சீக்கிரமா தலைமுடியை சிக்கெடுத்து உலர வை.

''தலையில நீர் கோர்த்துட்டா... மண்டை வலி வந்து அவஸ்தைப் படணும்'' மகளின் உச்சந்தலையை மெல்ல வருடி விட்டு நடந்தாள் மரகதம்.

எதிர்த்த அறையில்... தூக்கக் கலக்கத்தில் ஏதோ உள றியபடி புரண்டு படுத்த தங்கை நீலா... பக்கத்தில் படுத் திருந்த லீலாவின் இடுப்பில் கையைப் போட்டாள்.

உலக நினைப்பின்றி இருவரும் ஆனந்தமாய் உறக்கத்தில் மூழ்கி இருந்தனர்.

நீலாவும் லீலாவும் இரட்டைப் பிறவிகள். நிவேதா, தங்கைகளை விட மூன்று வயது தான் மூத்தவள். அவளுக்கு இருந்த குடும்பப் பொறுப்பும் அக்கறையும், கவலையும்... இரட்டை சகோதரிகளுக்கு ஒரு நாளும் இருந்ததில்லை.

விதவிதமாக உடுத்த வேண்டும்... பஜாரில் விற்கும் அழகு சாதனப் பொருட்களை அள்ளி வாங்கி வைத்துக் கொண்டு அலங்கரித்துக் கொண்டு பதுமைகளாக வலம் வர வேண்டும்.

படிப்பில் இருவருமே சுமார் ரகம் தான்! தங்களது அழகையும் கவர்ச்சியையும் பார்த்துவிட்டு... கோடீஸ்வரக் குடும்பத்திலிருந்து பெண் கேட்டு வரத்தான் போகிறார்கள் என்று இரு சகோதரிகளும் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்தார்கள்.

அப்படியொரு நினைப்பு அவர்கள் மனதில் ஆணித்தரமாக வேரூன்றி இருந்ததால்... படிப்பின் மீது கவனம் செலுத்தாமல் அசட்டையாக இருந்தனர்.

ஆகாயத்தில் பறந்து கொண்டிருந்த இறக்கை முளைத்த அழகு தேவதைகள் தப்பித் தவறி... கஷ்ட ஜீவனம் நடத்தும் குடும்பத்தில் வந்து குதித்து விட்டவர்களைப் போன்று... அப்படி ஒரு அலட்சியமான போக்கு!

நிவேதாவுக்கு சுறுசுறுவென்று கோபம் எட்டிப் பார்த்தது.

தொடுத்துக் கொண்டிருந்த கதம்பச் சரத்தைச் சுருட்டி வைத்து விட்டு... வேகமாய் அந்த அறைக்குள் புகுந்தாள்.

''நீலா!... லீலா! எழுந்திருங்க... ப்ளஸ் டூ படிக்கிற பொண்ணுங்களுக்கு ஒரு அக்கறை வேணாம். தினமும் காலையில எந்திருச்சு படிச்சா தானே... நல்ல மார்க்ஸ் ஸ்கோர் பண்ண முடியும்?

''எழுந்திருங்க... ஃபேஸ் வாஷ் பண்ணிட்டு படிக்க ஆரம்பிங்க... பவள மல்லியை நூல்லே கோர்த்து வச்சுட்டு...



உங்களுக்கு நான் காபி போட்டு எடுத்திட்டு வரேன்'' இரு சகோதரிகளையும் தட்டி எழுப்பினாள் நிவேதா.

''ஆமா... பெரிய காபி...! வரக் காபியை குடிக்கிறதுக்குப் பேசாம சுடுதண்ணியைக் குடிச்சிக்கலாம். என்னிக்குத்தான் பூஸ்ட், ஹார்லிக்ஸ், போர்ன்விட்டான்னு... நாம்ப குடிக்கப் போறோமோ தெரியலை'' என்று நீலா சலிப்பாக முணுமுணுத்தது... அவளது காதுகளில் தெளிவாக விழுந்து விட்டது.

''எப்பவும் கனவுலகிலேயே சஞ்சரிக்கிறது தப்பும்மா நீலா! கார்லே போறவங்களைப் பார்த்து ஆசைப்படறதை விட... இந்த மட்டுமாவது காலாற நாம்ப நடக்க முடியுதேன்னு... திருப்தி பட்டுக்கணும்.

''அம்மா படிக்காத மனுஷி! குடும்பம் நட்டாத்துலே நிக்கும்போது எப்படித் திணறினாங்க? அவங்க கஷ்டப்பட்டு அல்லும் பகலுமா உழைச்சதாலே... குடும்பச் சக்கரம் சுத்திச்சு...

''நம்ம கஷ்டம் நம்மோட போகட்டும். பொண்ணுங்க நல்லாப் படிச்சு சுயமா சொந்தக் கால்லே நிக்கணும். நாளைக்கு கஷ்டம்னு வந்தா... என்ன பண்றதுன்னு தெரியாம... கையைப் பிசைஞ்சுகிட்டு நிக்கக் கூடாதுன்னு பாடுபடறதை... நீங்க ஏன் புரிஞ்சுக்க மாட்டேங்கிறீங்க?

''அழகு மட்டும் இருந்துட்டா போறாது. இந்தக் காலத்துல படிப்பு ரொம்பவும் முக்கியம்... அது இல்லாட்டா யாரும் திரும்பிக் கூடப் பார்க்க மாட்டாங்க...

''இப்போ கஷ்டப்பட்டுப் படிங்க... பெரிய வேலையில உட்கார்ந்துட்டா அந்தஸ்து தேடி வரும். நம்ம தகுதியை உயர்த்திக்கிட்டா... உலகமே உங்களைத் திரும்பிப் பார்க்கும். சரியா?'' நீலாவுக்கும், லீலாவுக்கும் சவுக்கடி பட்டாற் போல் 'சுரீர்' என்றிருந்தது.

இருவரும் கோரசாய் ''சரி அக்கா'' என்று கூறிவிட்டு முகம் கழுவ எழுந்து சென்றனர்.

சகோதரிகள் இருவருக்குமே நிவேதாவைக் கண்டாலே... ஒரு சிறு பயம் இருந்தது நிஜம்!

நிவேதா பொறுமைசாலி மட்டுமல்ல... கோபம் வந்து விட்டால் பொரிந்து தள்ளி விடுவாள். அது மட்டுமா? மனதில் உள்ளதை ஸ்கேன் செய்து தெரிந்து கொண்டாற் போல்... வெகு சுலபமாகப் புரிந்து கொண்டு விடுவதோடு... அதை அப்படியே போட்டு உடைத்துப் பேசி... விளாசித் தள்ளி விடுவாள்.

மரகதம் மெஸ் வைத்து நடத்திக் கொண்டிருந்தாள். அவளது அண்ணன் தணிகை வேல்... மனைவியை இழந்தவர், வீட்டோடு தங்கி வெளி வேலைகளைப் பொறுப்புடன் கவனித்துக் கொண்டார்.

சமையல் வேலைக்கும், காய்கறி நறுக்கி பாத்திரங்களைத் தேய்த்துக் கழுவுவதற்கும்... தாயம்மா, பூங்காவனம் என்ற இரு வயதான பெண்களை... வேலைக்கு வைத்துக் கொண்டிருந்தாள் மரகதம்.

தாயம்மாவும் பூங்காவனமும் குளித்துவிட்டுச் சுத்தமாக உடுத்திக் கொண்டு காலையில் சீக்கிரமே வந்து விடுவார்கள்.

நிவேதா கறாராகப் பேசுவதைக் கேட்டபடியே... டேக்ஸாவையும் இட்லிப் பானையையும் எடுத்துக் கொண்டு கிணற்றடிக்கு வந்த தாயம்மா... துளசி மாடத்தை வணங்கி விட்டு நிமிர்ந்த மரகதத்தை ஏறிட்டாள்.

''நம்ம நிவேதா பொண்ணு அச்சு அசலா உங்களையே உரிச்சுக்கிட்டு வந்திருக்கு அம்மா! ஜாடை, குணம்... கறாரா பேசற விதம்... பொறுப்பு, பொறுமை, வேலை செய்யறதிலே நேர்த்தின்னு... பெரியவங்களுக்கு மரியாதை கொடுக்கிறது...

''அந்தப் பொண்ணுக்கு எந்தக் குறையும் வராதும்மா... இன்னிக்கு வேலையில சோப் போகுதாமே?''



''ஆமா! தாயம்மா... அவ குணத்துக்கு ஒரு குறையும் வராது தான்'' பெருமிதத்துடன் சிரித்தாள் மரகதம்.

மிகப் பெரிய ஆபத்து... அவளுக்காக வழி மேல் விழி வைத்துக் காத்துக் கொண்டிருக்கிறது என்பதை மரகதம் எவ்விதம் அறிவாள்?

## 2

கதம்பச் சரத்தை ஸ்வாமி படங்களுக்கும், நூலில் கோர்த்த பவள மல்லிச் சரத்தை அம்பாள் படத்திற்கும் சாற்றி விட்டு நிமிர்ந்தாள் நிவேதா.

அவளது நெற்றியில் வியர்வை முத்துக்கள் அரும்பியிருந்தன. நீள் வட்ட முகம், நீண்ட கூந்தல், கனிவைத் தேக்கியிருக்கும் கண்கள், கூர் மூக்கு, சிரித்தால் குழி விழும் கன்னங்கள், கொடி போன்ற உடலமைப்பு... என்று ஒப்பனை சிறிதும் இல்லாமலேயே ஒப்பற்ற பேரழகியாய் மிளிர்ந்தாள் நிவேதா.

அன்னை அபிராமியின் வண்ணப் படத்திற்கு சூட்டப்பட்ட பவள மல்லி மாலை மணத்துடன் சிரித்தது.

கண்களை மூடி மனமுருக சேவித்த மரகதம்... பூஜை அறையில் ஒரு ஓரமாக வைக்கப்பட்டிருந்த வயலினைப் பார்த்ததும்... முகம் வாடிப் போனவளாய் கற்பூரத்தை ஏற்றினாள்.

மரகதத்தின் கணவர் சாந்தமூர்த்தி ஆரம்ப காலத்தில் மனைவி, குழந்தைகள் மீது உயிரையே வைத்திருந்தார்.

நில புலன்களை கவனித்துக் கொண்டு உரக்கடையையும் ஒழுங்காகத் தான் நடத்தி வந்தார்.

உர மூட்டைகளை கொள் முதல் செய்வதற்காக அடிக்கடி அவர் தேனி நகரத்திலிருந்த சந்தைக்குச் சென்று வந்து கொண்டிருந்தார். படுபாவி பொன்னம்பலத்தின் அறிமுகம் கிடைத்தது.

வியாபார நிமித்தம் அவர் பொன்னம்பலத்தை அடிக்கடி சந்தித்ததால்... அவர்களிடையே நட்பு மலர்ந்தது.

நல்ல நண்பனைத் தேர்ந்தெடுக்கும்போது மிகவும் கவனமாக இருக்க வேண்டும். இல்லையெனில் நம் வாழ்க்கையே தடம் மாறிப் போய் விடும் என்பதற்கு சாந்தமூர்த்தியை நாம் உதாரணமாகக் காட்டலாம்.

கெட்ட சகவாசத்தால் மெல்ல மெல்ல 'குடி'க்கு அடிமை ஆனார் சாந்தமூர்த்தி.

அந்த 'குடி'ப் பழக்கம் நாளடைவில் செல்வச் செழிப்புடன் மகிழ்ச்சி தாண்டவமாடிய அவரது 'குடி'யையே கெடுத்து விட்டது.

பொறுப்பை உதறி விட்டுக் குடித்துக் கொண்டு திரிந்ததால்... உரக்கடையை இழுத்து மூட வேண்டிய நிலைமை உருவானது.

உரக்கடையை அடமானம் வைத்து விட்டு... பின்பு அதை மீட்க முடியாமல் மொத்தமாக விற்று விட்டு... நில புலன்களிலும் மனிதர் கையை வைத்து விட்டார்.

அவர் இப்படி தலைகீழாக மாறிப் போவார் என்று மனைவி மரகதம் கனவில் கூட கருதவில்லை.

'மூன்று பெண்களைப் பெற்று வைத்திருக்கிறோமே? அவர்களது படிப்பு, வருங்காலம் என்ன ஆவது?

'குடும்பத்தை எப்படி நடத்திச் செல்வது?' என்று எந்தக் கவலையும் இல்லாமல்... பொறுப்பு, அக்கறை, பாசம், கடமை உணர்ச்சி, பண்பு, வெட்கம், மானம்... என்று அத்தனையும் துணி கொண்டு துடைத்து விட்ட தினுசில்... 'தான் தோன்றித் தனமாக' நடந்து கொண்டு குடும்பத்தை நட்டாற்றில் நிறுத்தினார் சாந்தமூர்த்தி.

'சதா கவலைப்பட்டு சுருண்டு படுத்து கண்ணீர் வடிப்பதால் ஒரு பிரயோஜனமும் இல்லை...



'இனி குடும்பத்தை நாம் தான் தாங்கியாக வேண்டும்' என்ற வைராக்கியத்துடன் துணிவைத் திரட்டிக் கொண்டு 'தேனி'யை விட்டு குடி பெயர்ந்து 'வீரபாண்டி'க்கு மூன்று மகள்களையும் அழைத்து வந்து விட்டாள் மரகதம்.

நல்ல காலமாக 'வீரபாண்டி'யில்... அவளது தாய் வீட்டு சீதனமாக வந்த பரம்பரை வீடு அவர்களுக்கு நிழல் தந்து விட்டிருந்தது.

மாதா மாதம், வாடகை கட்ட வேண்டுமே? என்று பயந்து கையைப் பிசையத் தேவையில்லை. அண்டிக் கொள்ள வீடு மட்டுமாவது மிஞ்சியதே என்ற சிறு நிம்மதி ஏற்பட்டது நிஜம்!

பக்கத்து வீட்டிலிருந்த அண்ணன் தணிகை வேலன், தங்கையின் குடும்பத்தைத் தூணாக நின்று தாங்கத் துடித்துக் கொண்டுதான் இருந்தார்.

ஒட்டு மொத்த பாரத்தை அவர் மீது சுமத்தி விடுவதற்கு... மரகதம் தயாராக இல்லை. உழைத்துப் பிழைக்க முடிவு செய்தாள். அப்போது நிவேதாவிற்கு பன்னிரண்டு வயதிருக்கும்.

அம்மா மரகதத்தின் பரம்பரை, சங்கீதத்தையே உபாசனை செய்தவர்கள்.

வயலினைக் கையிலெடுத்து அம்மா வாசிக்க ஆரம்பித்து விட்டால் ராக தேவதைகள் அவளுக்கு அடிமை சாசனம் எழுதிக் கொடுக்க நேரும்.

அவ்வளவு அற்புதமான ஞானம்! சிறு வயதிலிருந்தே கேட்டுக் கேட்டு... இசையிலேயே ஊறிய சாரீரத்தின் இனிமை நிவேதாவுக்கு இருந்தது.

சங்கீதம் கற்றுக் கொடுத்து சம்பாதித்து வாழ்வில் முன்னேறலாம் என்று மரகதம் முடிவெடுத்தது... நிவேதாவிற்கு நன்றாகவே நினைவிருக்கிறது.

ஆனால் அந்த வயலின் மகிமை எவர் கண்ணிலும் தென்படாமல் போனதும், அவள் அதற்கு முழுக்குப் போட்டு

விட்டு 'சமையலை' தேர்ந்தெடுத்ததும் அதை விடப் பெரிய உண்மை.

'வீரபாண்டி'யில் அவளது சங்கீதத்தை மதிக்காதவர்கள் அவளது சமையல் ஞானத்தைப் புகழ்ந்தார்கள்.

குமுளி, கம்பம் செல்லும் முக்கியமான நெடுஞ்சாலையில் 'அன்ன பூர்ணா மெஸ்ஸுக்குச் செல்லும் வழி' என்று அம்புக் குறியிட்ட பலகையை... மாட்டி வைத்தார் தணிகை வேலன்.

பஸ் நிலையத்திற்கு பின்புறம் அவர்களது வீடு அமைந்திருந்ததாலும், மஞ்சள் பூசிய முகத்தில் பளிச்சென்று குங்குமம் துலங்க சுத்தமான சுங்கடி சேலையை உடுத்திக் கொண்டு தன் நளபாகத் திறமையைக் காட்டினாள் மரகதம்.

சுத்தம், சுவை, மனம், தரம் இருந்ததால்.... அவர்களது மெஸ் பிரசித்தமாயிற்று. நல்ல வியாபாரம் தான்! பணம் கணிசமாகச் சேர்ந்தது.

மூன்று பெண்களை வளர்த்துப் படிக்க வைத்து குடும்பத்தை ஓட்ட ஒரு வழி பிறந்து விட்டது தான்!

ஆனால் மரகதம்...? மனம் நொந்து போனாள். கணவர் சாந்தமூர்த்தி தடம் மாறிப் போனதால்... வயலினைப் பிடிக்க வேண்டிய அவள் கரங்கள், இட்லி சுட்டன. தோசை வார்த்தன.

நிவேதா, அம்மாவின் கஷ்ட நஷ்டத்தைப் புரிந்து கொண்டவள். மரகதத்தின் முகம் இலேசாக வாடினால் போதும்!

அவள் மாவரைத்துக் கொண்டிருக்கும்போதே... தனது மதுரமான குரலில் அபிராமி அந்தாதியைப் பாடிக் காட்டுவாள்.

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மாலை நன்கு மணிக்கு அம்மாவும் மகளும் பூஜையறையில் அமர்ந்து கொள்வார்கள்.

பயபக்தியுடன் முகம் அலம்பி நெற்றியில் மீனாட்சி குங்குமத்தை இட்டுக் கொண்டு வந்து வயலினைக் கையில் எடுப்பாள் மரகதம்.



அம்மாவிடம் சங்கீதப் பயிற்சி ஆரம்பமாகும். மரகதத்தின் ஆத்ம திருப்திக்காக அமைந்த ஒரே சிஷ்யை அவள் தான்!

தங்கைகள் லீலாவுக்கும் நீலாவுக்கும் மருந்துக்குக் கூட சங்கீத ஞானம் அமையவில்லை.

நிவேதா சங்கீதத்தில் மட்டுமல்ல... படிப்பிலும் கெட்டிக்காரி தான்!

கண்ணும் கருத்துமாகப் படித்ததால்... மெரிட்டில் தேறி என்ஜினீயரிங் கல்லூரியில் சுலபமாய் நுழைந்து விட்டிருந்தாள்.

கல்லூரிக்கும் தினமும் பேருந்தில் தான் சென்று வந்தாள். கல்லூரியை விட்டு வரும் வழியில்... கணினி பயிற்சி வகுப்புக்கும் சென்று கற்று... சில கோர்ஸ்களையும் முடித்து வைத்திருந்தாள்.

'நன்கு படித்து நல்ல வேலையில் அமர வேண்டும். அம்மா மரகதத்தின் தோள்களில் அழுத்திக் கொண்டிருக்கும் குடும்ப பாரத்தை இறக்கி வைக்க வேண்டும்.

'வயோதிக காலத்தில் கோவில் குளத்தைச் சுற்றிக் கொண்டு அவள் நிம்மதியாக இருக்க வேண்டும்.

'தங்கைகள் இருவரையும் நன்கு படிக்க வைத்து கரை யேற்ற வேண்டும்.

'தூணாக நின்று குடும்பத்தைத் தூக்கி நிறுத்த வேண்டும்.' இதுதான் நிவேதாவின் இலட்சியம், கனவு, குறிக்கோள், நோக்கம்...!

கனவு கண்டதோடு நிற்கவில்லை. வெறியோடு படித்தாள். முதல் வகுப்பில் தேறி விட்டாள்.

பத்திரிகையில் விளம்பரம் பார்த்து விண்ணப்பம் செய்த மிகப் பெரிய நிறுவனத்தில் நேர்முகத் தேர்வு வந்ததும்... நிவேதாவுக்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை.

அவள் கலந்து கொண்ட முதல் நேர்முகத் தேர்விலேயே தேர்வு செய்யப்படுவாள் என்று சத்தியமாய்... அவள் எதிர் பார்க்கவில்லை.

இதோ இன்றைக்குத் தான் வேலையில் சேரப் போகிறாள் இனம் புரியாத பரபரப்பு அதிகாலை முதல் தொற்றிக் கொண் டிருந்தது.

அம்மா மரகதம் கற்பூர ஆரததியை வயலினுக்கும் காட்டினாள்.

அப்போது தான் ஞாபகம் வந்தவளாக... சட்டென்று சிறிது உதிரிப் பூக்களை அள்ளி வயலின் மீது தூவி விட்டு தொட்டு வணங்கினாள் நிவேதா.

''அம்மா! போதும்மா... நீ இத்தனை வருஷமா இந்தக் குடும்பத்துக்காக... ஓடாகத் தேய்ஞ்சு உழைச்சது போதும்.

''மெஸ்ஸை நிறுத்திடலாம். மிகப் பெரிய நிறுவனத்துல நல்ல வேலை கிடைச்சிருக்கு... கை நிறைய சம்பளம் வரும்.

''தகுதியின் அடிப்படையில் பதவி உயர்வும், சம்பளமும் அதிகரிக்க வாய்ப்பிருக்கு... நமக்கு இது தாராளம் தான் அம்மா! இனிமே இந்தக் குடும்பப் பொறுப்பை என்கிட்டே ஒப்படைச்சுட்டு நீ நிம்மதியா இரேன்.''

ஆரத்தியைத் தொட்டு கண்களில் ஒற்றிக் கொண்டே கெஞ்சினாள் நிவேதா.

முகத்தில் பெருமிதம் பொங்கி வழிய மகளை ஏறிட்டாள் மரகதம்.

''உன்னை நினைச்சா எனக்கு ரொம்பப் பெருமையா இருக்கு... லீலாவும் நீலாவும் உன்னை மாதிரியே குடும்பப் பொறுப்பை உணர்ந்து அக்கறை எடுத்துப் படிச்சாங்கன்னா... முன்னுக்கு வந்துடுவாங்க. அதுதான் என் வேண்டுதல்!

''மூத்தவ நீ... உன்னோட வளர்ச்சியைப் பார்க்கிறாங்க இல்ல? கண்டிப்பா அவங்களுக்குள்ளேயும் மனமாற்றம் வந்து படிச்சிடுவாங்கன்னு நம்பறேன்.



''மெஸ்ஸை அவ்வளவு சுலபத்துல நிறுத்திட முடியாது ராஜாத்தி!

''இந்த மெஸ்ஸை நான் கொஞ்ச காலத்துக்கு நடத்தியே ஆகணும்.

''ஏன்னா... கல்லூரியில படிக்கிற பசங்க... வேலை பார்க்கிற பசங்க... பக்கத்துத் தெருவில அறை எடுத்துத் தங்கி இருக் காங்களே, அவங்க நம்ம மெஸ்ஸுக்கு வர்ற வழக்கமான வாடிக்கையாளர்கள்.

''மாசம் பொறந்தா டாண்ணு பணத்தைக் கட்டிடுவாங்க... நம்ம மெஸ்ஸை நம்பி சாப்பிட வர்றாங்க பாவம்!

''உங்க சமையலைச் சாப்பிடும்போது... எங்கம்மா கையால சாப்பிட்ட திருப்தி ஏற்படுதும்மா'ன்னு அடிக்கடி என்கிட்ட அந்தப் பசங்க சொல்றாங்களே? அப்போ... எவ்ளோ ஆத்ம திருப்தியா இருக்கு தெரியுமா?

''உழைக்கிறோம்... அதுக்குத் தகுந்த வருமானம் வருது அதை விட்டுத் தள்ளு... அந்தப் பசங்க ரசிச்சு ருசிச்சு சாப்பிடறப்போ... எனக்கு மனசு நிறைஞ்சு போகுது.

''அதுவும் அம்மா ஸ்தானத்துல வச்சு மதிச்சு நடந்துக்கிற பசங்க... கண்ணியமான பசங்க... திடுதிப்புனு மெஸ்ஸை எப்படி நிறுத்தறது? நீயே சொல்லு?

''உன் தங்கச்சிங்க இறக்கை கட்டிப் பறந்துடலாம்னு கற்பனையில மிதந்துட்டிருக்காங்களே? அவங்க முன்னாடி இன்னும் சில வருடங்களுக்கு நான் மெஸ்ஸை நடத்தித்தான் ஆகணும்.

''இந்த வயசிலேயும் சோம்பி உட்காராம... 'தேனீ' மாதிரி சுறுசுறுப்பா அம்மாக்காரி உழைச்சுட்டிருக்காளே? நாம்ப நம்ப கடமையை ஒழுங்கா பண்ணணுமேன்னு... அவங் களுக்கு 'சுருக்'குனு படணும்!''

நிறுத்தி நிதானமா தெளிவான காரணங்களை எடுத்து வைத்ததும்... அழகிய விழிகளில் நீர் கோர்க்கப் புரிந்து கொண்ட தினுசில் புன்முறுவல் பூத்தாள் நிவேதா.

அம்மா ஒரு விஷயத்தில் முடிவு செய்து முற்றுப்புள்ளி வைத்து விட்டால்... அது அவ்வளவு தான்! என்னதான் தலை கீழாக நின்று மன்றாடிப் பார்த்தாலும்... அவள் மனம் இரங்காது.

"இன்னிக்கு தை வெள்ளிக்கிழமை... சாயந்தரம் சீக்கிரமா வந்துடு... அம்மன் கோவில்லே மாவிளக்குப் போடணும்.

"வேலைக்குப் போற இடத்திலேயும் நீ நல்ல பேர் எடுத் துடுவே... எனக்குத் தெரியும்! உன் குணத்துக்கு ஏத்தபடி படிச்ச கண்ணியமான நேர்மையான இளைஞன் வாய்க்கணும்.

"ஒரு நல்ல கணவன் அமைஞ்சுட்டா... வாழ்க்கையில எந்த ஏற்றத் தாழ்வு வந்தாலும்... ஒரு பொண்ணு சுலபமா சமாளிச்சுடலாம்.

"அது சரியா அமையலேன்னா... காலத்துக்கும் என்னை மாதிரி போராடியே தேய்ஞ்சு போக வேண்டியது தான்" நா தழுதழுக்கப் பேசிவிட்டு விபூதியைத் தொட்டு நெற்றியில் கீற்றாக இட்டுக் கொண்டு பூஜையறையை விட்டு வெளி யேறினாள் மரகதம்.

'கண்ணியமான நேர்மையான இளைஞன்' என்று அம்மா கூறியதும்... நிவேதாவின் மனக் கண்ணில் சட்டென்று வந்து நின்றான் காந்தன்.

விதி... கூடிய விரைவில், அவளது வாழ்வில் சூறாவளியாய் வீசி அவளை அலைக் கழிக்க தருணம் பார்த்துக் கொண்டிருந்தது.

## 3

சுழல் நாற்காலியில் அமர்ந்து கோப்பினை புரட்டிக் கொண்டிருந்த வசீகரனின் மனம்... வேலையில் ஒட்ட மறுத்து முரண்டியது.



சண்டிக் குதிரையாய் தறி கெட்டுத் தாவி ஓடிய மனதை இழுத்துப் பிடித்துக் கட்டுக்குள் வைத்து விட... அவன் என்றுமே ஆர்வப்பட்டதில்லை.

பிரபல தொழிலதிபர் வேதாசலத்தின் ஏக போக வாரிசு தான் வசீகரன்.

கம்பம், கம்பம் மெட்டு, குமுளி, தேக்கடி, மூணாறு போன்ற பகுதிகளிலிருந்த ஏகப்பட்ட எஸ்டேட்டுகளுக்குச் சொந்தக்காரர் வேதாசலம்.

ஏலக்காய், தேயிலை, கிராம்பு, ரப்பர், காபி, திராட்சை தோட்டங்களிலிருந்து பணம் கொழித்துக் கொண்டிருந்தது.

இவை போதாதென்று தேனி, பெரிய குளம், திண்டுக்கல் வட்டாரங்களில் ஏகப்பட்ட நிறுவனங்கள், தொழிற்சாலை கள், பல் பொருள் அங்காடிகள் ஆஸ்பத்திரிகள் பெரிய உண வகங்கள் முதலியன வேதாசலத்திற்கு சொந்தமாயிருந்தன.

பணத்திற்கு மேல் பணம் குவிந்து கொண்டே இருந்தது. 'கோடீஸ்வரர் வேதாசலத்தின் ஒரே மகன்' என்ற மமதை வசீகரனுக்கு நிறையவே இருந்தது.

பணத்திலேயே புரண்டு வளர்ந்த விதம், வசீகரனை தடம் புரள வைத்து விட்டது என்பது நிஜம்!

இந்த உலகத்தில் எதையும் பணத்தால் சாதித்து விட முடியும் என்ற எண்ணம்... அவன் மனதில் விதை போல் விழுந்து விருட்சமாக வளர்ந்து விட்டிருந்தது.

வசீகரன் ஒரு பசையுள்ள பார்ட்டி என்பதால்... 'நட்பு' என்ற போர்வையைப் போர்த்திக் கொண்டு நிறைய இளைஞர்கள் போட்டி போட்டுக் கொண்டு... அவனுடன் கோந்துபோல் ஒட்டிக் கிடந்தனர்.

எரிகின்ற நெருப்பில் நெய்யை வார்த்தாற் போன்று... கெட்ட சகவாசங்களும், துர் போதனைகளும் சேர்ந்து வரிந்து கட்டிக் கொண்டு... வசீகரனைத் தடம் புரள வைத்ததோடு

அதல பாதாளத்தில் தள்ள தருணம் பார்த்துக் கொண் டிருந்தன.

ஆனால்... வசீகரனுடன் மிகவும் நெருங்கிப் பழகியவர் களுக்கு மட்டுமே அவனது அந்தரங்க சமாச்சாரங்கள் பற்றித் தெரியும்.

தனது அந்தரங்க லீலைகள் அம்பலமாகி விடக் கூடாது என்பதில் சர்வ ஜாக்கிரதையாய் செயல்பட்டான் வசீகரன்.

சமுதாயத்தைப் பொறுத்த மட்டில்... அவன் வெளிநாட் டில் எம்.பி.ஏ. படித்து முடித்து தாயகம் திரும்பி... பரம்பரை சொத்தைக் கட்டிக் காத்து புதிய கணினி நிறுவனங்களைத் தொடங்கி, தொழிலில் பன் மடங்கு லாபத்தைப் பெருக்கி உத்வேகத்துடன் உயர்ந்து கொண்டிருக்கும் இளைஞன்!

வீட்டைப் பொறுத்த மட்டில்... வம்சத்தை விளங்க வைக்க வந்த ஒரே பிள்ளை! அதீத செல்லம் கொடுத்து வளர்த்த போதும் அவன் கெட்டுப் போகவில்லை.

பரம்பரை சொத்தை அழிக்காமல் பன் மடங்காக்கிக் கொண்டிருக்கும் புத்திசாலி இளைஞன்!

திறமையும், அழகும், குணமும் ஒருங்கே அமைந்த மகனைப் பெற்றதில்... பெற்றவர்கள் பெருமிதப் பட்டுக் கொண்டிருந்தார்கள்.

அந்த பசுத்தோல் போர்த்திய புலியின் கண்களில் ஒரு அழகிய புள்ளி மான் பட்டு விட்டது.

நேர்முகத் தேர்வுக்கு வந்தவளை நேருக்கு நேர் பார்த்த துமே... அந்த அசரடிக்கும் அழகில் மதி மயங்கி ஸ்தம்பித்து விட்டிருந்தான்.

அவன் விட்டெறியும் கட்டுக்கட்டான கரன்ஸி நோட்டு களுக்காக... நிறைய கட்டழகிகள் அவனைத் தேடி வருவ துண்டு.

பெரிய பணக்காரன் என்பதால் இதுவரை அவன் நினைத் ததை எல்லாம் சாதிக்க முடிந்திருக்கிறது.



ஆசைப்பட்டதை எல்லாம் அடைந்திருக்கிறான்.

ஆசைப்பட்ட பொருள் எளிதில் அதுவும் சுலபத்தில் கிடைத்து விட்டால்... அதற்கு மதிப்பே இல்லாமல் போய் விடும். இது உலக நியதி!

வசீகரனுக்கும் அப்படித்தான் இருந்தது.

மனதில் சலிப்பு தட்டி விட்டிருந்தது.

இனம் புரியாத ஏக்கமும் தவிப்பும் அவனை ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்தன.

நேர்முகத் தேர்வில் அப்படியொரு அழகியைச் சந்தித்த பின்... மனம் எதிலும் நிலை கொள்ளாமல் குரங்காட்டம் ஆடியது.

அன்றிலிருந்து இன்றுவரை தவியாய் தவித்துக் கொண் டிருந்தான்.

இன்று தான் வேலையில் வந்து சேர்ந்தாள்.

அவள் இன்று வரப் போவதைத் தெரிந்து கொண்டு அலுவலகத்திற்கு வெகு சீக்கிரமாகவே வந்து விட்டிருந்தான் வசீகரன்.

வேலை நியமன உத்தரவைக் கையில் ஏந்திக் கொண்டு சிறு பதற்றம் படர்ந்த முகத்துடன் சரியான நேரத்திற்கு வந்தது அந்த அழகு நிலா.

தனது கண்ணாடி கேபினுக்குள் அமர்ந்தபடி அவளையே இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான் வசீகரன்.

மேனேஜரின் கேபினுக்குள் புகுந்து வணக்கம் தெரிவித்து விட்டு பவ்யமாய் வேலை நியமன உத்தரவை அவள் நீட்டுவதை... இங்கிருந்தே பார்க்க முடிந்தது.

மலர்ந்த முகத்துடன் அவளை ஏறிட்டு இரண்டொரு வார்த்தைகள் பேசி விட்டு சட்டென்று எழுந்து வந்தார் மேனேஜர்.

அவரை பவ்யமாய் பின் தொடர்ந்து வந்தவளைக் கண்டு வசீகரனின் இதயம் மகிழ்ச்சியில் எம்பிக் குதித்தது.

''நான் உள்ளே வரலாமா? வணக்கம் சார்'' என்றபடியே உள்ளே நுழைந்த மேனேஜர் முறுவலித்தார்.

''வணக்கம்!''

''சார்! இந்தப் பொண்ணு, 'சிஸ்டம் என்ஜினியரா' புதுசா இன்னிக்கு ஜாயின் பண்ண வந்திருக்காங்க.''

''வ... வணக்கம் சார்'' வீணையின் தந்தியை மிக மிருதுவாக மீட்டி விட்டது போல்... அவளது குரல் இனித்தது.

''வணக்கம்! மிஸ். அற்புதா...''

''சாரி சார்! என் பேரு நிவேதா'' அவசரமாய் குறுக்கிட்டாள்.

''ஓ...!'' நெற்றிப் பொட்டில் பேனாவைக் கொண்டு செல்லமாய்த் தட்டிக் கொண்டு குறும்பும் மிதக்கும் விழிகளால் ஏறிட்டான்.

''ஒண்ணும் தப்பில்லை... அற்புதான்னு பெயர் வச்சு இருந்தாலும்... உங்களுக்கு அது பொருத்தமாகத்தான் இருந்திருக்கும் இல்லையா?''

நிவேதாவின் அழகு முகம் சட்டென்று வாடி இருண்டது. சங்கோஜமாய் பார்வையைத் தழைத்துக் கொண்டாள்.

''எம்.டி. எப்பவும் இப்படித்தான் கலகலப்பா உரிமையா தொழிலாளர்கள் கிட்டே பேசுவாரு'' என்று மேனேஜர் பரிந்து கொண்டு வந்தார்.

''ப... பரவாயில்லை சார்!'' என்றபடியே சங்கடமாய் மீண்டும் வசீகரனின் மீது விழிகளைப் பதித்தாள்.

''மிஸ். நிவேதா! நேர்முகத் தேர்வில் நீங்க அளித்த பதில்கள் எங்களுக்கு ரொம்பவே திருப்திகரமாக இருந்தது.

''அதே மாதிரி வேலை விஷயத்திலும் திருப்தி ஏற்படற மாதிரி நீங்க நடந்துக்கணும்.



''எல்லா அலுவலகங்களிலும் முன் அனுபவம் எதிர்பார்ப்பாங்க. ஆனா... நான் திறமை இருக்குன்னு தெரிஞ்சா, துணிஞ்சு வேலையில உட்கார வச்சுடுவேன்.

''திறமை, ஊக்கம், உழைப்பு இது மூணும் இருந்துட்டா... பதவி உயர்வு கிடைச்சு மளமளன்னு முன்னுக்கு வந்துடலாம். சரியா? வாழ்த்துக்கள்'' என்றபடி விழிகளால் சிரித்தான் வசீகரன்.

''மிக்க நன்றி சார்.''

''மிஸ். நிவேதா! இன்னிக்கு இந்த நிறுவனம் முதலிடத்தில் இருக்குன்னா... அதுக்குக் காரணமே எம்.டி. சார் தான். அவரோட உழைப்பும் உத்வேகமுமே இந்தளவுக்கு உசத்தி இருக்கு'' மேனேஜர் பாராட்டுப் பத்திரம் வாசித்தபடியே கேபினை விட்டு வெளியேறினார்.

மீண்டும் ஒரு முறை கைகளைக் குவித்து வணங்கி விட்டு, அவரைப் பின் தொடர்ந்தாள் நிவேதா.

ஒரு நல்ல நிறுவனத்தில் வந்து வேலைக்கு அமர்ந்து விட்டோம் என்ற திருப்தி... நிவேதாவின் மனதைப் பூரணமாக ஆக்கிரமித்தது.

''வாங்க மிஸ். நிவேதா! இதோ... இவர் தான் காந்தன்.

''இந்த அலுவலகத்துல பிராஜெக்ட் அனாலிஸ்ட்! ரொம்ப ரொம்ப திறமைசாலி...

''இவர் கிட்ட உதவியாளரா... ஐ மீன் சிஸ்டம் என்ஜினீயரா நீங்க பணியாற்றப் போறீங்க...

''பணி நிமித்தமா உங்களுக்கு ஏற்படற அத்தனை சந்தேகங்களையும் இவரைக் கேட்டுத் தெளிவு பண்ணிக்கலாம்.''

ஆச்சரியம், இனிய அதிர்ச்சி, சந்தோஷம்... எல்லாமுமாகச் சேர்ந்து அவளது வாயைக் கட்டிப் போட்டு விட்டன.

அகன்ற விழிகள் மேலும் விரிய... மௌனமாகக் கைகளைக் கூப்பினாள் நிவேதா.

''இவங்க மிஸ். நிவேதா! சிஸ்டம் என்ஜினீயர்... உங்க உதவியாளரா பணியாற்ற வந்திருக்காங்க'' பரஸ்பரம் அறி முகப் படலத்தை முடித்து விட்ட திருப்தியில்... தலையாட்டி விடை பெற்றார் மேனேஜர்.

''வாழ்த்துக்கள் நிவேதா! வாங்க... இதோ இது தான் உங்க சீட்! நீங்க எனக்கு உதவியாளரா வரப் போறீங்கன்னு... நான் நினைச்சுக்கூடப் பார்க்கலை. உட்காருங்க'' உபசரித்துவிட்டு கணினி திரையில் பார்வையைப் பதித்துக் கொண்டான் காந்தன்.

''நன்றி சார்! நீங்களே எனக்கு சீனியரா வாய்ப்பீங்கன்னு நானும் நினைச்சே பார்க்கலை.

''உங்ககிட்டே பட்ட கடனை எப்போ தீர்க்கப் போறேன்னு... கவலையோட இருந்தேன். இந்தாங்க... இதை நீங்க மறுக்காம வாங்கிக்கணும்.

''அப்போதான் என் மனசுக்குத் திருப்தியா இருக்கும்'' என்று கூறியபடியே கைப்பையில் இருந்த பத்து ரூபாய்த் தாளை எடுத்து நீட்டினாள் நிவேதா.

''ஊகூம்! இதை நான் வாங்கிக்க மாட்டேன். வேணும்னா உங்க திருப்திக்கு நம்ம கேண்டீன்லே... மதியத்துக்கு ஏதாச்சும் வாங்கிக் குடுங்களேன்.

''அதை உங்க ட்ரீட்டா நினைச்சு நான் சந்தோஷப் பட்டுக்கிறேன்.

''என்கிட்டே பட்ட கடன் தீர்ந்த மாதிரியும் இருக்கும். நீங்களும் இனிமே கடன்காரி கிடையாது. இல்லையா?''

சிரிப்பை மென்றபடியே முகத்தைப் பரிதாபமாக வைத்துக் கொண்டு காந்தன் பேசியதும்... அவளையும் அறியாமல் சிரிப்பு பொத்துக் கொண்டு வந்தது.

வெள்ளிக் காசுகளை இறைத்து விட்டாற் போன்று இருவரும் ஒரு சேர நகைத்த காட்சியை... கண்ணாடி கேபி



னுக்குள் இருந்து நோட்டம் விட்ட வசீகரனுக்கு... வயிறு பொறாமையில் பொசுங்கி கபகபவென்று எரிந்தது.

## 4

தனது இருக்கையில் அமரும் முன் மேசையைத் தொட்டு கண்களில் ஒற்றிக் கொண்டு, கணினியை நிவேதா உயிர்ப்பித்த விதம்... காந்தனின் மனதைத் தொட்டது.

பிராஜெக்ட் சம்பந்தப்பட்ட பணியின் விவரங்களை மிகத் தெளிவாகப் புரியும் விதத்தில்... பொறுமையாக காந்தன் விளக்கிக் கூறிய விதத்தை... நிவேதா வெகுவாய் ரசித்தாள்.

கோப்பினை புரட்டிப் பார்த்து வேலையில் கண்ணும் கருத்துமாக ஆர்வத்தோடு செயல்பட்டாள் நிவேதா.

அவளை அவ்வப்போது ஊன்றி கவனித்த காந்தனின் முகமெங்கும் திருப்தி ரேகைகள் படர்ந்தன.

''வெரிகுட் நிவேதா! சின்னதா ஒரு கோடு போட்டா போதும் போலிருக்கே? நீங்க பெரிய ரோடு போட்டுருவீங்க போல... சரி! இந்தாங்க... இதுலே இருக்கிற விவரங்களை கவனமா பார்த்துட்டு... நீங்க ஒரு புராஜெக்ட் தயார் பண் ணுங்க... பார்க்கலாம்.

''இது நீங்க முதல் முறையா பண்ணப் போற புராஜெக்ட். நிறைய நேரம் நீங்க எடுத்துக்கலாம். ஒண்ணும் அவசர மில்லை. நிதானமா செயல்படுங்க. ஒரு மாதம் கூட நீங்க எடுத்துக்கலாம்.

''உங்களை நீங்க வெளிப்படுத்துவதற்கான நல்ல சந்தர்ப்பம் இது! புராஜெக்டை முடிச்சதும் கோப்பை என் கிட்டே காட்டுங்க.

''அது சம்பந்தமா நாம்ப விவாதிக்கணும். அதுக்கு அப் புறமா நான் தயார் செஞ்சு வச்சிருக்கிற புராஜெக்ட் திட்டங்

களையும் சேர்த்து... நாம்ப எம்.டி. கிட்டே காட்டணும். சரியா நிவேதா?''

வேலையில் அவனுக்கு இருந்த அக்கறை, ஈடுபாடு, சிரத்தை... இவையெல்லாம் நிவேதாவின் மனதை அசைத்துப் பார்த்தன.

நிமிடத்திற்கு நிமிடம் அவன் மீது இருந்த மதிப்பும் மரியாதையும் உயர்ந்து கொண்டே போனது.

தேநீர் இடைவேளையின் போது அலுவலகப் பணியாள் இரு கண்ணாடி தம்ளர்களில் சூடான தேநீரைக் கொண்டு வந்து வைத்து விட்டு நகர்ந்ததும்... காந்தன் சுழல் நாற் காலியைப் பக்கவாட்டில் திருப்பிக் கொண்டு இவளை ஏறிட்டான்.

''டீ ஆறிடப் போகுது... குடிச்சுட்டுப் பணியைத் தொடர்ந் தால்... இன்னும் கொஞ்சம் சுறுசுறுப்பா வேலை முடியும் இல்லியா?''

அவளும் மௌனமாகப் பார்வையைத் தழைத்தபடி தேநீரைப் பருகினாள்.

அவளது மனமோ பழைய சம்பவத்தை அசை போட்டது.

கடந்த வருடம் மாமா தணிகைவேலனுக்கு திடீரென வாந்தி பேதி ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டார்.

மூன்று நாட்கள் அவர் மருத்துவமனையிலேயே தங்கி சிகிச்சை எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற சூழ்நிலை உருவாகி விட்டிருந்தது.

அம்மா மரகதம் பதறிப் போய் விட்டிருந்தாள்.

''மாமா குணமாகி வீடு திரும்பற வரைக்கும் நீ கல் லூரிக்குப் போக வேணாம் நிவேதா! நான் அவர் கிட்டயே இருந்து கண்ணும் கருத்துமா கவனிச்சுக்கிறேன்.



''நீ வீட்டைப் பார்த்துக்கோ... சமைச்சு லீலா நீலாவைப் பள்ளிக்கு அனுப்பிட்டு எங்களுக்கு நீ சாப்பாடு எடுத்துட்டு வரணும்.

''அப்படியே மாத்துத் துணி மணி எடுத்துட்டு வந்துட றியா? உனக்கு எதுவும் சிரமம் இல்லையே?'' கலங்கியபடி அம்மா கேட்டபோது பதற்றத்துடன் அவளது கைகளைப் பற்றினாள் நிவேதா.

''என்னம்மா இப்படிக் கேட்டுட்டே? நமக்கு மாமாவை விட்டா யாரு இருக்காங்க சொல்லு? மாமாவுக்குப் பக்கத்துல இருந்து கவனிச்சுக்கோ... மத்ததை எல்லாம் நான் பார்த் துக்கிறேன். கவலைப்படாதே!

''மெஸ்ஸுக்கு விடுமுறை விட்டுட வேண்டியதுதான். உன்னால சமாளிக்க முடியாதே?''

''சரிம்மா! நீ எதைப் பத்தியும் நினைச்சு மனசைக் குழப் பிக்காதே... மாமாவுக்குக் கஞ்சியும் உனக்கு சாப்பாடும் எடுத் துட்டு வந்துடறேன். மருத்துவமனைக்குக் கட்ட வேண்டிய முன் பணத்தையும் அப்படியே எடுத்துட்டு வந்துடறேன்'' ஹேண்ட் பேக்கை தோளில் மாட்டிக் கொண்டு அரக்கப் பரக்க ஓடினாள்.

பஸ்ஸைப் பிடித்து வீடு வந்து சேர்ந்தவள்... கால்களில் சக்கரத்தை மாட்டிக் கொள்ளாத குறையாகப் பம்பரமாய் சுழன்று சமைத்து... தங்கைகளைச் சாப்பிட வைத்து பள்ளிக்கு அனுப்பி வைத்தாள்.

சமையல் வேலைக்கும், காய்கறி நறுக்கிப் பாத்திரங் களைத் தேய்த்துக் கழுவுவதற்கும் வந்த தாயம்மாவும் பூங்காவனமும் அலங்க மலங்க விழித்தார்கள்.

''தவிர்க்க முடியாத காரணத்தால விடுமுறைன்னு சொல்லி வாடிக்கையாளர்களை திரும்ப அனுப்பிச்சுட்டோம். ஆனா... இரவுலே மெஸ் இருக்கும்னு சொல்லிட்டீங்கல்ல?

''நான் சாயந்தரமா தான் திரும்ப வருவேன். பருப்பை வேக வைச்சு காய் நறுக்கி வச்சுடுங்க... நான் வந்ததும் சாம்பார் வச்சு சமாளிச்சுடலாம்.

''மாமா இருக்கிற நிலைமையைப் பார்த்தா.. இன்னும் மூணு நாலு நாள் கழிச்சுத் தான் அவரை வீட்டுக்கு அனுப்புவாங்க போல... அத்தன நாட்கள் நாம்ப வாடிக்கையாளர்களை அல்லாட வைக்கிறது சரியில்லை...

''நாம்ப சமாளிச்சு மெஸ்ஸை வழக்கம் போல நடத்திடலாம் இல்லையா?'' இருவரையும் யோசனையாய் மாறி மாறிப் பார்த்தாள் நிவேதா.

''உங்கம்மா ஸ்தானத்துல நீ இருக்கிறே... நளபாகத்துல நீ அவங்களையே மிஞ்சிடுவியே? நாங்க எதுக்கு இருக் கிறோம். ஜமாய்ச்சுடலாம். நீ தைரியமா போயிட்டு வா... இருட்டறதுக்குள்ளே பத்திரமா நீ வந்துடு...

''நாங்க எல்லாத்தையும் தயார் பண்ணி வச்சுடறோம்.'' தாயம்மா வெற்றிலையை மென்றபடியே பேசியதும்... இவளுக்குள் தெம்பு ஊறியது.

அன்று மருத்துவமனைக்குச் சென்று முன் பணத்தை செலுத்தி ரசீது பெற்றுக் கொண்டு, மாமாவுக்கு வேண்டிய மருந்து மாத்திரைகளை வாங்கிக் கொடுத்து விட்டு சாயந் தரம் தான் கிளம்பினாள்.

''நிவேதா! வயசுப் பொண்ணு இருட்டறதுக்குள்ளே பத்திரமா வீடு போய் சேர்ந்துடும்மா... நீ கிளம்பு! மாமாவுக்குக் காய்ச்சல் வேற இருக்கிறதால... இரவுக்கு ரொட்டியும் பாலும் சாப்பிட்டாப் போறும்.

''நானும் ரொட்டியையே சாப்பிட்டுக்கிறேன். நீ விசனப் படாம கிளம்பு'' அம்மா மரகதம் துரிதப்படுத்தினாள்.

''பிளாஸ்கில் பால் வாங்கி வந்து வச்சுட்டுப் போகட்டுமா அம்மா?''



''அதெல்லாம் நான் பார்த்துப்பேன். நீ சீக்கிரம் கிளம்பு! நீ பேசாம மெஸ்ஸுக்கு விடுமுறை விட்டிருக்கலாம். இனிமே நீ போய் இரவு டிபன் வேலையை வேற கவனிக்கணுமே?''

''நம்ம கஷ்டம் நம்மோடு போகட்டும். வாடிக்கையாளர் கள் சிரமப்படுவாங்களே? அவங்களை வீணா ஏன் நாம்ப அல்லாட வைக்கணும்? அதான்... நாளையிலிருந்து சாப்பாடு கொடுத்துட்டு உடனே நான் கிளம்பிடறேன்.

''நான் உன் பொண்ணும்மா... நான் எதையும் சமாளிப்பேன். தாயம்மாவும், பூங்காவனமும் தான் எனக்கு ஒத்தாசையா இருக்காங்களே?

''எனக்கு எந்தச் சிரமமும் இல்ல... சரியா? அதோ அந்த மேஜை மேல இரத்தக் கொதிப்பு, மூட்டு வலிக்கான மாத் திரைகளை வச்சிருக்கேன். மறக்காம நீ போட்டுக்கணும். நான் கிளம்பறேன் அம்மா'' பரபரப்பாக பதில் கூறியபடியே அழுக் குத் துணிமணிகளை எடுத்து பெரிய பையில் திணித்துக் கொண்டாள்.

ஓட்டமும் நடையுமாக விரைந்தவள்... கிளம்பிச் செல்ல ஆயத்தமாகி உறுமிக் கொண்டிருந்த பஸ்ஸில்... முண்டி யடித்த கும்பலுடன் தன்னையும் திணித்துக் கொண்டாள்.

''சார்! இங்க பாருங்க... வயசானவங்க... தள்ளாடிக்கிட்டு அந்தம்மா கம்பியைப் பிடிச்சுட்டு நிற்கிறாங்க... நீங்க கொஞ்சம் எழுந்து... அவங்களுக்கு இடம் விடுங்களேன்.''

குரல் வந்த திக்கில் பார்வையைத் திருப்பினாள் நிவேதா.

வேண்டா வெறுப்பாக இருக்கையை விட்டு எழுந்தான் ஒரு வாலிபன். ஆஜானுபாகுவாக கிழவிக்குப் பரிந்து பேசிய வனைக் கண்டு அவனுக்கு உள்ளூர கோபம் மண்டியது.

தள்ளாடிக் கொண்டு நின்ற ஒரு கிழவியைக் கைத்தாங்க லாகப் பற்றி அமர வைத்தவனின் மீது... அவளது பார்வை நிலைத்தது.

''ரொம்ப நன்றி தம்பி! இந்தக் காலத்துல பெத்தவங் களைக் கூடத் திரும்பிப் பார்க்க மாட்டேங்கிறாங்க...

''அதுவும் இளந்தாரிப் பசங்களுக்கு வயசானவங்களைக் கண்டாலே... கடுப்பா இருக்குது. முகத்தைச் சுளிக்கிறாங்க.

''அவுங்களுக்கு எப்பவும் இப்படியே இளந்தாரியா... வயசே ஆகாம இருந்துடுவோம்னு நினைப்பு!

''இந்தக் காலத்துல உன்னை மாதிரி இளந்தாரியைப் பார்க்கிறதே அபூர்வம் தம்பி.''

அந்தக் கிழவி முகம் பூரிக்கப் பேசியபடியே அவனை ஏறிட்டாள்.

''ஒரு சின்ன விஷயத்துக்குப் போய்... என்னைப் பாராட் டிக்கிட்டு இருக்கீங்களே பெரியம்மா?'' சங்கோஜத்துடன் தழைந்த குரலில் பேசியவனை... விழிகள் விரியப் பார்த்துக் கொண்டிருந்தாள் நிவேதா.

''நிசத்தைத் தானே சொல்றேன்? இந்தக் காலத்து இளந் தாரி பசங்க யாருக்கு உதவுறாங்க? தளதளன்னு தக்காளிப் பழமாட்டம் அழகா இருக்குற வயசுப் பொண்ணுங்களைக் கண்டா... ஓடிப்போய் உதவுறாங்க...

''எங்களையும் மதிச்சு உதவுகிறவங்களைப் பார்க்கிறதே அபூர்வம் இல்லையா? உன்னைப் பெத்தவங்க ரொம்பக் கொடுத்து வச்சவங்க தம்பி.''

''எனக்கு அந்த பாக்கியம் இல்லைம்மா... என்னைப் பெத்தவங்க உயிரோட இல்லை... சின்ன வயசில இருந்து நான் தாத்தா பாட்டி கிட்டே தான் வளர்ந்தேன்.''

''சங்கடமாயிருக்கு தம்பி! உன் நல்ல மனசுக்கு சாமி உன்னை எப்பவும் கை விடாதுப்பா.''

கனிந்த பார்வையுடன் அவளையும் அறியாமல் சுவாரசிய மாய் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்த நிவேதாவைக் கண்டக்டரின் கர்ண கடூரமான குரல் கலைத்தது.



''டிக்கெட்... டிக்கெட்.''

தோளில் தொங்கிய ஹேண்ட் பேக்கில் கையை நுழைத்துத் துழாவினாள். பணம் தட்டுப் படவே இல்லை.

'அடக்கடவுளே! ஹேண்ட் பேக்கை பிளேடால் கீறி யாரோ பணத்தை அடித்து விட்டுப் போய் விட்டானே?'

பகீர் என்ற உணர்வில் அவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

''நல்ல காலம்! மருத்துவமனைக்குக் கட்ட வேண்டிய முன் பணத்தைக் கட்டி விட்டேன். கைச் செலவுக்கு வைத் திருந்த பணம் தான் பறி போய் விட்டது.

''ஆனால்... டிக்கெட் வாங்க வேண்டுமே? கண்டக்டருக்கு என்ன பதிலைச் சொல்லுவது?''

திகிலில் குப்பென்று அவளுக்கு வியர்த்து விட்டது.

''டிக்கெட் வாங்காதவங்க கேட்டு வாங்கிக்கோங்க... கூட்டத்துல கமுக்கமா இருந்த நாலைந்து பேர், முந்தா நேத்து டிக்கெட் பரிசோதகர் திடீர்னு வந்து செக் பண்ணினப்போ... மாட்டி அசிங்கப்பட்டுட்டாங்க... கேட்டு வாங்கிக்கோங்க... சொல்லிட்டேன்.''

கண்டக்டர் வயிற்றை எக்கிக் குரல் கொடுத்தபடியே அருகில் நகர்ந்து வந்தார்.

தெரிந்தவர்கள் யாராவது தென்படுகின்றார்களா என்ற ஆவலில்... கூட்டத்தைப் பார்வையால் சலித்தாள்.

தற்செயலாக பக்கவாட்டில் திரும்பிப் பார்த்தபோது...

அந்தக் கிழவியுடன் பரிவுடன் பேசிக் கொண்டிருந் தவன்... தன்னையே உற்று கவனிப்பதை உணர்ந்ததும் அவளுக்கு மிகவும் தர்ம சங்கடமாக இருந்தது.

''இஃப் யூ டோண்ட் மைண்ட்! கூட்டத்துல நாம்பதான் எச்சரிக்கையா நடந்துக்கணும்...''

''நான் காந்தன்... என்ஜினீயர்! நீங்க எங்கே போகணும்?'' அவளது ஹேண்ட் பேக்கில் பிளேடால் கீறின பகுதியில் அவனது பார்வை படிந்து மீண்டது.

அவன் கேட்டது தான் தாமதம்... அவள் யோசித்து முடிக்கும் முன் அவளது நாக்கு முந்திக் கொண்டு விட்டது.

''வீரபாண்டிக்குப் போகணும்... பஸ் ஸ்டாண்டுக்குப் பக்கத்துல தான் வீடு... அந்தி சாயற பொழுதாயிடுச்சு... இதுவே பகல் நேரமா இருந்தா... தைரியமா நடந்துகூட போயிடுவேன்...'' தயங்கியபடி நிறுத்தினாள்.

''நானும் வீரபாண்டிக்குத் தான் போறேன்'' என்று கூறி விட்டு கண்டக்டரை நோக்கித் திரும்பினான்.

''சார்! இந்தாங்க... வீரபாண்டிக்கு ரெண்டு டிக்கெட்ஸ்'' பணத்தைக் கொடுத்து டிக்கெட்டுகளைப் பெற்றுக் கொண்டான்.

''ரொம்ப ரொம்ப நன்றி சார்! இந்த டைம்லி ஹெல்ப்பை நான் என்னிக்கும் மறக்க மாட்டேன்.''

''பரவாயில்லைங்க... மனுசருக்கு மனுசர் இந்த உதவி கூட செய்யலைன்னா... நாம்ப பூமியில பிறந்ததுக்கு அர்த்தமே இல்லாமப் போயிடும் இல்லையா?''

மந்தகாசமாய் புன்னகைத்து விட்டு அப்பால் திரும்பிக் கொண்டான்.

ஒரு இளம் பெண்... அதுவும் அழகே உருவானவளிடம் இது தான் சாக்கு என்று பேச்சை வளர்த்துக் கொண்டிருக்காமல்... கண்ணியமாய் உதவி விட்டு, பட்டுக் கத்தரித்தாற்போல் பேசி விட்டு அவன் வேறுபுறம் திரும்பி மவுனம் காத்ததும்... நிவேதாவுக்கு அவன் மேல் சட்டென்று ஒரு பிடித்தம் ஏற்பட்டு விட்டது நிஜம்!

'வீரபாண்டிக்குத் தான் வருகிறானாமே? அவனது வீடு அங்கேயா இருக்கிறது?



'நாளைக்கும் இதே பஸ்ஸில் வருவானோ? வீரபாண்டிக்குப் புதிதாக குடி வந்திருப்பானோ? இதைப் பற்றி அவனிடம் கேட்கலாமா?

'டிக்கெட்டுக்குரிய பணத்தைத் திரும்பத் தர வேண்டுமே? எப்படித் தருவது? எப்போது தருவது?'

மனதில் அடுக்கடுக்காய் கேள்விகள் எழும்பி அவளைப் புழுவாய்க் குடைந்தன.

அவனிடம் பேசத் துடித்த நாவைக் கடித்து அடக்கினாள்.

'ஊகூம்! இதற்கு மேல் அந்நிய இளைஞனிடம் பேசுவது முறையல்ல...'

உள் மனம் எச்சரித்ததும் அமைதியானாள் நிவேதா.

சுபாவத்தில் அவள் அடக்க ஒடுக்கமான பெண். கட்டுக்கோப்பாக வளர்க்கப் பட்டவள்.

பஸ்ஸை விட்டு இறங்கியதும் அவளது தலைக்கு மேல் ஆயிரம் வேலைகள் காத்துக் கிடந்தன.

மெஸ்ஸை வேறு தங்கு தடையில்லாமல் நடத்தியாக வேண்டும் என்ற உத்வேகத்துடன் அவள் செயல்பட்டாள்.

மருத்துவமனைக்கும் வீட்டுக்குமாக அவள் அலைந்ததில்... அதற்குப் பின்பு காந்தனைச் சந்திக்கும் வாய்ப்பே ஏற்படவில்லை.

மூன்று மாதங்கள் கழித்து ஒரு நாள்... அவள் கணினி வகுப்பை முடித்து விட்டு பஸ்ஸில் ஜன்னலோரமாக அமர்ந்து பயணித்தபோது... சாலையில் பைக்கில் விரைந்து கொண்டிருந்த காந்தன், அவளது விழிகளில் சிக்கினான்.

ஜன்னலிலிருந்து தலையை வெளியே நீட்டி அவன் பார்வையிலிருந்து மறையும் வரை பார்த்துக் கொண்டிருந்தவளின் மனதை... ஏமாற்றம் முற்றுகையிட்டது.

இதே போன்று இரண்டு மூன்று முறை அவனை தூரத்திலிருந்து பார்க்கும் வாய்ப்பு ஏற்பட்டபோது... அவள்

மனம் அவனைக் கிட்டத்தில் பார்த்துப் பேசி நன்றி கூறி... அந்த பத்து ரூபாய் கடனை அடைத்து விடத் துடியாய்த் துடித்தது.

''என்ன நிவேதா? பலத்த யோசனையில மூழ்கிட்டீங்க போல?'' அருகில் அமர்ந்திருந்த காந்தனின் குரலைக் கேட்டதும்... பழைய நினைவுகளை விட்டு நிகழ் காலத்திற்கு இறங்கினாள் நிவேதா.

''இதோ... இது தான் போன மாதம் நான் தயாரித்த பிராஜெக்ட்... இந்த ஃபைலைப் புரட்டிப் பாருங்க... உங்களுக்கு நிறைய ஐடியாஸ் கிடைக்கும்.

''மதியத்துக்கு எனக்குத் தயிர் சாதம் போதும் நிவேதா! கேண்டீனுக்குப் போகணும்னு அவசியமில்லை... பியூனுங்க கிட்டே சொல்லி அனுப்பிச்சா... வாங்கிட்டு வந்துடுவாங்க.''

பதிலுக்குக் கூட அவன் காத்திருக்காமல் கணினி பட்டன்களைத் தட்டிக் கொண்டு மும்முரமாய் வேலையில் மூழ்கிப் போயிருந்தான்.

'முதல் முதலாக இன்று தான் வேலையில் அவள் சேர்ந்திருக்கிறாள். வேலையில் சேர்ந்த நாளிலேயே... அவனுடன் ஜோடியாய் கேண்டீனுக்குச் செல்வதா?

'தன்னுடன் வேலை பார்ப்பவன்... அதுவும் அவளுக்கு சீனியர் ஆபீஸர் என்ற பதவியில் இருப்பவன் தான்!

'இருந்தாலும் அவனுடன் சேர்ந்து கேண்டீனில் உணவருந்தப் போகிறோம் என்ற விஷயம்... மனதில் ஒரு ஊகா முள்ளாய் உறுத்திக் கொண்டிருந்தது நிஜம்!

'அவள் மனதில் உள்ளதை வாசித்து அறிந்தவன் போன்று... மதிய உணவை கேபினுக்கே வரவழைத்து விடும்படி கூறி... அவளது தர்ம சங்கடத்தை ஒரு நொடிப் பொழுதில் தணித்து விட்டானே காந்தன்?'

அவனது கண்ணியமும் நேர்மையும் நாசூக்கான நடவடிக்கைகளும் சேர்ந்து... அவள் மனதில் இனம் புரியாத இரசாயன மாற்றத்தை ஏற்படுத்தின.



காந்தன்...! அவளைக் காந்தமாய் ஈர்த்து விட்டிருந்தான்.

## 5

முல்லை நதி சலசலவென்ற சப்தத்துடன் செல்லமாய் ஜதி போட்டு ஓடிக் கொண்டிருந்தது.

படித்துறையில் இறங்கி கால்களை அலம்பிக் கொண்ட நிவேதா திரும்பி தங்கைகளை ஏறிட்டாள்.

''காலை அலம்பிட்டு முதல்லே சிவனை தரிசனம் பண்ணிட்டு அப்படியே கவுமாரி அம்மன் சன்னதிக்குப் போய்... மாவிளக்குப் போட்டு வேண்டிக்கிட்டு நாம்ப உடனே கிளம்பிடலாம். சரியா?''

நீலாவும் லீலாவும் திருதிருவென்று விழித்தபடி ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

''சிவனை மட்டும் கும்பிட்டுட்டு நாங்க வீட்டுக்குப் போறோம். நாளைக்கு மாதப் பரீட்சை இருக்கே? நாங்க படிக்க வேணாமா அக்கா?''

நீலாவின் குரலில் ஏகத்திற்கும் எரிச்சல் மண்டிக் கொண்டு இருந்தது.

''நீலா என்ன பேசறே நீ? விழுந்து விழுந்து படிக்கிற உங்களை எழுப்பி ஊர் சுத்தறதுக்குக் கூட்டிட்டு வந்தது மாதிரி பேசறே?

''இன்னிக்கு நல்ல நாள்! மாவிளக்குப் போட்டு அம்மனை வேண்டிக்கிட்டு வாங்கன்னு... அம்மா நம்மளை அனுப்பி இருக்காங்க.

''அவங்க மனத் திருப்திக்காக ஒரு அரை மணி நேரம் ஒதுக்கும்போது தான்... உங்களுக்கு புதுசா அக்கறை கிளம்பும்னு நெனக்கிறேன்.

''வீட்டுலே படிக்கிறோம் பேர்வழின்னு... சதா புத்தகத்தை விரிச்சு வச்சுக்கிட்டு... கிசுகிசுன்னு அடிக்குரல்லே ஊர்க் கதையெல்லாம் பேசி நேரத்தை வீணாக்கிட்டு இருப்பீங்க.

''கோவிலுக்கு வந்ததும் வராததுமா கால்லே வெந்நீரை ஊத்திக்காத குறையா... வீட்டுக்கு விழுந்தடிச்சு ஓடறீங்க?

''அம்மா என்ன நினைப்பாங்க?''

சுர்ரென்று தலைக்கேறிய கோபத்தை அடக்கிக் கொண்டு குரலை உயர்த்தாமல் அதட்டியபடி நிதானமாக இருவரையும் ஊன்றிப் பார்த்தாள் நிவேதா.

''இ... இல்லைக்கா... நாளைக்குப் பரீட்சைக்கு நிறைய கேள்வி பதிலை படிச்சு மனப்பாடம் பண்ண வேண்டியிருக்கு அதான்.''

லீலா திணறியபடி அக்காளை ஏறிட்டாள்.

''உம்.. சரிதான்! நாளைக்குப் பரீட்சைன்னு சொன்னா... அந்த டாபிக்கை இன்னிக்கு தான் உட்கார்ந்து படிப்பீங்க போல?

''அன்னன்னிக்கு நடத்தற பாடங்களை உடனே படிச்சு முடிச்சிருந்தா... இந்த அவஸ்தை வேண்டியிருக்காது இல்லே?

''அரை மணி நேரத்துல ஒண்ணும் குடி முழுகிப் போகாது. மாவிளக்குப் போட்டுட்டு உடனே கிளம்பிடலாம்.

''இரவுலே கண் முழிச்சிருந்து படிங்க... ஒரு மணி வரைக்கும் படிங்க... டீ போட்டுத் தரேன்.

''காலையில சீக்கிரம் எழுப்பி விடறேன். மனசை அலை பாய விடாம இழுத்துப் பிடிச்சு... மனசை ஒரு முகப்படுத்திப் படிச்சா... சட்டுன்னு மனசுல பாடம் பதிஞ்சுடும். சரியா?'' கையில் அர்ச்சனைக் கூடையுடன் படிக்கட்டுகளில் வேகமாய் ஏறினாள் நிவேதா.

''ச.... சரிக்கா'' இருவரும் கோரசாய் கூறிவிட்டு அதற்கு மேல் மறுத்துப் பேச தெம்பில்லாமல் தமக்கையைத் தொடர்ந்து சென்றனர்.



சிவனை தரிசித்துவிட்டு அம்மன் சன்னதிக்கு சடுதியில் விரைந்தனர்.

அங்கு பக்தர்களின் கூட்டம் ஏகத்திற்கும் திமுதிமுத்தது. அன்னை கவுமாரி வெள்ளிக் கவசம் அணிந்து பக்தர்களுக்கு அருள் பாலித்துக் கொண்டிருந்தாள்.

தோட்டத்தில் பறித்த செவ்வரளி மலர்களைத் தொடுத்துக் கொண்டு வந்த மாலையை அம்மனுக்குச் சாற்றி விட்டு மா விளக்கு ஏற்றி மனமுருக வேண்டிக் கொண்டு... திருப்தியுடன் வெளிப்பட்டாள் நிவேதா.

''பிரகாரத்தை ஒரே ஒரு முறை வலம் வந்துட்டு... ஒரு நிமிடம் மண்டபத்துத் தூணோரம் உட்கார்ந்துட்டு பிரசாதத்தை துளி வாயில போட்டுக்கிட்டு நாம்ப கிளம்பிடலாம்.''

மண்டபத்துத் தூணோரம் வந்து அமர்ந்ததும் அர்ச்சனைக் கூடையில் வைத்திருந்த மாவிளக்கு பிரசாதத்தை அள்ளி இரு தங்கைகளுக்கும் கொடுத்தாள்.

நெய்யில் பிசைந்திருந்த மாவிளக்கு ஏலக்காய் நறு மணத்தோடு மூக்கைத் துளைத்தது.

''நீங்க சாப்பிட்டுட்டு இருங்க... அதோ... அந்தக் கொடி மரத்துக்குப் பக்கத்துல விளையாடிட்டு இருக்காங்களே சின்னப் பசங்க... அவங்களுக்குக் கொஞ்சம் இதைக் கொடுத்துட்டு, அப்படியே பிரகாரத்தைச் சுத்திட்டு வர்றாரே ஒரு பெரியவர், அவருக்கும் கொடுத்துட்டு ஓடி வந்துடறேன்'' விரைந்தாள் நிவேதா.

குழந்தைகளுக்கு பிரசாதத்தை விநியோகித்து விட்டு... பிரகாரத்தைச் சுற்றி முடித்து, அலுப்புடன் நடந்து வந்த பெரியவரை நோக்கி நடந்தாள்.

அந்தப் பெரியவருக்கு எழுபத்தைந்து வயதிருக்கும். அந்தக் காலத்துத் திடகாத்திரமான தேகத்துடன் கம்பீரமாகத் தோற்றம் அளித்தார்.

நெற்றியில் பட்டையாக விபூதி பூசி... தும்பைப் பூவைப் போன்று பளிச்சென்று வெளுத்த வேஷ்டி சட்டை அணிந்து இருந்தார்.

கனிவான கண்களில் கவலை தேங்கிக் கிடந்தது. முதிய முகத்தில் அதீத சோகம் அப்பியிருந்தது.

தன் எதிரே வந்து நின்றவளை... விழிகள் சுருங்க உற்றுப் பார்த்தார்.

''வணக்கம் தாத்தா! அம்மனுக்கு வேண்டிக்கிட்டு மாவிளக்கு போட்டோம். பிரசாதத்தை கொஞ்சம் வாங்கிக் கோங்க தாத்தா.''

பெரியவர் அவளிடம் ஏதோ சொல்ல வாயெடுத்தார்... திடீரென்று அவரது முகம் அஷ்ட கோணலாகியது.

நெற்றிப் பொட்டில் கையை வைத்து அழுத்திக் கொண்ட மனிதர், மறுகணமே மடங்கிச் சரிந்து பொத்தென்று விழுந் தார்.

நிவேதாவின் உடலெங்கும் அதிர்ச்சி ரேகைகள் பரவி ஓடின.

''ஐயோ தாத்தா...'' பதறிப் போய் குனிந்து அவரை உற்றுப் பார்த்தாள்.

வியர்வை ஆறாகப் பெருகிய வண்ணம் இருந்தது.

திடீரென்று கீழே விழுந்ததில் நெற்றியோரம் நெல்லிக் காய் சைஸில் வீக்கம் தோன்றியிருந்தது.

வலது முழங்கையில் இலேசான சிராய்ப்பு காயம்!

அவரது முகத்திலும் கைகளிலும் படிந்திருந்த மண்ணைத் தட்டி விட்டு, பின்னால் திரும்பிப் பார்த்துத் தங்கைகளை உதவிக்கு அழைத்தாள்.

''லீலா... நீலா! கொஞ்சம் சீக்கிரமா வாங்களேன்'' வயிற்றை எக்கி சப்தமாய் அழைத்தாள்.



தமக்கையின் குரல் கேட்டு ஓடி வந்தவர்கள் முதியவரைப் பார்த்துத் திகைத்து நின்றனர்.

''என்ன நீலா? பார்த்துட்டே நிக்கிறியே? இந்தப் பக்கமா பிடி... தாத்தாவை நாம்ப கைத்தாங்கலா தூக்கி அந்த மண்டபத்துல உட்கார வைக்கலாம்.''

''லீலா! மசமசன்னு நிக்காம ஓடிப் போய் கொஞ்சம் தண்ணி பிடிச்சுட்டு வந்து தாத்தாவோட முகத்துல தெளிம்மா'' உத்தரவிட்டாள் நிவேதா.

மண்டபத்துத் தூணோரமாகப் பெரியவரை சாய்வாக அமர வைத்து முகத்தில் தண்ணீர் தெளித்ததும்... பெரியவர் முகத்தைச் சுருக்கி மெதுவாக விழிகளை மலர்த்தி.. சுற்றிலும் நின்றவர்களைச் சங்கடமாய்ப் பார்த்தார்.

''தண்ணி குடிக்கிறீங்களா தாத்தா?''

பெரியவர் தண்ணீரைப் பருகியதும் தனது கைக்குட் டையை நீட்டினாள் நிவேதா.

''முகத்தை நல்லா துடைச்சுக்கோங்க தாத்தா. உடம்புக்கு என்ன பண்ணுது? உங்களுக்கு அடிக்கடி இப்படி மயக்கம் வர்றதுண்டா?''

''இ... இல்லைம்மா... எனக்கு பி.பி. இருக்கு. மாத்திரையை ஒழுங்கா நான் போட்டுக்கத் தவறிட்டேன். அதான்... திடீர்னு தலை சுத்திக் கீழே விழுந்துட்டேன்.''

''பி.பி. சுகர் இரண்டுமே வரக் கூடாத வியாதிகள். அது வந் துட்டா நாம்ப தான் எச்சரிக்கையா நாள் தவறாம மாத்திரைகள் எடுத்துக்கணும்.''

''டாக்டர் சொல்றபடியே கவனமா நடந்துக்கணும். அப்படி இல்லாட்டி நாம்ப தானே கஷ்டப் படணும் தாத்தா? கீழே விழுந்ததிலே பெரிய எலும்பு முறிவு ஏற்பட்டிருந்தா... என்ன ஆயிருக்கும்?

''நல்ல காலம்... நெத்தியிலும் முழங்கையிலும் சின்னக் காயங்களோட தப்பிச்சீங்களே? இன்னமும் டென்ஷனா இருக்கிறாப்பல தெரியுதே தாத்தா?

''உங்க வீடு எங்கே இருக்கு?''

சிரத்தையாய் அவரிடம் கேள்விக் கணைகளைத் தொடுத்த நிவேதாவைப் பார்த்து... முதியவரின் முகத்தில் சின்னதாய் ஒரு முறுவல் பூத்தது.

''வீடு கொஞ்சம் தூரந்தான் தாயி! எட்டாவது தெருவில இருக்கு. இன்னிக்கு விடியக் காலையிலே எந்திரிச்சதி லிருந்தே மனசு கொஞ்சம் சரியில்லை.

''அதான்... அம்மனை தரிசனம் பண்ணிட்டுப் போகலாம்னு காலாற நடந்து வந்தேன்.

''வீட்டுக்குப் போயி என்னத்தையாவது சாப்பிட்டுட்டு மாத்திரை போட்டுக்கிட்டா... எல்லாம் சரியாயிடும் தாயி!

''கூட்டம் இன்னிக்கு இப்படி திமிலோகப் படுது. ஆனா... யாருக்கும் ஒரு வயசான மனுஷனுக்கு சகாயம் செய்ய ணுங்கிற மனசு வரலை.

''ஆனா நீ சொந்த பேத்தி மாதிரி என் மேல இவ்ளோ அக்கறை காட்டறே... நீ நல்லா இருக்கணும். உன் பேரு என்னம்மா?''

''என் பேரு நிவேதா. உங்க பேரு என்ன தாத்தா?'' கள்ளம் கபடமில்லாமல் உரிமையாய் நேசமாய்க் கேட்டவளை... அவருக்கு நிரம்பவே பிடித்து விட்டது.

''என் பேரு ராமசாமி. நான் ஒரு சமையல் காண்டிராக்டரா பல வருடங்கள் வேலை பார்த்தவன் தாயி.''

''பெரியவங்க நீங்க... உங்க ஆசீர்வாதம் கிடைக்க நான் கொடுத்து வச்சிருக்கணும் தாத்தா!

''உங்க வீடு வரைக்கும் நான் துணையா வரேன் தாத்தா. உங் களால நடக்க முடியுமா? இல்ல... ஆட்டோ பிடிச்சுட்டு வரவா?''

''இல்லல்ல... நான் நடந்தே போயிடுவேன். உனக்கு எதுக்கு தாயி சிரமம்?''

''எனக்கு இதுலே ஒரு சிரமமும் இல்ல தாத்தா. வாங்க போகலாம்'' என்று விட்டு தங்கைகளை ஏறிட்டாள்.



''நீங்க ரெண்டு பேரும் கிளம்புங்க. வீட்டுக்குப் போயி நேரத்தை வீணாக்காம மளமளன்னு படிங்க... நான் தாத்தாவை அவரோட வீட்டுலே விட்டுட்டு வந்துடறேன்.

''ஆங்... லீலா! மாவிளக்கு பிரசாதத்தைத் தாத்தாவுக்குக் கொடுத்துட்டு அந்த அர்ச்சனைக் கூடையை மறக்காம எடுத்துட்டுப் போயிடு.''

கொடி மரத்துக்கு முன்பாக நின்று கை கூப்பி சேவித்து விட்டு ராமசாமி தாத்தாவுடன் நடக்க ஆரம்பித்தாள் நிவேதா. அங்கே... ஒரு இனிய அதிர்ச்சி! அவளுக்காகவே காத்துக் கொண்டிருந்தது.

## 6

சாலையோரத்து மரங்கள் கிளைகளை அசைத்துத் தாலாட்டி சுத்தமான காற்றைப் பிரசவித்துக் கொண்டிருந்தன.

தாத்தாவின் வீடு அப்படியொன்றும் அதிக தூரத்தில் இல்லை.

பத்து நிமிட நடையில் வீட்டை அடைந்து விட்டார்கள்.

''அப்ப நான் வரேன் தாத்தா! மறந்துடாம மாத்திரை போட்டுக்கங்க'' விடைபெற எத்தனித்தாள்.

''அ... அப்படியே வாசலோட போனா... எப்படிம்மா? சொந்த பேத்தியாட்டம் உபகாரம் பண்ணிக் கொண்டு வந்து விட்டுருக்கே...

''வீட்டுக்குள்ளார வந்து ஒரு வாய் காபி தண்ணியை நீ குடிச்சுட்டுப் போனா... இந்தத் தாத்தா மனசு குளிரும் இல்லியா?''

அதற்கு மேல் பெரியவரின் வார்த்தையைத் தட்ட... அவள் மனம் துணியவில்லை.

''சரிங்க தாத்தா.''

பேச்சரவம் கேட்டு உள்ளிருந்து எட்டிப் பார்த்த மனைவியை அதட்டி அழைத்தார்.

''சீதம்மா... இன்னிக்குக் கோவில் பிரகாரத்தைச் சுத்தி வரும் போது தலை சுத்தி கிறங்கிட்டேன்.

''இந்த நிவேதா பொண்ணு ஓடியாந்து என்னைத் தூக்கினா... வீடு வரைக்கும் வந்து விட்டுட்டுப் போக வந்தா...

''இந்தப் புள்ளைக்குக் காப்பி தண்ணி கொண்டா'' உத்தர விட்டார் ராமசாமி.

தும்பைப் பூவாய் நரைத்த கூந்தல்... நெற்றியில் காலணா சைஸில் பளிச்சென்று துலங்கிய குங்குமப் பொட்டுடன் மங்களகரமாய் இருந்தார் சீதம்மா.

''அம்மாடி உள்ளார வாம்மா... யார் பெத்த பெண்ணோ? வயசான மனுசராச்சேன்னு இரக்கப்பட்டு இவ்ளோ தூரம் கொண்டு வந்து விட்டிருக்கே... உட்காரும்மா... தோ வந்துடறேன்'' என்றபடி பாட்டி அடுக்களைக்குள் புகுந்தார்.

கூடத்தைப் பார்வையாலேயே வலம் வந்தாள் நிவேதா.

சாமி மாடத்திற்குக் கீழே இருந்த பலகையில்... முப்பது வயது மதிக்கத்தக்க பெண்ணின் புகைப்படம் சாற்றி வைக்கப்பட்டிருந்தது.

படத்திற்கு மல்லிகை மாலை சூட்டப்பட்டு அதற்கு எதிரே... பழங்கள் பலகாரங்கள் புதுப்புடவை, கண்ணாடி வளையல்கள் மஞ்சள் கிழங்கு... என்று படையல் படைக்கப்பட்டிருந்தன.

நான்கு சட்டத்திற்குள் அடங்கி நேர்ப் பார்வையுடன் புன்னகை பூத்த அந்தப் பெண்ணின் முகத்தை உற்றுப் பார்த்த நிவேதா... ஸ்தம்பித்துப் போய் நின்று விட்டாள்.

ஜீவ களையான அந்த முகமும் கண்களும் யாரையோ ஞாபகப்படுத்தியதைப் போன்ற உணர்வை... ஏற்படுத்தியதும்... ராமசாமி தாத்தாவை ஏறிட்டாள்.

''தாத்தா இவங்க...?''



''என் பொண்ணு மீனாட்சி... இவ எனக்கு ஒரே பொண்ணு தான்... கிளியை வளர்த்துப் பூனை கையில கொடுத்தாப்பல... இவ கதை ஆயிடுச்சும்மா...''

''மருமகன் ரொம்ப மோசமானவன்... அழகான புள்ளையை குடிச்சுட்டு வந்து கொடுமைப் படுத்தி சந்தேகப்பட்டு வார்த்தையால வதைச்சான்.

''பூமாதேவி மாதிரி பொறுமையாத்தானிருந்தா... அவன் கெட்ட கேட்டுக்கு வேற பொம்பளை கூட தொடர்பு வச்சிருந்ததைக் கேட்டதும்... ஏழு மாசத்து புள்ளத்தாச்சியா இருந்தவ... அப்படியே வெறுத்துப் போய் எங்க கிட்ட வந்தா.

''அவளையே உரிச்சுக்கிட்டு அழகா ஒரு பேரன் பொறந்தான். புள்ளைய வளர்த்துக்கிட்டு நிம்மதியா எங்க கூட இருக்கணும்னு பார்த்தா... அந்தப் படுபாவிப் பய அப்பப்போ வந்து தகராறு பண்ணி நோகடிச்சே... அவளை நோயில தள்ளிட்டான் தாயீ...

''குழந்தைக்கு மூணு வயசா இருக்கும்போது... எங்கக் கையில ஒப்படைச்சுட்டு... இதே வெள்ளிக்கிழமையில கண்ணை மூடிட்டா...

''பொண்ணைக் கட்டிக் கொடுத்தாச்சு... பாரம் தீர்ந்தாச்சுன்னு என்னால இருக்க முடியலை... பேரனை வளர்த்துப் பெரிய படிப்புப் படிக்க வச்சு ஆளாக்கணும்கிற வைராக்கியத்தோட ஓடி ஓடி உழைச்சேன்.

''கல்யாணமா.... நிச்சயதார்த்தமா... வீட்டுலே விசேஷமா... ராமசாமியைக் கூப்பிடு... சமையல் ஜோரா இருக்கும்னு பேரெடுத்தவன் தாயி!

''என் பொண்ணு மீனாட்சி ஆசைப்பட்டபடியே... பேரனை ஆளாக்கிட்டோம். பெரிய நிறுவனத்துல நல்ல பதவியில இருக்கான். கை நிறைய சம்பாதிக்கிறான்.

''சமையல் காண்டிராக்டரா' இதுவரை உழைச்சு நீங்க ஓடாத் தேஞ்சது போதும் தாத்தா... கோவில் குளத்தைச்

சுத்திட்டு நிம்மதியா இருங்க'ன்னு... பேரன் உத்தரவு போட்டுட்டான் தாயி!

"கணினி என்ஜீனியரா கோட்டும் சூட்டும் போட்டுக்கிட்டு அவன் ஜம்முனு வளைய வர்றதைப் பார்க்க... இந்தப் புண்ணியவதிக்குக் குடுத்து வைக்கலை தாயி!

"இன்னிக்கு இவளுக்குத் திவசம்... எனக்கு மனசே சரியில்லை... அதான் ஒரு நடை கோவிலுக்குப் போயிட்டு வரலாம்னு கிளம்பினேன்...

"எங்களுக்கு மீனாட்சின்னா... ரொம்ப உசுரு தாயி! அவளை அல்பாயுசுல வாரிக் கொடுத்துட்டு... நாங்க பூமிக்குப் பாரமா நடமாடிக்கிட்டிருக்கோம்..." அவரது விழிகளில் நீர் கோர்த்துக் கொண்டது.

"என்ன தாத்தா இப்படிப் பேசறீங்க? இந்தத் தள்ளாத வயசுல உழைச்சு உங்க பேரனை என்ஜீனியரா உருவாக்கி இருக்கீங்களே? இது எவ்ளோ பெரிய விஷயம்?

"இது பெரிய சாதனை தான் தாத்தா... நிச்சயமா உங்க பொண்ணோட ஆத்மா சாந்தியடைஞ்சிருக்கும்.

"வருத்தப்படாதீங்க தாத்தா! ஒரு சாதனை மனிதரை இன்னிக்கு நான் சந்திச்சிருக்கேன்னு... ரொம்பவே பெருமைப்படறேன் தாத்தா...

"இவங்களை நான் எங்கியோ பார்த்தாப்பல இருக்கு. முகம் ரொம்பவே பரிச்சயமா இருக்கு தாத்தா... அதான் யோசனையா இருக்கு" என்றவளின் பார்வை மீண்டும் அந்தப் படத்தில் சென்று நிலைத்தது.

"வாய்ப்பே இல்ல தாயீ! மீனாட்சி மறைஞ்சு இருபத்தோரு வருஷங்களாகுது. நீ பார்த்திருக்க வாய்ப்பே இல்ல... இந்தா! காபி சாப்பிடும்மா... எங்க வீட்டுல எப்பவும் பனைவெல்லம் தட்டிப் போட்ட காபி தான்" என்றபடி சீதம்மாள் காபி டம்ளரை நீட்டினார்.



"நன்றி பாட்டிம்மா" அவள் காபியை அருந்திக் கொண்டிருந்தபோது... முதிய தம்பதிகள் இருவரும் அர்த்த பாவனையுடன் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

"ஏன் நிவேதா?... உங்கப்பா என்ன பண்றாரு? உங்க வீடு எங்கிருக்கு."

"எங்கப்பா உயிரோட இருந்தும் இல்லாதது மாதிரி தான் தாத்தா... கிட்டத்தட்ட உங்க மருமகன் மாதிரி தான் அவரும் நடந்துகிட்டாரு..." என்றவள் சுருக்கமாக விவரத்தைத் தெரிவித்தாள்.

"தன்னம்பிக்கையோட உழைச்சு மெஸ்ஸை நடத்தி உங்களை எல்லாம் வளர்த்து ஆளாக்கின உங்கம்மாவைப் பார்க்கணும். அந்த டேபிள்லே இருக்கிற நோட்டுல உங்க வீட்டு முகவரி போன் நம்பரை குறிச்சு வச்சுடு தாயி!"

"சரிங்க தாத்தா! இருட்டறதுக்கு முன்ன நான் வீடு போய்ச் சேரணும். அம்மா கவலைப்படுவாங்க... வரட்டுமா?"

"எங்க மீனாட்சி சுமங்கலியா போனதால... வருஷா வருஷம் அவளோட திவசத்துக்குப் புதுப்புடவை எடுத்துப் படைச்சுட்டு... அதை ஒரு சுமங்கலியையோ இல்ல.. ஒரு கன்னிப் பொண்ணையோ கூப்பிட்டுக் கொடுக்கிறது வழக்கம்!

"வெள்ளிக்கிழமையும் அதுவுமா மகாலட்சுமி மாதிரி வீட்டுக்கே நீ வந்திருக்கே... அதனால அந்தப் புடவையை உனக்குக் கொடுக்கலாம்னு நாங்க பிரியப் படறோம்.

"நீ தப்பா எதுவும் எடுத்துக்கலேன்னா..." தயங்கியபடி நிறுத்தினார் ராமசாமி.

"சொந்த பேத்தி மாதிரின்னு சொல்லிட்டீங்க... அப்புறம் என்ன தாத்தா? சந்தோஷமா வாங்கிக்கறேன். வீட்டு முகவரியைக் குறிச்சு வச்சுடறேன். தம்பதி சமேதரா நீங்க வரணும்.

''உங்களைப் பார்த்தா அம்மா ரொம்ப சந்தோஷப்படு வாங்க... நானும் அப்பப்போ உங்களை வந்து பார்க்கிறேன்.''

முதியவர்கள் இருவரும் பூரித்துப் போய் விட்டனர். ஒரு பிளாஸ்டிக் தட்டில் புதுப்புடவை, கண்ணாடி வளையல்கள், ரவிக்கைத் துணி, மஞ்சள் கிழங்கு, தாம்பூலம், பூ, ஒரு ரூபாய் நாணயத்தை வைத்து நீட்டினார் சீதம்மாள்.

''தாத்தா! நீங்களும் பாட்டிகூட சேர்ந்து நில்லுங்க... நமஸ்காரம் பண்ணிட்டு வாங்கிக்கிறேன். இன்னிக்கு உங்க ரெண்டு பேருடைய ஆசீர்வாதமும் கிடைக்க... நான் தான் கொடுத்து வச்சிருக்கணும்'' என்றபடியே நமஸ்கரித்து எழுந்து தட்டை வாங்கிக் கொண்டாள்.

''இரும்மா... ஒரு பையைக் கொண்டு வர்றேன். பையில போட்டு எடுத்துட்டுப் போவே'' சீதம்மாள் உள்ளே நடந்தார்.

வாசலில் பைக் தடதடத்து வந்து நிற்கும் சப்தம் கேட்டது.

''வாசல்லே செருப்பு புதுசா இருக்கே? நம்ம வீட்டுக்கு யாரு வந்திருக்காங்க...'' கேட்டபடியே உள்ளே நுழைந்த காந்தன், கூடத்தில் தாத்தாவுடன் பேசியபடி நின்ற நிவே தாவைக் கண்டு சட்டென்று நின்றான்.

'அட... காந்தன்! ராமசாமி தாத்தாவின் பேரன் இவர் தானா? ஓ... இவர் ஜாடையில் தனது தாயை உரித்துக் கொண்டு வந்திருக்கிறார்.

'அது அதனால் தான் படத்திலிருக்கும் மீனாட்சி அம் மாவைப் பார்த்ததும்... எங்கேயோ பார்த்தது போன்ற உணர்வு ஏற்பட்டது போலும்.

'இவரது அம்மாவுக்குப் படைத்த புடவையைத் தான் பெற்றுக் கொண்டேனா?

'இவரது தாத்தா பாட்டியிடம் தான் ஆசீர்வாதம் வாங்கி னேனா?

'இதற்கு உண்மையில் நான் கொடுத்து வைத்திருக்க வேண்டுமே?'



அவனைப் பார்த்த மாத்திரத்தில்... மனதிற்குள் ஒரு சிலிர்ப்புப் பொங்கியது.

உள்ளுக்குள் சிலுசிலுவென்று குற்றாலச் சாரல் அடித் ததைப் போன்றிருந்தது.

காந்தனின் முகத்திலும் விளக்குப் போட்டாற் போல் பளிச்சென்று வெளிச்சம் பரவியது.

''அட... நிவேதா... நீங்களா? வாங்க...'' மலர்ச்சியுடன் வரவேற்றான்.

''என்ன காந்தன்?... உங்க ரெண்டு பேத்துக்குள்ளேயே ஏற்கனவே அறிமுகம் ஆகிப் போச்சா?'' என்று வினவிய ராமசாமி சுருக்கமாக நடந்ததை விவரித்தார்.

''எனக்குத் தாத்தா பாட்டியை விட்டா... இந்த உலகத்துல யாருமே இல்ல நிவேதா... அவங்களுக்கு ஏதாவது ஒண் ணுன்னா... நான் ரொம்பத் துடிச்சுப் போயிடுவேன்.

''தாத்தாவை பொறுப்பா வீட்டுல கொண்டு விட்டிருக் கீங்க... நன்றி நிவேதா.''

''இது ரொம்பச் சின்ன விஷயம். இதுக்குப் போய் நன்றியெல்லாம் சொல்லிட்டிருக்கீங்களே? அப்போ... நான் வரேன் தாத்தா... மறக்காம மாத்திரை போட்டிருங்க... வரேன் பாட்டிம்மா'' கைகளைக் கூப்பி விட்டுக் கிளம்பி விட்டாள்.

''இருட்டிட்டு வருது. நிவேதா கூடத் துணையா போயிட்டு வா! காந்தன்...'' சீதம்மாள் பேரனை அனுப்பினார்.

''நில்லுங்க நிவேதா! நானும் வரேன்... உங்க வீடு இருக்கிற தெருமுனை வரைக்கும் வழித்துணையா வரேன்'' தெருவில் இறங்கி நடந்தவளுடன் இணைந்து நடந்தான்.

'வாழ்க்கை முழுவதும் உனக்குத் துணையா இருக் கணும்னு விரும்பறேன் நிவேதா!' என்று சொல்லி விட அவனது நாக்குத் துடித்தது.

'வழித் துணையா வந்தா மட்டும் போதுமா? வாழ்க்கைத் துணையா இருக்கேன்னு சொல்ல மாட்டீங்களா காந்தன்?'

தொண்டை வரை ஓடி வந்த வார்த்தைகளை சிரமப்பட்டு விழுங்கினாள்.

இருவர் மனதிலும் காதல் புகுந்து ஆட்டிப் படைத்தது. இருவரையும் தன் வசப்படுத்திக் கொண்டு... அழகாய் கண்ணா மூச்சி ஆட்டம் ஆடியது காதல்!

# 7

நாட்கள் இறக்கை கட்டிக் கொண்டு பறந்ததில்... இருபது வாரங்கள் கரைந்தன.

தனக்கு அளிக்கப்பட்ட முதல் பிராஜெக்ட் டிலேயே நல்ல பெயரைச் சம்பாதித்து விட வேண்டும் என்ற ஆர்வத்தில் மூளையைக் கசக்கிக் கொண்டு வெகு மும்முரமாய் செயல் பட்டாள் நிவேதா.

பழைய கோப்புகளை ஆராய்ந்து குடைந்து கணினியி லிருந்து நிறைய தகவல்களைத் திரட்டிக் கொண்டு... ஒரு வழியாக தனது பிராஜெக்ட்டைத் தயார் செய்து முடித்தாள்.

''காந்தன்! எனக்கு அளிக்கப்பட்ட முதல் பிராஜெக்ட்... முடிந்தவரை திருப்தியா தயார் செய்திருக்கேன். இந்தாங்க... உங்க அபிப்ராயத்தைத் தெரிஞ்சுக்கணும்னு... ரொம்ப ஆர்வமா இருக்கேன்.''

ஆவலாய் கோப்பினைப் புரட்டிப் பார்த்த காந்தனின் புருவங்கள் ஆச்சரியத்தில் மேலேறின.

''குட்... வெரிகுட் நிவேதா! முதல் பிராஜெக்ட்டிலேயே அசத்திட்டீங்களே? நான் எதிர்பார்த்ததுக்கு மேலாகவே ரொம்ப நல்லா வந்திருக்கு.''

''கொஞ்ச நாளானா... எங்களையே தூக்கி சாப்பிட்டிரு வீங்க போலிருக்கே? வாழ்த்துக்கள்... கை குடுங்க.''

அளவு கடந்த சந்தோஷத்திலும் ஆர்வ மிகுதியிலும் அவளை வாயாரப் பாராட்டிய காந்தன்... சட்டென்று அவளது கையைப் பற்றிக் குலுக்கி விட்டான்.



''நீங்க பெரிய ஜீனியஸ்... என்னோட சீனியர்... நல்ல திறமைசாலி... உங்க பாராட்டு கிடைக்க நான் கொடுத்து வச்சிருக்கணும்.''

மகிழ்ச்சியில் அவளுக்கு அந்தரத்தில் மிதப்பதைப் போன்று இருந்தது.

அலுவலகத்தில் இருவரும் ஒரே கேபினில் சேர்ந்து பணி புரிவதாலும்... சென்ற வாரத்தில் காந்தன் தனது தாத்தா பாட்டியுடன் இவளது வீட்டிற்கு வந்து அறிமுகம் செய்து கொண்டு... மாமா தணிகை வேலிடமும் அம்மா மரகதத் திடமும் வெகு நேரம் உரையாடி விட்டுச் சென்றதாலும்...

இவர்களும் குடும்பத்துடன் சென்று ராமசாமி தாத்தா - சீதம்மாள் பாட்டியுடன் குடும்ப நண்பர்களைப் போன்று நேசமுடன் உறவாடியதாலும்...

காந்தன் - நிவேதாவுக்கிடையே இருந்த நட்பு நாளுக்கு நாள் வளர்ந்து அன்னியோன்யம் அதிகரித்தது.

நிவேதாவும் 'காந்தன் சார்' என்று அழைப்பதை விடுத்து உரிமையாய் 'காந்தன்' என்று கூப்பிடத் தலைப்பட்டாள்.

''இது உங்க திறமைக்குக் கிடைச்ச பாராட்டு... அங்கீகாரம்! நீங்க இன்னும் பெரிய அளவில முன்னுக்கு வர வாய்ப்பிருக்கு.''

''நீங்க தயார் பண்ணின பிராஜெக்ட்டையும்... ஏற்கனவே நான் தயாரிச்சு வச்ச பிராஜெக்ட் திட்டங்களையும் சேர்த்து நாம்ப எம்.டி. கிட்டக் காட்டணும்.

''வெளிநாட்டுப் பயணத்தை முடிச்சுட்டு நேத்தைக்குத் தான் அவர் திரும்பி வந்திருக்காரு.

''இன்னிக்கு அவர் அலுவலகத்திற்கு வந்ததும்... நாம்ப ரெண்டு பேரும் அவரைச் சந்திச்சு இவைகளைக் காட்டிப் பேசிடலாம். சரியா?''

இன்னமும் அவளது கையை விடாமல் பற்றியிருந்தான் காந்தன்.

நாசூக்காய் மெல்ல கையை உருவிக் கொண்டாள் நிவேதா.

காந்தன் எதிர்பார்த்தது போலவே... அன்று காலை பதினொரு மணிக்குத் தனது அலுவலக அறைக்குள் புகுந் தான் வசீகரன்.

ஜெர்மனியில் நடந்த கருத்தரங்கத்தில் கலந்து கொண்டு விட்டு... அங்குள்ள மிகப் பெரிய நிறுவனத்துடன் வர்த்தக ரீதியாகக் கூட்டு வைத்துக் கொண்டதோடு... ஒரு ஒப்பந் தத்தில் கையெழுத்திட்டு விட்டு வந்திருந்தான் வசீகரன்.

மேஜையில் அவனது பார்வைக்காக கோப்புகள் நேர்த்தி யாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

''சார்! வணக்கம்... நீங்க கையெழுத்துப் போடாததாலே சில வேலைகள் தேங்கிக் கிடக்கு... நீங்க கையெழுத்துப் போட்டுட்டீங்கன்னா... மளமளன்னு ஃபைல்களை நகர்த்தி வேலையைச் சீக்கிரமா முடிச்சுடலாம். சார்.'' பவ்யமாய் பேசிய மேனேஜரை ஏறிட்டு விட்டு... கோப்புகளைப் புரட்டிக் கையெழுத்திடத் தொடங்கினான் வசீகரன்.

''நம்ம காந்தனும், நிவேதாவும் உங்களை சந்திக்கிறதுக் காக ரொம்ப ஆர்வமா காத்திருக்காங்க... வரச் சொல்லட்டுமா சார்?''

''ஓ... உடனே வரச் சொல்லுங்களேன்'' நிவேதா என்ற பெயரைக் கேட்டதும் 'குபுக்' என்று உற்சாகம் ஊற்றெடுத்தது.

நாடி நரம்புகளில் புது ரத்தம் பாய்ந்தது போன்று ஜிவ் வென்றிருந்தது.

எத்தனையோ அழகிகளை அவன் பார்த்திருக்கிறான். பணத்திற்காக கண்களாலேயே வலை விரித்துக் கொக்கிப் போட்டு இழுத்து வசீகரித்த அழகிகள் ஏராளம்...!

ஆனால் ஒப்பனை எதுவும் இல்லாத ஒப்பற்ற பேரழகி இவனை ஏறெடுத்தும் பார்க்காமல்... தானுண்டு தன் வேலை



உண்டு என்று கருத்தாய் தன் போக்கில்... நிவேதா செயல் பட்ட விதம்... அவனை ஆச்சரியத்தில் மூழ்கடித்தது.

மது குடித்த வண்டாய் மதி மயங்கிப் போய்... வசீகரனின் மனம் சதா அவளையே சுற்றி வந்தது.

தூங்கினாலும் அவளது முகம் தான்... விழித்தாலும் அவளது முகம் தான்... சதா சர்வ காலமும் அவளது நினைவு தான் அவனைச் சுற்றி வந்து வதைத்தது.

'கரன்ஸியை விட்டெறிந்தால் ஆயிரம் கட்டழகிகள் அவனது காலடியில் வந்து சரணடைவார்களே? இந்த நிவேதா எம்மாத்திரம்?

'ஏன் அவளையே நினைத்து நான் உருகி மருக வேண் டும்?'

வசீகரன் அடிக்கடி தன்னைத் தானே கடிந்து கொண்டான். மனதை மெல்ல திசை திருப்ப முயற்சிப்பான்.

மறு நிமிடமே நிவேதா அவன் மனதில் புகுந்து அழகான வண்ணக் கோலமிடுவாள்.

இவன் நீர் ஊற்றிக் கலைத்தபடி இருக்க... அவளோ வித விதமான வண்ணங்களில் தினுசு தினுசான கோலங்களை இடத்தான் செய்தாள்.

'காதல்' என்ற உணர்வில் அவனுக்கு எப்போதுமே நம்பிக்கை இருந்ததில்லை.

'திருமணம்' என்ற பந்தத்திலும் ஈடுபட மனம் விரும் பியதே இல்லை.

எந்தப் பிக்கல் பிடுங்கலும் இல்லாமல்... சுதந்திரப் பறவை யாய் பறந்து திரியத்தான்... இதுவரை அவன் விரும்பினான்.

வெளிநாட்டுக்குச் சென்றபோது கூட.... அவளைக் காண முடியாததால்... அவனது கண்கள் ஏங்கிப் பூத்து விட்டனவே!

சீனியர் என்ற முறையில் காந்தனுடன் நிவேதா சகஜமாகப் பேசிப் பழகியதைக் கூட.... அவனால் கொஞ்சமும் பொறுத்துக் கொள்ள முடியவில்லையே?

இந்த நூதன உணர்வுக்கு என்ன பெயர்?

அவளது அழகை அடைவதுதான் அவனது நோக்கமா?... இல்லை...!

அப்படியென்றால்... அவளை வேறொருவன் சொந்தம் கொண்டாடி விடக்கூடாது என்று மனம் பரிதவிக்கிறதே?

சொந்தம் கொண்டாடுவது என்ன? அவளிடம் காந்தன் சிரித்துப் பேசுவதையே அவனால் தாங்க முடியவில்லையே?

'அவள் எனக்குத்தான்... எனக்கு மட்டுமே சொந்த மானவள்.

'அவள் எனக்காகவே பிறந்திருக்கிறாள்.

'என்னவளிடம் யாரும் நெருங்கக் கூடாது. நெருங்கவும் விட மாட்டேன்.

'உள்ளத்தால் கூட யாரும் நெருங்கக் கூடாது. அப்படி நெருங்க வேண்டும் என்று நினைத்தால்... அவனை நிர்மூல மாக்கி ஒழித்துக் கட்டி விட்டுத்தான் மறு வேலை பார்ப்பேன்.'

உள்ளூர கறுவிக் கொண்டான் வசீகரன்.

'நான் வெளிநாட்டிற்குச் சென்றிருந்த சமயத்தில்.... காந்தனுக்கும் நிவேதாவுக்கும் இடையே காதல் கனிந்திருந் தால்...?

'இருவரும் ஒரே கேபினுக்குள் ஒன்றாக அமர்ந்து வேலை பார்ப்பவர்கள் ஆயிற்றே?

'ஊகூம்...! நானும் அழகன் தான். பணத்திலேயே புரண்டு வளர்ந்த கோடீஸ்வர இளைஞன் ஆயிற்றே?

'எந்தவொரு பெண்ணும் சிறந்த ஒன்றைத் தானே தேர்ந் தெடுப்பாள். அப்படிப் பார்த்தால்... நிவேதா நிச்சயமாய் என்னைத் தானே தேர்ந்தெடுப்பாள்?

'இந்த வசீகரனை நிராகரிக்க... எந்தப் பெண்ணுக்காவது மனம் வருமா என்ன?



'விழிகளாலேயே காதல் வலை வீசிப் பார்த்து விட வேண்டியது தான்!'

'ஒருவேளை... காந்தனை அவள் விரும்பித் தொலைத் திருந்தால்...? காந்தன் இந்த உலகத்திலிருந்து காணாமலே போய் விடுவான். அவனை அழித்து விட்டுத்தான்... நான் மறுவேலை பார்ப்பேன்.'

பற்களை நறநறத்தபடி முணுமுணுத்தவன்... சுழல் நாற்காலியில் நிமிர்ந்து அமர்ந்து... அவர்களது வரவுக்காகக் காத்திருந்தான்.

## 8

"வணக்கம் சார்" காந்தனும் நிவேதாவும் ஒரு சேர உள்ளே நுழைந்து ஜோடியாக அருகருகே அமர்ந்தார்கள்.

இதழ்க் கடையில் சிறு முறுவல் பூக்க... அமர்ந்த நிவேதாவைக் கண்டதும், வசீகர னின் மனம் பல குட்டிக் கரணங்களைப் போட்டது.

மகிழ்ச்சியைக் கட்டுப்படுத்தி உள்ளத்தை ஒரு முகப் படுத்துவது மிகவும் கடினமாக இருந்தது.

மறுகணம் அவர்கள் பவ்வியமாய் நீட்டிய கோப்புகளை வாங்கிப் புரட்டத் தொடங்கினான்.

"இது நிவேதாவுக்கு அளிக்கப்பட்ட முதல் புராஜெக்ட் சார்! புதுசா வேலைக்குச் சேர்ந்தவங்களோட... முதல் புராஜெக்ட் அப்படின்னு சொன்னா... யாரும் நம்ப மாட்டாங் சார்!

"நிவேதா அளித்த விளக்கம், இவங்களோட அணுகுமுறை விவரங்களை விரல் நுனியில் அடக்கி இருக்கிற விதம், இவங்க புத்திசாலித்தனம்... எல்லாம் பிரமிக்க வைக்குது சார்" காந்தன் சொல்லிக் கொண்டே போனான்.

வசீகரனின் முகமெங்கும் திருப்தி ரேகைகள் படர்ந்தன.

''இதுக்கெல்லாம் காரணம் காந்தன் தான் சார்! ஒரு சீனியரா இருந்து இவர் வழி நடத்தின விதமும்... இவர் பயிற்சி அளித்த விதமும்... இவர் கொடுத்த ஊக்கமும் தான் என்னை நல்ல முறையில் புராஜெக்ட்டை தயார் பண்ண வச்சிருக் குன்னு... நான் நம்பறேன் சார்.''

காந்தனைப் பற்றி அவள் பேசும்போது... அவளது முகம் அசாத்திய பளபளப்போடு மின்னுவதைக் கூர்ந்து கவனித் தான் வசீகரன்.

''இவங்க ரொம்ப தன்னடக்கமா பேசறாங்க சார். அடிப் படையில இவங்க ஒரு திறமைசாலியா இருக்கிறதால தான்...''

காந்தன் பேசி முடிக்கும் முன் இடைமறித்தாள் நிவேதா.

''இல்ல சார்! அடி மக்கா இருக்கிறவங்க கூட.... இவர் கிட்ட பயிற்சி எடுத்துக்கிட்டாங்கன்னா... அவங்களையும் திறம் படச் செயல்பட வச்சுடுவாரு காந்தன்... அதுதான் நிஜம்.''

''உம்... வெரிகுட்! ஒருத்தருக்கொருத்தர் விட்டுக் கொடுக் காம பேசறீங்க... பாராட்டுக்கள்!

''ரெண்டு கோப்புகளையும் பார்த்தேன். நீங்க ரெண்டு பேரும் தயாரிச்ச புராஜெக்ட் திட்டங்கள் ரொம்ப அற்புதமா இருக்கு.

''கண்டிப்பா இது வெற்றியடைஞ்சு அமோக லாபத்தை அள்ளித் தரும்... நான் ஜெர்மனிக்குப் போயிருந்தேன் இல்லையா?

''நம்ம கம்பெனி தயாரிக்கிற புராஜெக்ட்டுக்கு அங்க நல்ல வரவேற்பு இருக்கு... புது ஒப்பந்தத்துல கையெழுத்துப் போட்டிருக்கேன்.

''நிறைய ஆர்டர்ஸ் கிடைச்சிருக்கு. உங்களை மாதிரி திறமைசாலிகள் போட்டி போட்டுக் கொண்டு... இதே மாதிரி உத்வேகத்துடன் செயல்பட்டீங்கன்னா... நம்ம கம்பெனி



கூடிய விரைவிலேயே 'நம்பர் ஒன்' நிலையை எட்டிப் பிடிச்சுடும்னு நம்பறேன்.

''அப்புறம் இன்னொரு விஷயம்... எங்க எஸ்டேட் பங்களா வுக்குப் பக்கத்துல... எங்கம்மா வரலட்சுமி அம்மன் கோவிலைக் கட்டியிருக்காங்க...

''அடுத்த வாரத்துல கோவிலுக்குக் கும்பாபிஷேகம் நடக்கப் போகுது... அதற்கு மறுநாள் பங்களாவுல ரொம்ப சிறப்பா எங்க பேரண்ட்ஸுக்கு அறுபதாம் கல்யாணம் நடத் தணும்னு... நான் திட்டமிட்டிருக்கேன். உங்களை விழாவுக்கு 'ஸ்பெஷலா' அழைக்கிறேன்.

''நம்ம நிறுவனத்துல வேலை பார்க்கிற அத்தனை ஊழியர்களுக்கும் 'அழைப்பு' உண்டு.

''அதிலேயும் குறிப்பா... உங்க ரெண்டு பேரையும் எங் கப்பா, அம்மா கிட்டே அறிமுகப்படுத்தி வைக்கப் போறேன்.

''ஆபீஸ் சார்பா ரெண்டு நாள் பிக்னிக் கிளம்பிப் போறோம்னு... வீட்டுலே சொல்லி வச்சுடுங்க நிவேதா!''

மந்தகாசமாய் முறுவலித்தான் வசீகரன்.

'பல நிறுவனங்களைக் கட்டி ஆளும் முதலாளி... பெரிய கோடீஸ்வரன்... எந்த பந்தாவும் இல்லாமல் இவ்வளவு சகஜமாகப் பேசுகிறானே?

'தன்னிடம் வேலை பார்க்கும் ஊழியர்களிடம் இவ்வளவு மரியாதையாகப் பேசுகிறானே?

'அவனது அந்தஸ்திற்கும் செல்வாக்கிற்கும் கால் தூசு பெறாதவர்களை மதித்து... தனது அப்பா அம்மாவிடம் அறிமுகம் செய்து வைக்கத் துடிக்கிறானே?

'திறமைசாலிகள் கண்ணில் பட்டு விட்டால்... அவர்களைத் தட்டிக் கொடுத்து ஊக்கம் கொடுத்து... மரியாதையாக நடத்தி கவுரவிக்க வேண்டும் என்று விரும்புகிறானே?

'அவன் விழிகளில் பணக்கார வர்க்கத்தினருக்கே உரிய அலட்டலோ, அலட்சியமோ சிறிதும் தென்படவில்லையே?

'மாறாக... கனிவும், மரியாதையும் தானே ததும்புகின்றன'.

வியப்பின் விளிம்பிற்கே சென்று விட்டிருந்தாள் நிவேதா.

''ச... சரிங்க சார்.''

''எங்களுக்கு இவ்ளோ முக்கியத்துவம் கொடுத்து... விழாவுக்குத் தனிப்பட்ட முறையில நீங்க அழைச்சிருக் கீங்க... பெரிய முதலாளி கிட்டேயும் அம்மா கிட்டேயும் அறிமுகப்படுத்தப் போறேன்னு சொன்னீங்களே?... மனசுக்கு ரொம்ப ரொம்ப சந்தோஷமா இருக்கு சார்!'' என்றபடி சட்டென்று எழுந்து கொண்டான் காந்தன்.

இருவரும் கைகளைக் கூப்பி விட்டு மெல்ல வெளி யேறினர்.

'நிவேதாவின் அழகும், திறமையும், புத்திசாலித்தனமும்... காந்தனை கொக்கிப் போட்டு இழுத்து விட்டன போலும்!

'அவளும் காந்தனின் திறமையைப் பற்றி புகழ்ந்து பேசுகிறாள்.

'காந்தனின் மீது அவள் காதல் வயப்பட்டிருப்பாளோ?

'ஊகூம்! இதை என்னால் ஜீரணித்துக் கொள்ளவே முடி யாது. காந்தனை விட... சகல விஷயங்களிலும் நானே உயர்ந் தவன்!

'நிவேதா என்னைத் தவிர... இந்த உலகில் யாரையும் நேசிக்கக் கூடாது. நேசிக்கவும் விட மாட்டேன்.

'காந்தனுக்கு ஒரு மரண அடி கொடுக்க வேண்டுமே? என்ன செய்யலாம்? எப்படி காயை நகர்த்தலாம்?'

வசீகரனின் மூளை நரித்தனமாய் யோசித் தது.

## 9

கருநீல வண்ணப் பருத்திப் புடவை, நிவேதாவிற்கு பாந்தமாய் பொருந்தி அவளது தாழம்பூ நிறத்தைத் தூக்கலாய்க் காட்டியது.



''என்னை ஆசீர்வாதம் பண்ணும்மா'' என்றபடி மரகதத்தின் கால்களில் விழுந்து நமஸ்கரித்தாள்.

''தீர்க்காயுசா சவுபாக்கியவதியா இரும்மா'' அவளது நெற்றியில் குங்குமத்தை இட்டு... உச்சந்தலையை ஆசை யுடன் தடவினாள் மரகதம்.

அன்று ஞாயிற்றுக்கிழமை... மெஸ்ஸுக்கு விடுமுறை என்பதால் தாயம்மாவும் பூங்காவனமும் வேலைக்கு வர வில்லை.

லீலாவும் நீலாவும் இரவு வெகு நேரம் கண் விழித்துப் படித்ததால்... இன்னமும் எழுந்து கொள்ளவில்லை.

நேற்றிலிருந்து மரகதத்தின் முகம் பேயறைந்தாற் போலி ருந்தது.

காரணம் கேட்டால்... மழுப்பலான பதில் தான் வருகிறது.

''அம்மா! என்னாச்சு? உன் முகமே சரியில்லையே? உடம்பு கிடம்பு சரியில்லையா?

''எதுவா இருந்தாலும் என் கிட்ட மறைக்காம சொல் லும்மா... லீலாவும் நீலாவும் ஏடா கூடமா ஏதாவது எதிர்த்துப் பேசிட்டாங்களா?

''எனக்கு மனசே சரியில்லை. தயவு செய்து சொல்லும்மா'' கெஞ்சினாள் நிவேதா.

''ஒண்ணுமில்லைடா. பிறந்த நாளும் அதுவுமா நீ ஏன் மனசைப் போட்டுக் குழப்பிக்கிறே? கோவிலுக்குப் போயிட்டு உன் பேருக்கு அர்ச்சனை பண்ணிட்டு வா...

''மாமா கிட்ட ஆசீர்வாதம் வாங்கிக்கோ... சாமான்கள் வாங்க சந்தைக்குக் கிளம்பிப் போயிடுவாரு...

''கோவிலுக்குப் போயிட்டு அப்படியே... ராமசாமி தாத்தா வீட்டுக்குப் போயி... பெரியவங்க கிட்ட ஆசீர்வாதம் வாங் கிக்கோ!

''நீ கோவிலுக்குப் போயிட்டு வர்றதுக்குள்ளே... உனக்குப் பிடிச்ச பப்பாளி அல்வாவை செய்து வச்சுடறேன்.

''இட்லிக்கு வடைகறி வச்சுடவா? இல்ல... தக்காளி தொக்கு பண்ணிடவா?''

''எனக்காக எதையும் இழுத்துப் போட்டுச் செய்ய வேணாம்மா. வாரம் முழுவதும் 'மாங்கு... மாங்கு'னு வேலை செய்யறது பத்தாதா? இன்னிக்கு நல்லா ஓய்வெடும்மா...

''சாவகாசமா எழுந்து சாதத்துல பழங்குழம்பை ஊத்திப் பிசைஞ்சு உன் கையால உருண்டை திரட்டிக் குடு... தேவார்மிதமா இருக்கும். அது போதும்.

''எப்படியோ நான் கேட்டதுக்கு பதிலே சொல்லாம பேச்சை மாத்திட்டே... 'ஒண்ணுமே இல்லை'ன்னு நீ சப்பை கட்டு கட்டினாலும் ஏதோ விவகாரம்... உன் மனசைப் புதுசா பாதிச்சிருக்குன்னு... எனக்கு நல்லாவே புரியுதும்மா...

''என் கிட்ட சொன்னா... பாரம் குறையுமில்லையா? ஏன் மறைக்கிறேன்னு தான் காரணம் புரியாம தவிக்கிறேன்...''

''அப்போ நான் வரேன் அம்மா'' தழுதழுத்தபடி பேசி விட்டு... கதம்பச் சரத்தை சுருட்டி வைத்து... உதிரிப் பூக்களை அள்ளி அர்ச்சனைக் கூடைக்குள் வைத்துக் கொண்டு கோவிலுக்குக் கிளம்பினாள் நிவேதா.

கோவிலில் கூட்டம் அதிகமில்லையாதலால்... விரைவாக அர்ச்சனையை முடித்துக் கொண்டு... நேராக காந்தனின் வீட்டிற்குச் சென்றாள்.

சிறு கேட்டைத் திறந்து கொண்டு உள்ளே சென்றாள். வீட்டின் கதவு திறந்து தானிருந்தது.

''தாத்தா...'' பதிலில்லை.

''பாட்டிம்மா... பாட்டிம்மா.''

''வீட்டைத் திறந்து போட்டுட்டு எங்கே போயிட்டாங்க பெரியவங்க...?'' மெல்ல முணுமுணுத்தபடி உள்ளே புகுந்தாள்.

''அட... வாங்க நிவேதா! தாத்தாவோட நண்பருக்கு கொள்ளுப் பேரன் பிறந்திருக்கானாம்... அதான்... ரெண்டு



பேரும் பார்த்துட்டு வரலாம்னு போனாங்க... வர்ற நேரம் தான்!

''இன்னிக்கு விடுமுறையாச்சே? பொழுதே போகலை... பின்பக்கத்துத் தோட்டத்துல களையெடுத்து... வேண்டாத கிளைகளை வெட்டி சுத்தப்படுத்தலாம்னு தோணிச்சு.

''தோட்டத்துல வேலையா இருந்தேன். உங்க குரல் கேட்டதும் ஓடி வந்தேன். உட்காருங்க நிவேதா.''

காந்தனின் முழங்கையிலும் பனியனிலும் தோட்டத்து மண் அப்பிக் கிடந்தது.

''இரண்டொரு வாட்டி இங்க வந்திருக்கேன். அவசரமா போயாச்சு... நம்ம வீட்டையும் தோட்டத்தையும் சுத்திப் பார்க்கலாமா காந்தன்?''

அவள் உரிமையாய் 'நம்ம வீடு' என்று குறிப்பிட்டது... அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது.

''தாராளமா வந்து பாரேன். வா நிவேதா'' மனதில் மகிழ்ச்சி கும்மாளமிட்டதில்... அவனும் உரிமையாய் ஒருமையில் அழைத்தான்.

''அந்தக் காலத்துல கட்டப்பட்ட வீடு தான். முன்னோர்கள் ஆண்டு அனுபவிச்சு... எத்தனையோ நல்லது கெட்டதைப் பார்த்த வீடு...

''வீட்டை இடிச்சுட்டு இந்தக் காலத்துக்கு ஏத்தபடி நவீன முறையில கட்டிக்க வேண்டியது தானே?'ன்னு... நண்பர்கள் எல்லாரும் சொல்றாங்க.

''இந்தக் காலத்துக்குத் தகுந்தாப்பல குளியலறையிலும் அடுக்களையிலும் சில வசதிகள் செய்திருக்கேன். தரைக்கு டைல்ஸ் போட்டிருக்கேன். அவ்வளவு தான்!

''மத்தபடி எதையும் இடிச்சு மாத்தலை. பழமையிலும் ஒரு அழகு இருக்கு இல்லையா? பெரியவங்க வாழ்ந்த வீடே ஒரு கோவில் மாதிரி இல்லையா?

''எனக்கு இடிக்க மனசு வரலையே நிவேதா!''

பெரிய கூடம்... அதன் நடுவே தொங்கிய ஊஞ்சல். இடது பக்கம் ஒரு அறை - வலது பக்கம் இன்னொரு சிறு அறை.

பின்னால் ஓடிய தாழ்வாரத்தைத் தாண்டித்தான் முற்றம்.

திருடன் உள்ளே குதிக்க இயலாது பலத்த பாதுகாப்புடன் குறுக்கே போடப்பட்ட கம்பித் தடுப்புகள் - முற்றத்திலே கை, கால் அலம்பிக் கொள்ள ஒரு சிறு தொட்டி.

முற்றத்தின் எதிரே சிறு கூடம் அதை ஒட்டினாற் போல் சமையலறை; பின் கதவைத் திறந்து வெளிப்பட்டால்... அம்மிக் கல்லும் கல் உரலும் பதித்த கம்பி கேட் போட்ட பின் வராந்தா... அதற்கப்பால் சிறு தோட்டம்...

நான்கு தென்னை மரங்கள், சிறு வேப்ப மரம், நெல்லிக் காய் மரம், மாமரம்... தொட்டிகளில் வளர்க்கப்பட்ட ரோஜாச் செடிகள்.

பூஜைக்கு என்று நடப்பட்ட பவள மல்லி மரமாகி... பக்கத்தில் இருந்த கிணற்று மேடையில் பூக்களை உதிர்த்துக் கொண்டிருந்தது.

''மாடிக்கு வா நிவேதா! அங்கே தான் என் அறை இருக்கு!''

மேல் பகுதியில் அவனது அறை. ஒரு சிறு முன்னறை. உள்ளடங்கிய குளியலறை இத்யாதி இருந்தன.

சுவரோடு பதிந்திருந்த அலமாரியில் நிறைய புத்தகங்கள் அணிவகுத்திருந்ததைப் பார்த்ததும்... அருகில் சென்று ஆவலாய் பார்வையைப் பதித்தாள்.

ராமகிருஷ்ண பரம ஹம்சர், அரவிந்தர், புத்தர், விவே கானந்தர், மகாத்மா காந்தி, கார்ல் மார்க்ஸ், பாரதியார், அப்துல் கலாம், கீட்ஸ், ஷெல்லி, வைரமுத்து என்று உயர்ந்த கவிஞர்கள், சிந்தனையாளர்களின் பல புத்தகங்கள் அங்கு கம்பீரமாய் நின்றபடி... காந்தனின் இலக்கிய ஆர்வத்தையும், ரசனையையும் பறைசாற்றின.



'காந்தன் இவ்வளவு உயர்ந்த சிந்தனையாளனா?' நிவே தாவிற்குள் பெரும் வியப்பும் ஆச்சரியமும் கை கோர்த்தன.

ரசனை, சிந்தனை, திறமை, படிப்பு, மனித நேயம், பெரியவர்களிடம் காட்டும் பணிவு, அடக்கம்... என்று எல்லா விஷயங்களிலுமே இருவரது எண்ணங்களும் ஒரே அலை வரிசையில் இருப்பதை எண்ணி பிரமித்தாள்.

இருவரும் மவுனமாகப் படிகளில் மெல்ல இறங்கினார்கள்.

''என்ன நிவேதா? திடீர்னு மவுனமாயிட்டே?''

''உம்! இந்தக் காலத்துல இப்படி ஒரு இளைஞரான்னு ஆச்சரியமா இருக்கு. பழமை, பாரம்பரியத்தைப் போற்றிப் பாதுகாக்கணுங்கிற உங்க எண்ணம்... நீங்க வாசிக்கிற புத்தகங்கள்... தோட்டத்தைப் பராமரிக்கிற பாங்கு எல்லாமே ஆச்சரியமா இருக்கு.

''நிறைய விஷயங்கள்லே நாம்ப ஒத்துப் போறதை நினைச்சாலே... மனசுக்குள்ளே சந்தோஷமா இருக்கு...''

தழைந்த குரலில் அவள் பேசியதும் காந்தனுக்கும் குஷி பிய்த்துக் கொண்டு போனது.

''இதைத்தான் பெரியவங்க பூர்வ ஜென்ம பந்தம்னு சொல்லி வச்சாங்க போல... இன்னிக்கு என்ன திடீர் விஜயம்? காரணம் இல்லாம வரமாட்டியே நிவேதா?''

''இன்னிக்கு என்னோட பிறந்த நாள். இதோ இந்தப் புடவை அன்னிக்கு அம்மாவோட திவசத்துக்குப் படைச்சது தான். வீட்டுலே புது சுடிதார் எடுத்திருக்காங்க...

''எனக்கு என்னமோ இன்னிக்கு இதைக் கட்டினா... மீனாட்சி அம்மாவோட ஆசியே கிடைக்கும்னு தோணுச்சு. அதான்... நல்லா இருக்கா காந்தன்?'' அவனது விழிகளைப் பார்த்துப் பேசியபடி மெல்ல இறங்கியதாலோ... கால் தடுக் கியதாலோ... தடுமாறி விழப் பார்த்தாள்.

சட்டென்று அவளைத் தாங்கி அணைத்துக் கொண்டான் காந்தன்.

''பாத்து... பாத்து... ஜாக்கிரதை நிவேதா'' அவனது உடம் பெங்கும் பதற்றம் பரவியதை ரசித்தாள்.

''இந்தப் புடவையில நீ ரொம்பவே அழகா இருக்கே நிவேதா! இந்தக் காலத்துல இப்படியொரு பொண்ணான்னு நானும் ஆச்சரியப்படறேன்.

''பெரியவங்களை மதிச்சு அவங்க உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுத்து நடக்கிறே பாரு? எங்கம்மாவோட திவசத் துக்கு எடுத்த புடவையை... இன்னிக்குக் கட்டின பாரு?

''ஐ லவ் யூ ஸோ மச் நிவேதா.''

''நானும் தான் காந்தன்...'' அவனது அணைப்பிலிருந்து விலக அவளும் முயற்சிக்கவில்லை.

''இதோ என்னோட பிறந்த நாள் பரிசு'' அவளது நெற்றி யில் மென்மையாக இதழ் பதித்தவன்... இதற்கென்றே யுக யுக மாய் காத்திருந்தவன் போல அவளை இறுகத் தழுவினான்.

## 10

அணை உடைப்பெடுத்துக் கொண்டு பெருகும் வெள்ளம் போல... இதுவரை மூடி மூடிக் கட்டுக்குள் வைத்திருந்த காதலும், அன்பும் குபீரென்று வெளிப்பட்டு... அந்த இரு இளம் உள்ளங்களையும் தம் வசப்படுத்தின.

''காந்தன்... ஐ லவ் யூ'' நிவேதாவின் குரல் கிசுகிசுப்பாக வெளிப்பட்டது.

மீண்டும் அவளது நெற்றியில் இதழ் பதித்தான்.

இருவருக்குமே மனதிற்குள் மகிழ்ச்சி மழை பூப்பூவாய் தூறத் தொடங்கியது.

நிலவோடு நிலவாக மேகத்தோடு மேகமாகப் பறப்பதைப் போல உணர்ந்தனர்.

உள்ளங்கள் ஒன்றாகி... உலகையே மறந்து லயித்திருந் தவர்கள்... சீதம்மாளின் குரலைக் கேட்டு திடுக்கிட்டு விலகினார்கள்.



''காந்தன்! கூடத்துல அர்ச்சனைக் கூடை இருக்கே? யார் கொண்டாந்து வச்சாங்க?'' உரத்துக் குரல் கொடுத்தார் சீதம்மாள்.

சட்டென்று விலகி, படிகளில் தடதடத்துக் கீழே வந்தனர்.

''இன்னிக்கு நிவேதாவுக்கு பிறந்த நாளாம்... உங்க ரெண்டு பேர்கிட்டேயும் ஆசீர்வாதம் வாங்க வந்திருக்கா...

''வீட்டையும் தோட்டத்தையும் சுத்திக் காண்பிச்சட்டிருந் தேன். நீங்க வந்துட்டீங்க'' அவனையும் அறியாமல்... ஆசையாய் அவளை விழுங்கி விடுவது போல் பார்த்ததை... முதியவர்கள் கவனிக்கத் தவறவில்லை.

அந்தக் கரு நீல வண்ணப் புடவையும், குங்குமமாய் சிவந்திருந்த நிவேதாவின் கன்னங்களும்... 'உள்ளங்கை நெல்லிக்கனி' போல அப்பட்டமாய் அவர்களது காதலை வெளிப்படுத்தின.

ராமசாமியும் சீதம்மாளும் அர்த்த புஷ்டியுடன் ஒருவரை ஒருவர் பார்த்து முறுவலித்துக் கொண்டனர்.

''இரும்மா... தோ வந்துடறேன்'' என்றபடி நடந்த சீதம்மாள்... மறைந்த மீனாட்சியின் படத்தில் சூட்டியிருந்த முல்லைச் சரத்தைக் கழற்றி எடுத்து வந்தார்.

''துளிப் பூவை வச்சுட்டிருக்கியே நிவேதா! இன்னிக் காவது தலை நிறைய பூவை வச்சுக்கிட்டா என்னவாம்? திரும்பும்மா... நானே வச்சு விடறேன்.

''கூடிய சீக்கிரம் எங்க மீனாட்சிக்கு மருமகளாகி... இந்த வீட்டுக்கு வந்து நீ விளக்கேத்தணும்... ஒரு குறையும் இல் லாம மகராசியா இருக்கணும் ராஜாத்தி'' என்றபடி கூந்தலில் பூச்சரத்தைச் சூட்டி விட்டார்.

''பா... பாட்டிம்மா'' என்றபடி அவரது கால்களைத் தொட்டாள் நிவேதா.

''நிவேதா கண்ணு! உன்னை முதல் முறையா நான் பார்த்தப்பவே... நீ இங்க வந்து என்னை விட்டே பாரு... அப்பவே நெனச்சேன்.

''இந்தக் காலத்துல இவ்வளவு பணிவா பவ்வியமா இருக்காளே? இவளையே நம்ம பேரனுக்குப் பேசி முடிச்சா என்னன்னு தோணுச்சு...

''அந்த ஆசை நிறைவேறப் போகுது. இந்தத் தாத்தாவோட நளபாகத்தை நீ ருசிக்க வேணாமா? இன்னிக்கு என் கையால அவல் கேசரி செய்துடறேன்.

''சாப்பிட்டுட்டுத்தான் நீ போகணும்!'' அவளது உச்சந் தலையில் கையை வைத்து ஆசீர்வதித்து விட்டு உற்சாகமாக அடுக்களைக்குள் புகுந்தார் ராமசாமி தாத்தா.

''நல்ல நாளாப் பார்த்து அவங்க வீட்டுக்குப் போயி எல்லாத்தையும் பேசி முடிச்சுடலாம். சரியா காந்தன்? என்ன திருதிருன்னு முழிக்கிறே? பாட்டி தாத்தாவுக்கு எல்லாம் விளங்கிப் போச்சேன்னு முழிக்கிறியா?

''மலர்ந்த மல்லிகையோட வாசனையைப் பொத்தி வைக்க முடியாது. அது மாதிரி தான் காதலும்...!

''மூடி மறைச்சு வைச்சாலும் அது தன்னால காட்டிக் கொடுத்திடும். மூணு தலைமுறையைப் பார்த்தவங்க நாங்க... எங்களுக்கு இது கூடப் புரியாமப் போகுமா? மக்குப் பயலே'' சீதம்மாள் பேரனை அன்புடன் அதட்டி விட்டு அடுக்களைக் குள் தஞ்சமடைந்தார்.

சங்கோஜமாய் பார்வையைத் தழைத்திருந்தவளின் அருகில் வந்து நின்றான் காந்தன்.

''பெரியவங்க... பெரியவங்க தான்! ஒரு நிமிஷத்துலே நம்ம மனசைப் புரிஞ்சுகிட்டாங்க... பார்த்தியா?

''கூடிய சீக்கிரமே நம்மை சேர்த்து வைச்சுடணும்னு முடிவே பண்ணிட்டாங்க... பார்த்தியா?



''இனி ரொம்பவே கஷ்டம் நிவேதா, புரியுதா உனக்கு?''

புதிர் போட்டவனை... புரியாமல் புருவங்களை உயர்த்திப் பார்த்தாள் நிவேதா.

''இது நாள் வரைக்கும் இருந்தது வேற... இனிமே உன்னைப் பிரிஞ்சு என்னால ஒரு நிமிஷம் கூட இருக்க முடியாதுடா... ரொம்பக் கஷ்டம் தான். ஐ லவ் யூடா நிவேதா'' என்றபடி அவளது கையுடன் தனது கையைக் கோர்த்துக் கொண்டான்.

''பூ போலவே இருக்கே நிவேதா... மிருதுவாய் அழகாய்!''

உதடுகள் இவளது காதில் கிசுகிசுத்து விட்டு உள்ளங் கையில் அழுந்த முத்தமிட்டன.

சட்டென்று கையை உருவிக் கொண்டு நாசூக்காய் நகர்ந்து நின்று கொண்டாள்.

நான்கு விழிகளும் காதலுடன் மோதிக் கொண்டன.

நிவேதா தன் உயிருக்கும் மேலாக காந்தனை நேசித்தாள் என்பது நிஜம்!

ஆனால் விதி... வசீகரனின் ரூபத்தில் வந்து... அந்த உயிருக்கு உலை வைக்கத் தருணம் பார்த்துக் கொண்டிருந் ததை... அவள் எவ்விதம் அறிவாள்?

## 11

''**கா**ந்தன்! தோட்டத்துல ஒரு பன்னீர் ரோஜா பூத்திருந்ததே. நிவேதாவுக்கு அதைப் பறிச்சுக் குடுப்பா...'' சீதம்மாள் அடுக்களைக் குள் இருந்து குரல் கொடுத்தார்.

''நீயும் தோட்டத்துக்கு வாயேன்... பூவே... பூச்சூடவா என் நெஞ்சில் பால் வார்க்கவா...'' அவளுக்கு மட்டும் கேட்கும்படி... தழைந்த குரலில் பாடியபடி நடந்தவனைப் பின் தொடர்ந்தாள்.

''நீயே பறிச்சுக்கோ நிவேதா! பூக்களை நான் பறிக்கிறதே இல்ல... செடியிலேயே வச்சு அழகு பார்ப்பேன். பாட்டி தான் சாமி படத்துக்காக பறிச்சு வைப்பாங்க...

''நீ இங்கே வந்ததும் ரோஜாக்களை உனக்கு சூட்டி அழகு பார்க்க வேண்டியது தான்...''

பூவை மென்மையாக இலையுடன் சேர்த்துக் கிள்ளி... காதோரத்தில் செருகிக் கொண்டாள் நிவேதா.

''காந்தன்! நான் உங்க கிட்ட ஒண்ணு கேட்கணும்...''

''ஒண்ணு என்ன? ஆயிரம் கேள்வி கேளேன்'' விழிகளால் சிரித்தான்.

''எங்கப்பா... சரியில்லை... கிட்டத்தட்ட நானும் உங்க மாதிரி தான்! மூணு பொண்ணுங்களையும் வளர்த்து ஆளாக் கணும்னு... எங்கம்மா வயலினைத் தூக்கிப் போட்டுட்டுக் கரண்டியைக் கையில பிடிச்சாங்க...

''நம்ம தாத்தா மாதிரி தான்... அடுப்புல வேகாம வெந்து சமைச்சு மெஸ்ஸை நடத்தி எங்களை வளர்த்து ஆளாக்கினாங்க.

''இத்தனை வருஷங்களுக்கு அப்புறமும் இன்னமும் விடாமப் பிடிவாதமா மெஸ்ஸை நடத்திட்டிருக்காங்க.

''எனக்கும் கடமை இருக்கு காந்தன்... நான் வந்து...'' சட்டென்று கையை உயர்த்தி இடை மறித்தான்.

''புரியுது நிவேதா! நம்ம கல்யாணத்துக்கு அப்புறமும் நீ தொடர்ந்து வேலை பார்க்கலாம். நான் தடையேதும் சொல்ல மாட்டேன்.''

''ஒண்ணு சொல்லிக்க ஆசைப்படறேன். உன்னைக் கைப்பிடிச்சதுக்கு அப்புறம்... உங்கம்மாவுக்கு நான் மரு மகனா இல்ல... மூத்த மகனா இருக்கணும்னு பிரியப்படறேன்.

''மூத்த மகனா இருந்து... தங்கைகள் ரெண்டு பேரையும் நல்லாப் படிக்க வச்சு... நல்ல இடத்துல சீரும் சிறப்புமா கட்டிக் கொடுக்க வேண்டியது என் கடமை!

''எனக்கொரு தாயும் ரெண்டு தங்கைகளும் ஒரு சித்தப் பாவும் கிடைக்கப் போறாங்களேன்னு... நான் சந்தோஷப் பட்டுட்டு இருக்கேன்.



''இனிமே என்னைப் பிரிச்சுப் பார்க்காதே... மனசுக்கு கஷ்டமா இருக்கு நிவேதா.''

''கா... காந்தன்! எப்பேர்ப்பட்ட மனசு உங்களுக்கு? அடிவயித்துல சில்லுன்னு பாலை வார்த்தாப்பல... மனசுக்கு எவ்ளோ சந்தோஷமா இருக்கு தெரியுமா?''

''ஐ... ஐ லவ் யூ'' உணர்ச்சி வயப்பட்டவளாய் கண்கள் கலங்க சட்டென்று அவனது கையை எடுத்துத் தன் கன்னத்தில் பொருத்திக் கொண்டாள்.

''படிச்ச படிப்பு வீணாகக் கூடாது தான். அதனால முடிஞ்ச மட்டும் நீ வேலைக்கு வரலாம்... ஆனா அது நிரந்தரம் கிடையாதே. என்ன முழிக்கிறே?

''எத்தனை நாளைக்குத்தான் வேலைக்கு வந்துட் டிருப்பே? ஒரு குட்டி நிவேதாவோ... இல்ல குட்டி காந்தனோ ஜனிச்சுட்டா... நான் உன்னை வேலைக்குப் போக அனு மதிக்க மாட்டேன்.

''உடம்பை அலட்டிக்காம வீட்டுலே இருந்து குடும் பத்தைப் பார்த்துக்கிட்டு நம்ம வாரிசை கண்ணும் கருத்துமா ஆரோக்கியமா வளர்த்துக்கிட்டு... நீ நிம்மதியா இருக் கணும்னு உத்தரவு போட்டுடுவேன். நீ அதை மீறக் கூடாது. இப்பவே சொல்லிட்டேன்.'' விழிகளில் குறும்பு மின்ன அவன் பேசியதும்... நாணத்தில் அவளது முகம் செக்கர் வானமாய் சிவந்து போனது.

''இ... இல்ல காந்தன். நான் எப்பவும் உங்க மனசறிஞ்சு நடந்துப்பேன். உங்க வார்த்தையை என்னிக்கும் மீறவே மாட்டேன்.''

''இதை... இதைத் தானே எதிர்பார்த்தேன்'' என்றபடி செல்லமாய் அவளது தலையில் குட்டு வைத்தான்.

அரை மணி நேரம் கழித்து அவள் வீட்டிற்கு வந்தபோது... வாசலில் மாமா தணிகைவேலின் வண்டியைக் காணோம். அவர் இன்னமும் சந்தையிலிருந்து திரும்பவில்லை போலும்!

வராந்தா ஜன்னலோரமாய் நிறுத்தப்பட்டிருந்த இரண்டு சைக்கிள்களையும் காணவில்லை. லீலாவும் நீலாவும் சைக்கிள்களை எடுத்துக் கொண்டு... தோழியின் வீட்டிற்குப் படிக்கச் சென்று விட்டார்கள் என்பதைப் புரிந்து கொண்டாள்.

வாசற்படியருகே இருந்த ஒரு ஜோடி செருப்புகளைக் கண்டதும் சட்டென்று அவளது புருவங்கள் நெரிந்தன.

'இன்று மெஸ்ஸுக்குக் கூட விடுமுறை ஆயிற்றே? வீட்டில் யாருமே இல்லாத நேரத்தில் யாரோ ஒரு ஆள் வந்திருக்கானே? யாராயிருக்கும்?' யோசனையுடன் நடையில் செருப்புகளைக் கழற்றி விட்டு உள்ளே செல்ல எத்தனித்தவள்... சட்டென்று நின்றாள்.

அம்மா மரகதம் தேம்பித் தேம்பி அழும் சப்தம் கேட்டு துணுக்குற்றாள்.

''இத்தனை வருஷங் கழிச்சு வந்து... இப்படியொரு நிபந்தனையைப் போட்டு என்னை ஏன் இப்படிச் சித்திரவதை பண்றீங்க? இது உங்களுக்கே நியாயமா இருக்கா?''

''உங்களோட சேர்ந்து வாழ்ந்தா... என் பொண்ணுங்களை வளர்த்து ஆளாக்கி கரை சேர்க்க முடியாதுங்கிற எண்ணம் ஏற்பட்டதாலே தானே... துணிஞ்சு பிரிஞ்சு வந்தேன்?

''அந்தப் பாவி பொன்னம்பலத்துடன் சேர்ந்துகிட்டு மூக்கு முட்டக் குடிச்சுகிட்டு ஊதாரித்தனமா துட்டை வாரி இறைச்சுகிட்டுக் குடும்பத்தை நடுத்தெருவுல நிப்பாட்டினது பத்தாதா? கூழோ கஞ்சியோ குடிச்சுட்டு நானும் என் பொண்ணுங்களும் கவுரவமா வாழ்ந்திட்டிருக்கிறது உங்களுக்குப் பொறுக்கலையா?

''உங்களைக் கையெடுத்துக் கும்பிட்டுக்கிறேன். எங்களை நிம்மதியா வாழ விடுங்க.''

''என்ன மரகதம்? நான் சொல்றது எதையும் காதுலே வாங்கிக்காம பேசிட்டே போறே? என்னோட நிபந்தனைக்கு ஒப்புக்கலைன்னா... என்ன நடக்கும் தெரியும்ல?''



''உனக்கு இதிலென்ன நிம்மதி கெடப் போகுது? நான் உன்னோட கணவன். இந்தக் குடும்பத்துக்குத் தலைவன். உங்களோட வந்து தங்கிக்கிறேன். மெஸ்ஸோட வரவு செலவு கணக்குகளை நான் பார்த்துக்கிறேன். குடும்பத்தை நான் நிர்வகிக்கிறேன்.

''மெஸ்ஸை கொஞ்சம் கொஞ்சமா 'டெவலப்' பண்ணி ஹோட்டல் மாதிரி கொண்டு வந்துடலாம். என் நண்பன் பொன்னம்பலத்தின் மகன் ரவி மரக்கடை நடத்திட்டு இருக்கான். பொறுப்பான இளைஞன். கை நிறைய சம்பாதிக்கிறான்.

''அவனுக்கு நம்ம மூத்த மக நிவேதாவைக் குடுத்துடுவோம். கட்டின சேலையோட அனுப்பிச்சா போதும்னு... பொன்னம்பலம் சொல்றான். அப்புறம் என்ன?

''பெரியவளைக் கரையேத்திட்டா... நமக்குப் பெரிய பாரம் குறையுமில்லையா? ஆயிரம் தான் இருந்தாலும் ஒரு பொம்பளை வாழாவெட்டியா இருந்தா... சமுதாயத்துல அவளுக்கு மதிப்பு இருக்காது. இது உனக்கே தெரியும்.

''என்னை வீட்டோடு சேர்த்துக்க மறுத்தால்... உன் பொண்ணுங்களுக்குக் கல்யாணமே நடக்காது. அவளுங்களை நான் கரையேறவே விட மாட்டேன்.

''சம்பந்தம் பண்ண வர்றவங்க கிட்டே.... என்ன முழிக்கிறே. அவங்க வீடு தேடிப் போய்க் கூட.... உன்னைப் பத்தி... உன் மகளுங்களைப் பத்தி கன்னா பின்னான்னு வத்தி வைப்பேன்.

''பொண்ணுங்க வாழ்க்கை நல்லாயிருக்கணுமா? இல்ல... காலத்துக்கும் கரையேறாம முதிர் கன்னிகளா முடங்கிக் கிடக்கணுமா? நீயே முடிவு பண்ணிக்க...

''கொஞ்ச நாளா நான் நடையா நடக்கிறேன். நீ நல்ல பதிலா சொல்லாம கண்ணைக் கசக்கிட்டிருந்தா என்ன அர்த்தம் மரகதம்?

அப்பா சாந்தமூர்த்தி பேசியதைக் கேட்ட நிவேதாவுக்கு... கோபத்தில் மனம் கொந்தளித்தது.

ரத்தம் கொதித்தது. ஆத்திரத்தில் நாடி நரம்புகள் முறுக்கேறின.

## 12

சில நாட்களாக அம்மாவின் முகத்தில் சோகத்தின் சாயல் படிந்திருந்தது. 'பேயறை' பட்டாற் போல் முகத்தில் இனம் புரியாத பீதி படர்ந்து காணப்பட்டதே?

அதற்கு இது தான் காரணமா? நான் கேட்டதற்கு தக்க பதிலைச் சொல்லாமல் பூசி மெழுகி சமாளித்து விட்டாளே? மின்னல் வேகத்தில் எண்ண அலைகள் எழும்பி இதயத்தில் மோத... விருட்டென்று நடந்து கூடத்திற்குள் வந்தாள்.

''எங்கம்மாவோட பேரைச் சொல்றதுக்குக் கூட உங்களுக்கு யோக்கியதை கிடையாது. இத்தனை வருஷம் இல்லாத அக்கறை திடீர்னு பொத்துக்கிட்டு வந்துடுச்சா?

''குடும்பத்தை நீங்க நிர்வகிக்கப் போறீங்களா? உங்க சங்காத்தமே வேண்டாம்னு தானே... நாங்க ஒதுங்கி இருக்கோம்.

''உங்களை எங்கப்பாவா இல்ல... ஒரு மனுஷனாகக் கூட நாங்க மதிக்கலை. பொன்னம்பலம் நல்லா ஊத்திக் கொடுத்து உசுப்பேத்தி அனுப்பிட்டானா?

''என்னோட கல்யாண விஷயத்தைப் பத்தி முடிவெடுக்கிற உரிமையை... உங்களுக்கு யார் கொடுத்தாங்க?

''பெத்தப் பொண்ணுங்களோட வாழ்க்கையை நாசமாக்கிடுவேன்னு பிளாக் மெயில் பண்றீங்களா?

''சேச்சே! பெத்த தகப்பன் தானா நீங்க? நீங்க எங்களுக்கு அப்பா கிடையாது. இந்தக் குடும்பத்துக்கு வில்லன்...''



''அம்மாடி நிவேதா! கொஞ்சம் பொறுமையா இரும்மா... இல்லேன்னா இவரு ஒண்ணு கிடக்க ஒண்ணு செஞ்சிடுவாரு... உங்க எதிர்காலம் பாதிக்கப்படக்கூடாது. நிதானமா பேசி ஒரு முடிவுக்கு வருவோம்'' அம்மா மரகதம் தழுதழுத்தாள்.

''நிறுத்தும்மா! இனியும் பொறுமையா இருந்தா... அந்தப் பொறுமைக்கே பெருமை இல்ல... இவர் சொல்றதுக்கு எல்லாம் தலையாட்டி இவரை கல்லாவுல உட்காத்தி வச்சு... இவரு கை காட்டற பொன்னம்பலத்தோட மகனுக்கு என்னைக் கழுத்தை நீட்டச் சொல்றியா?

''என்ன தைரியம் இருந்தா மனைவியையும் பெத்த பொண்ணுங்களையும் பத்தி கன்னா பின்னான்னு... சம்பந்தம் பண்ண வர்றவங்க கிட்ட சொல்வேன்னு பிளாக் மெயில் பண்ணுவாரு?

''சொல்லட்டும். சொல்லிப் பார்க்கட்டும். அதுக்குப் பயந்துகிட்டு இந்தக் குடிகாரரோட அராஜகத்தைச் சகிச்சுக்க முடியாது.

''அந்த மரக்கடை ரவியைப் பத்தி நாமளும் கேள்விப் பட்டிருக்கோமே! அவனொரு குடிகாரப் பொறுக்கி ராஸ்கல்... என்னை அவனுக்கு தாரை வார்த்துட்டு... லீலா நீலாவையும் பணக்கார சல்லிப் பசங்களா பார்த்துக் கட்டி வச்சுட்டா... இந்த ஆளு சந்தோஷமா தினமும் தண்ணியிலேயே மிதக்கலாம்னு கணக்குப் போடுறாரா?

''இதோ பாருங்க... மரியாதையா வீட்டை விட்டு வெளியே போறீங்களா? இல்ல... போலீஸுக்கு போன் பண்ணட்டுமா? குடிச்சுட்டு வந்து கலாட்டா செய்து மனரீதியா எங்களை சித்திரவதை செய்றீங்கன்னு புகார் பண்ணுவேன்.

''மகளிர் பாதுகாப்பு மன்றத்தில உங்களைப் பத்தி ஒரு வார்த்தை சொன்னா... என்ன நடக்கும்னு தெரியும்லே? காலத்துக்கும் கம்பி எண்ணிக்கிட்டு களி தின்னுக்கிட்டு உள்ளேயே கிடக்க வேண்டியது தான்...

"இனிமே இந்தப் பக்கமே நீங்க தலை வச்சுப் படுக்கக் கூடாது. எங்கம்மாவையோ... இல்ல என் தங்கச்சிகளை வர்ற வழியிலோ பார்த்துப் பேசி ரகளை பண்ணலாம்னு நெனச்சா... அடுத்த நிமிஷம் நீங்க உள்ளே இருப்பீங்க...

"பெத்த தகப்பனாச்சேன்னு பார்க்கிறேன். அதுவும் எங் கம்மாவோட முக தாட்சண்யத்துக்காக உங்ககிட்ட இவ்ளோ தூரம் மரியாதையா பேசிட்டிருக்கேன்.

"இல்லேன்னா... நீ பிளாக் மெயில் பண்ணினதுக்கும்... பெத்த பொண்ணுங்களை கேவலமா நாறடிக்க நினைச்ச துக்கும்... உன் முகத்துல காறித் துப்பி... மோர் கடையற மத்தால மண்டையை உடைச்சுத் துரத்தியிருப்பேன்.

"போ... போயி பொன்னம்பலத்துக்கிட்டேயும் சொல்லி வையி... என் தோழியோட அப்பா டி.ஜி.பி.யா இருக்காரு... அவரு கிட்ட இப்பவே சொல்லி வச்சுடுவேன்."

"எங்களுக்கு ஏதாவது பிரச்சினை வந்தா... அதுக்குக் காரணம் எங்கப்பாவும் அவரோட சகாக்கள் தான்னும் அழுத் தமா சொல்லிடுவேன்.

"மீறி வாலாட்ட நினைச்சா... மொத்தமா உள்ளே போயிட வேண்டியது தான். தெரிஞ்சுக்கோ... திரும்பிப் பார்க்காம ஓடிப் போயிடு... இல்ல நான் பொல்லாதவளாயிடுவேன்" கர்ஜித்தபடியே தூணோரமாய் கிடந்த மரத்தை கையி லெடுத்துக் கொண்டு ஓங்கினாள் நிவேதா.

அழகிய விழிகளில் தீப்பொறி பறக்க... வெறி கொண்ட வளைப் போல் ஆவேசமாய் மத்தை ஓங்கியபடி நின்றவளைக் கண்ட சாந்தமூர்த்திக்கு பயத்தில் அடிவயிறு சுருண்டது.

குலை நடுங்கியது. வெளிநாட்டு சரக்கின் உபயத்தால் உச்சந்தலையில் ஏறியிருந்த போதை... மகள் போட்ட போடில் மாயமாய் இறங்கித் தொலைந்தது.

தோளிலிருந்து சரிந்த துண்டைப் பொறுக்கியெடுத்துக் கொண்டு விழுந்தடித்துக் கொண்டு சாந்தமூர்த்தி செல்வ தையே... மூச்சிரைக்கப் பார்த்துக் கொண்டிருந்தாள் நிவேதா.



"நி... நிவேதா! என்னை மாதிரியே பொறுமையா இருப்பே... இன்னிக்கு இப்படிக் கோபப் பட்டுட்டியேம்மா?

"அடிபட்ட பாம்பு சும்மா இருக்காதுன்னு சொல்வாங்க... பொண்ணு நம்மை அவமானப்படுத்தித் துரத்தி விட்டா ளேங்கிற கோபத்துல... அந்த மனுஷன் உங்க எதிர்கால வாழ்க்கைக்கே வேட்டு வச்சுட்டாருன்னா?

"நான் அதுக்கு பயந்துகிட்டு தான் இத்தனை நாளா என்ன பண்றதுன்னு தெரியாம... கையைப் பிசைஞ்சுட்டிருந்தேன்.

"ஆனா நீ இப்படி ஒரே போடா போட்டுட்டியேம்மா..." தாயின் இதழ்கள் துயரத்தில் துடிப்பதைக் கண்டாள் நிவேதா.

மனதின் வலி... தாயின் இடுங்கிய கண்களில் வெப்ப நீர் ஊற்றை உருவாக்கியது.

"என்னத்துக்கம்மா அழறே? தைரியமா இரும்மா... குலைக் கிற நாய் கடிக்காதும்மா... நான் உன்னை மாதிரி பொறுமை சாலி தான்.

"அவசியப்படும்போது பெண்கள் துணிஞ்சு எதிர்த்து நிக்கணும். இல்லேன்னா நம்மைப் புழு மாதிரி கால்லே போட்டு நசுக்கிடுவாங்க... இந்த மனுஷன் ஒண்ணும் பண்ண மாட்டாரும்மா..."

"போலீஸ் ஸ்டேஷன், டி.ஜி.பி. புகார்னு வார்த்தைகளை விட்டதும்... பொட்டிப் பாம்பா அடங்கி ஓடினதைப் பார்த்தே இல்ல?

"இதுக்கும் மேல அவர் தொந்தரவு பண்ணினா... நான் சொன்னதைச் செய்வேன். வேற வழியில்லை... நீ அன்னிக்கே இதைப் பத்தி என்கிட்ட சொன்னா என்ன? இவரை வீட்டுக் குள்ளே சேர்த்துக்கிட்டு... இருக்கிற நிம்மதியையும் பறி கொடுத் துட்டு வேதனைப் பட்டுக்கிட்டு இருக்க முடியுமாம்மா?

"என்னத்துக்கு இப்படி பயந்து சாகறே? பெத்த தகப்பனே பொண்ணுங்க மேல களங்கத்தைச் சுமத்தினா... 'யார்

துணிஞ்சு படியேறி வந்து சம்பந்தம் பண்ணுவாங்கன்னு தானே பயப்படறே?''

''ஆ... ஆமாண்டி ராஜாத்தி! அதை நெனச்சு மனசு கனன்று கிட்டே இருக்கும்மா... பெத்த தகப்பனே இப்படி எதிரியா வந்து நிக்கிற கொடுமையை நெனைச்சு... உள்ளூர வெந்துட்டிருக்கேன் நிவேதா கண்ணு.''

பயத்தில் சில்லிட்டுப் போயிருந்த தாயின் கரத்தை ஆதுரமாகப் பற்றிக் கொண்டாள் நிவேதா.

''நீ எனக்கு அம்மா மட்டுமில்லே... என்னோட தோழி வழிகாட்டி, தத்துவ ஞானி... எனக்கு எல்லாமே நீ தானேம்மா? ராமசாமி தாத்தாவும் பாட்டிம்மாவும் நல்ல நாளாப் பார்த்து உன்கிட்ட வந்து... பொண்ணு கேட்கணும்னு நெனைக் கிறாங்க...

''கா... காந்தன் என்னை விரும்புறாரும்மா... எனக்கும் அவரைப் பிடிச்சிருக்கும்மா... அவர் இந்த வீட்டுக்கு ஒரு மூத்த மகனா இருப்பாரு... உன்னைத் தன்னோட தாயாகவும் லீலா - நீலாவை சொந்தத் தங்கைகளாகவும் பாவிக் கிறாரும்மா...''

''மனசிலிருந்து பெரிய பாரம் இறங்கினாப்பல இருக் கும்மா... அந்தத் தம்பி முதன் முதலா தாத்தா பாட்டியை அழைச்சுக்கிட்டு இங்க வந்தாரு பாரு... அப்பவே எனக்கும் உங்க மாமாவுக்கும் அந்தக் குடும்பத்து மேல ஒரு நல்ல அபிப்ராயம் வந்துடுச்சு...

''அப்பாடா... கனன்றுகிட்டே இருந்த மனசுலே சில் லுன்னு பாலை வார்த்தாப்பல இருக்கும்மா.''

அடுத்த சில தினங்களில்... பெரியவர்கள் கலந்து பேசி எளிய முறையில் வீட்டளவில் நிச்சயித்துக் கொண்டார்கள்.

பெரியவர்கள் திருமணத்திற்கு 'நாள்' குறித்தார்கள். ஆனால் வசீகரனோ காந்தனுக்கே 'நாள்' குறித்தான்.



# 13

ஜன்னலருகே நின்று தூரத்தே தெரிந்த திராட்சைத் தோட்டத்தையும், புகை படிந்த ஓவியமாய் நீண்டிருந்த மலைத் தொடர் களையும் வெறித்துப் பார்த்துக் கொண்டிருந் தார் வேதாசலம்.

''என்னங்க! உங்களுக்கு என்னாச்சு? உடம்பு கிடம்பு சரியில்லையா? உங்க முகத்தைப் பார்த்தா எதையோ பறி கொடுத்தாப்பல இருக்கு...

''எதுவா இருந்தாலும் என்கிட்ட மனசு விட்டுச் சொல் வீங்களே? இப்போ என்னத்துக்கு மறைக்கிறீங்க? எதுவா இருந்தாலும் நான் தாங்கிப்பேன்.

''சமீப காலமா வசீகரனைக் கண்டாலே... உங்க முகம் இருண்டு போயிடுது. அவன்கிட்ட ஆசையா பாசமா முன்ன மாதிரி நீங்க பேசறதே இல்ல... என்னாச்சுங்க? வியாபாரத்துல ஏதாவது நஷ்டம் வந்துடுச்சா?

''இன்னிக்கு எனக்கு விவரம் தெரிஞ்சாகணும். ஏற்கனவே எனக்கு பி.பி. இருக்கு... என்னவோ ஏதோங்கிற பதட்டத்துல கூடிய சீக்கிரத்துலே எனக்கு மாரடைப்பே வந்துடும் போலி ருக்கே?'' குரல் பிசிறடிக்கப் புலம்பிய மனைவி வரலட் சுமியை மவுனமாக ஏறிட்டார் வேதாசலம்.

''இன்னிக்கு எனக்கு ரெண்டுல ஒண்ணு தெரிஞ் சாகணும்! வியாபாரத்துல பெருத்த நட்டம் ஏற்பட்டிருச்சா? வசீகரன் மேல உங்களுக்கு அதனால தான் கோபமா? ஒண்ணும் பேசாம மவுனமா என்னையே வெறிச்சுட்டிருந்தா என்னங்க அர்த்தம்?''

''நான் காரணம் சொல்லாம இருந்தா அந்தப் பதட்டத்துல உனக்கு மாரடைப்பு வந்துடும்னு நீ சொல்றே? நான் அந்தக் காரணத்தைச் சொன்னா... உனக்கு அதிர்ச்சியில மாரடைப்பு வந்தடுமோங்கிற பயத்துல தத்தளிச்சுட்டிருக்கேன்.

''சரி... என்னிக்கிருந்தாலும் தெரியத் தானே போகுது? நம்ம சீமந்த புத்திரன் வசீகரன் நமக்கு பத்து வருஷம் கழிச்சுப் பிறந்தானே? அவன் பிறக்காமலேயே இருந்து தொலைக்கக் கூடாதான்னு என் மனசு அடிச்சுக்குது.

''அவன் நம்ம கிட்ட பணிவும் பாசமுமா இருக்கான். அத்தனை நிறுவனங்களையும் திறமையா நிர்வகிக்கிறான்னு நெனச்சுட்டிருந்தோம் இல்லையா?

''வியாபாரத்துல அவன் நஷ்டத்தை ஏற்படுத்தினாக்கூட அனுபவம் பத்தலை... போனாப் போகுதுன்னு நாம பாட்டுக்கு இருக்கலாம்.

''அவன் ஒரு பரம சாது கண்ணியமானவன்னு பெருமைப் பட்டோம் இல்லையா? அந்த நம்பிக்கையில அவன் மண் ணள்ளிப் போட்டுட்டான் வரலட்சுமி.

''அதிர்ச்சியா இருக்குல்ல? நம்ம மூணாறு எஸ்டேட் பங்களாவுக்குப் போயிருந்தேன் இல்லையா? சமையல்காரன் சிவனாண்டியோட முகமே சரியில்லை... என்கிட்டே எதையோ சொல்றதுக்குத் தவிக்கிறது மாதிரி தெரிஞ்சது.

''தனியா கூப்பிட்டுப் பேசினேன். அவனோட கடைசி பொண்ணு நாக மணி ரொம்ப வெகுளியா சுத்து வேலை பார்த்துட்டுத் திரியுமே...? அ... அவளை வசீகரன் நாசப் படுத்திட்டானாம்.

''சிவனாண்டி 'கோ'ன்னு அழுதான். விசுவாசமான வேலைக்காரன். நம்ம கவுரவத்துக்கு பங்கம் வந்துடக் கூடா தேன்னு... விஷயத்தை மூடி மறைச்சுக் கோபத்தை அடக் கிட்டிருக்கான்.

''அவனோட நல்ல மனசுக்கு நம்ம குடும்பமே கடமைப் பட்டிருக்கு. அவன் குடும்பத்துக்கு கணிசமான தொகையை குடுத்துட்டு வந்தேன். முதல்லே வாங்கிக்க மறுத்தான். கெஞ்சிக் கூத்தாடினதும் வாங்கிக்கிட்டான்.



''அவனோட மூனு பொண்ணுங்களுக்கும் கல்யாண ஏற்பாடு நடந்துட்டு இருக்கு. நம்ம சர்க்கரை ஆலையில் வேலை பார்க்கிற தொழிலாளிகளுக்கு கட்டி வச்சுடலாம்னு ஒரு யோசனை!

''சீர் செனத்தி உட்பட அத்தனை செலவுகளையும் நான் தான் ஏத்து நடத்தப் போறேன். அவன் குடும்பத்துக்கு எவ்வளவு கொடுத்தாலும் தகும்.

''பெண் பாவம் பொல்லாதது இல்லையா? வசீகரன் செய்த பாவம்... ஈரேழு ஜென்மத்துக்கும் சும்மா விடாது.

''அதுக்கு அப்புறம் அவனோட டிரைவரை தனியா வரவழைச்சு துருவித் துருவி விசாரிச்சேன். பெண்கள் விஷயத்துல ரொம்ப மோசம்னு புரிஞ்சுகிட்டேன். நிறைய பெண்கள் கூட சகவாசம் இருக்காம்...

''கல்யாணப் பேச்சை நாம்ப ஆரம்பிச்சாலே அவன் எப்படித் தட்டிக் கழிக்கிறான் பார்த்தியா? எந்தப் பிக்கல் பிடுங்கலும் இல்லாம தறிகெட்டு அலையணும்னு நெனக் கிறானே? இவன் உருப்படுவானா?''

''என்னங்க இது? இ... இப்படி ஒரு குண்டைத் தூக்கிப் போட்டுட்டீங்களே? என்னால நம்பவே முடியலையே?''

திக் என்ற அதிர்வில் நெஞ்சில் கைவைத்த வரலட்சுமி நிலை குலைந்து சரிந்து பொத்தென்று சோபாவில் அமர்ந்தார்.

''எ... என்னங்க! போன வாரம் கும்பாபிஷேகம் நடந் தப்போ... வசீகரன் தன்னோட ஊழியர்கள் அத்தனை பேரை யும் வரவழைச்சிருந்தான் இல்லையா? நம்ம அறுபதாம் கல்யாணத்தை எவ்ளோ சிரத்தை எடுத்து நடத்தினான்?

''அப்பக் கூட ஒரு பொண்ணு... பேரு கூட நிவேதான்னு நெனக்கிறேன். கூடவே ஒரு தம்பியையும் அவன் நமக்கு அறிமுகப்படுத்தி வச்சானே? ஞாபகமிருக்கா?''

''அந்தத் தம்பி பேரு காந்தன்... அந்த மென் பொருள் நிறுவனத்துக்கே அவன் தான் பலம்... திறமையான கணினி

என்ஜினீயர்... அந்த நிவேதாவும் புதுசா வந்தவளா இருந்தாலும் நல்ல திறமைசாலின்னு சொன்னானே?''

''அவங்களே தான்! அவன் அறிமுகப்படுத்தி வச்சப்போ... வசீகரன் முகத்துல விளக்குப் போட்டாப்பல ஒரு வெளிச்சம் பரவியிருந்ததைப் பார்த்தேன்...

''அதுலேயும் அந்த நிவேதாவை ஆசை ஆசையா பார்வையாலேயே விழுங்கற மாதிரி பார்த்துட்டிருந்தான். சரி... இந்தப் பயல் மனசுல விருப்பம் இருக்கு போல... சாவகாசமா பேசி விஷயத்தைத் தெரிஞ்சுகிட்டு... அந்தப் பொண்ணையே இவனுக்கு நாம்ப கட்டி வச்சுடலாம்னு இருந்தேங்க...

''அதுக்குள்ளே இப்படியொரு நாராசமான செய்தி காதுல வந்து விழுந்திடுச்சே? அப்படின்னா... வசீகரன், அந்தப் பொண்ணை ஆத்மார்த்தமா நேசிச்சுக் கல்யாணம் செய்துக்கிடணும்கிற எண்ணத்துல பார்க்கலை போலிருக்கே?

''இதைப் பத்தி நீங்க வெளிப்படையா அவன் கிட்டே பேச வேண்டியது தானேங்க? உங்களுக்கு கண்டிக்கிறதுக்கு உரிமை இல்லையா என்ன?''

கொதித்துப் போய் கேட்டு விட்டார் வரலட்சுமி.

''என்னத்தைப் போய் கேட்கச் சொல்றே? டிரைவர் கிட்டே துருவித் துருவி விசாரிச்சுட்டேன். சின்னதா இருந்தா... முளையிலேயே கிள்ளி எறிஞ்சுடலாம்.

''ஆனா விஷயம் கை மீறிப் போயிடுச்சே? ஆழமா வேரோடிப் போன பின்னாடி நாம்ப என்ன செய்ய முடியும்? இந்த வெட்கக் கேட்டைப் போய் எப்படி வெளிப்படையா பேச முடியும்?

''அதனால் தானே உள்ளுக்குள்ளேயே மருகிக் கிட்டே இருக்கேன்.

''வேணும்னா நைச்சியமா பேசி அவனுக்கொரு கால் கட்டைப் போடலாம். அவனைக் கண்டிக்க முடியாது வரலட்சுமி!



''தோளுக்கு மேல வளர்ந்த பிள்ளையைத் திட்ட முடியுமா? 'ஆமாப்பா... நான் அப்படித்தான் நடந்துப்பேன்... உங்களால ஆனதைப் பார்த்துக்கோங்கன்னு மூஞ்சியில அடிச்ச மாதிரி பேசிட்டா... நாம்ப என்ன செய்ய முடியும். சொல்லு?

''நீ சொன்ன மாதிரி அந்த நிவேதாவை... வசீகரன் விரும்பினால் நாம்ப பேசி முடிவு பண்ணி கல்யாணம் பண்ணி வைக்கலாம் தான். ஆனா... அதுக்கு அந்த நிவேதா ஒத்துக்கணுமே? அவ மனசுல என்ன இருக்கோ?''

''அந்த நிவேதாவைப் பார்த்தா அழகா எளிமையா இருக்கா.. ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த பொண்ணு மாதிரி தான் தெரியுது. பெரிய கோடீஸ்வர வீட்டுப் பிள்ளையைக் கட்டிக்க... அவளுக்கு கசக்குமா என்ன?''

''என்ன நீ இப்படி பேசிட்டே? ஒரு பொண்ணாப் பொறந்துட்டு நீயே இப்படி எடை போடலாமா? எந்தப் பொண்ணும் காசு பணத்துக்காக சம்மதிக்க மாட்டா... மனசு... மனசு தான் அங்கே முக்கியம்! காசு பணத்தைப் பெரிசா மதிச்சா... அந்தப் பொண்ணுக்கும்... வசீகரனோட பட்டியல்லே இதுநாள் வரை இடம் பிடிச்ச பொண்ணுங்களுக்கும் வித்தியாசமே இருக்காது தெரிஞ்சுக்கோ... இந்த வம்சத்தோட கவுரவத்தைக் குழி தோண்டிப் புதைச்சுட்டிருக்கானே?

''வசீகரனோட மனசுல என்ன இருக்குன்னு முதல்லே தெரிஞ்சுகிட்டு... அப்புறம் அதைப் பத்தி யோசிப்போமே வரலட்சுமி'' என்று அந்தப் பேச்சுக்கு அத்துடன் முற்றுப் புள்ளி வைத்தார் வேதாசலம்.

சபாரி சூட்டை மாட்டிக் கொண்டு அலுவலகத்திற்குச் செல்லத் தயாராகி மாடிப் படிகளில் இறங்கி வந்த மகனை ஏறிட்டுப் பார்த்தார் வரலட்சுமி.

களையான மாசு மருவற்ற முகத்தைப் பெருமிதம் பொங்க இதுநாள் வரை பார்த்தவர் தான்... இப்போதோ பெற்ற

வயிற்றில் கனலை அள்ளிக் கட்டிக் கொண்டாற்போல்... திகு திகுவென்று ஆத்திரம் மண்டிக் கொண்டு வந்தது.

''வசீகரா... உன்னோட ஜாதகத்துல நேரம் காலம் கூடி வந்திருக்காம்... உடனே நல்ல பொண்ணா பார்த்துக் கல் யாணத்தை முடிச்சிடுங்க... இப்ப தவற விட்டா அப்புறம் அஞ்சு வருஷத்துக்கு ஒண்ணும் தகையவே தகையாதுன்னு நம்ம ஜோசியக்காரரு சொல்றாரு. நீ என்னப்பா சொல்றே?''

''என்னம்மா வழக்கமான பல்லவியைப் பாட ஆரம்பிச் சுட்டீங்களா? சரி... நான் அஞ்சு வருஷம் கழிச்சே பண்ணிக் கிறேனே'' கழுவிய நீரில் நழுவிய மீனாக மெல்லத் தவிர்க்கப் பார்த்தான் வசீகரன்.

''எங்களுக்கு அந்த நிவேதாவை ரொம்பப் பிடிச்சிருக்கு. பார்க்க பதவிசா பணிவா அடக்கமா இருக்காள்லே? உனக்குப் பிடிச்சிருக்கா சொல்லு?'' மிகச் சரியாக மையம் பார்த்துப் புள்ளி குத்தி விட்டார் வேதாசலம்.

சரேலென்று நிமிர்ந்து பார்த்த வசீகரனின் விழிகளில் சிறு 'திடுக்கிடல்' தெரிந்தது. உள்ளுக்குள் மகிழ்ச்சி வெள்ளம் கரை புரண்டோடியது.

''அ... அப்பா! உங்களுக்குப் பிடிச்சிருந்தா சரிப்பா... உண்மையைச் சொல்றதுக்கென்னப்பா? நா... நானும் எத்தனையோ இளம் பெண்களைப் பார்த்திருக்கேன். ஆனா யாரும் இந்தளவுக்கு என்னை வசீகரிச்சதில்லை அப்பா... கல்யாணத்துக்கு சம்மதிக்கிறேனப்பா.''

வேதாசலமும் வரலட்சுமியும் ஒருவரையொருவர் அர்த்த புஷ்டியுடன் பார்த்துக் கொண்டனர்.

கால் கட்டைப் போட்டு விட்டால்... இந்தக் கட்டிளங் காளை ஓரளவிற்கு அடங்கி விடுவான் என்ற நப்பாசை பிறந்தது.

ஆனால் விதி... தன் ஆடு புலி ஆட்டத்தை வித்தியாச மான முறையில் ஆடத் தொடங்கியது.



## 14

**கா**ந்தனுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியாய் இருந்தது. ஆசைப்பட்ட பெண்ணே விரை வில் தனக்கு மனைவியாகப் போகின்றாள் என்ற சந்தோஷம்...!

தாங்கள் தயாரித்த புராஜெக்ட் 'கிளிக்' ஆகி பலத்த வரவேற்பைப் பெற்றதுமல்லா மல்... பெருமளவு லாபத்தை அள்ளிக் குவித்துக் கொண் டிருந்தது.

''காந்தன் சார்! எம்.டி. உங்களைக் கூப்பிடுறாரு... உங்களை மட்டும் தான்'' அலுவலகப் பணியாள் கூறியதும்... நிவேதாவை ஊன்றிப் பார்த்து விட்டுக் கிளம்பினான்.

'அடுத்த புராஜெக்ட் விஷயமாக எம்.டி. கலந்துரையாடப் போகின்றாரோ?' என்ற நினைப்புடனே உள்ளே நுழைந்தான்.

''வணக்கம் சார்.''

''உட்காருங்க காந்தன்'' என்றபடி வெள்ளைத் தாளில் மும்முரமாய் எதையோ எழுதிக் கொண்டிருந்தான் வசீகரன்.

காந்தனின் பார்வை ஆவலுடன் அந்தக் காகிதத்தில் பதிந்தது. திக்கென்று அதிர்ந்து போய் வசீகரனின் முகத்தை ஏறிட்டான்.

'நிவேதா... நிவேதா... நிவேதா' என்று வித விதமான கோணங்களில் அவளது பெயரைச் சின்னதும் பெரியதுமாக ரசனையுடன் கிறுக்கிக் கொண்டிருந்தான்.

''காந்தன்! நிவேதா ஒரு அற்புதமான பெண் இல்லையா?

''அழகு... அழகுன்னா பேரழகு, திறமை, குணம்... அந்த மூணு விஷயங்களும் ஒருங்கே அமைஞ்ச பெண்ணை... இந்தக் காலத்துல பார்க்கிறது ரொம்ப அரிதான விஷய மில்லையா காந்தன்?''

''வாஸ்தவம் தான் சார்! சமீபத்துல எங்களுக்கு எளிய முறையில் நிச்சயதார்த்தம் நடந்தாச்சு... கூடிய விரைவில்

கல்யாணம்... நீங்க உங்க பெற்றோருடன் வந்து எங்களை வாழ்த்தணும் சார்'' பேச்சை திசை திருப்பினான் காந்தன்.

அலட்சியமாய் புருவங்களை மேலேற்றினான் வசீகரன்.

''நீங்க நிவேதாவை விரும்புறீங்கன்னு... நா அன்னிக்கே புரிஞ்சுகிட்டேன். உங்களுக்கு அவ நலன்லே... ஐ மீன்... அவளோட எதிர்காலத்துல அக்கறை இருக்கில்லையா?''

''அக்கறை மட்டுமில்ல... நான் அவ மேல உயிரையே வச்சிருக்கேன். எதுக்கு இதைப் பத்தி நீங்க கேட்கறீங்க?'' வெடுக்கென்று கேட்டான் காந்தன்.

''அவ மேல உயிரையே வச்சிருக்கீங்க தானே? அவ கார் பங்களான்னு மகாராணியா ராஜ வாழ்க்கை வாழ வேணாமா? அவ அமோகமா தேவதை மாதிரி வலம் வரணும்னா... நீங்க விலகிப் போகணும்.

''ஏன்னா... நான் அவளை விரும்பறேன். ஆயிரம் பெண் களை நான் சந்திச்சிருக்கேன். அவங்க கிட்ட 'நெருங்கி'ப் பழகியிருக்கேன். ஆனா... யாரும் இந்தளவுக்கு என் மனசைத் தொட்டதில்ல... நான் அவளைக் கல்யாணம் செய்துக்கணும்.

''இதுநாள் வரை கல்யாணம்கிற பேச்சை எடுத்தாலே தட்டிக் கழிச்சுட்டே இருந்தேன். என் பெற்றோருக்கும் அவளைப் பிடிச்சிருக்கு. நான் சம்மதிச்சுட்டேன். என் மனை வியா வரக்கூடிய தகுதி நிவேதாவுக்கு மட்டும் தானிருக்கு. இதுநாள் வரை கஷ்டப்பட்டவ... என்னைக் கட்டிக்கிட்டு சுகப்படணும்.

''நடந்ததை மறந்துட்டு விலகிப் போயிடுங்க. அதான் நல்லது. இல்லேன்னா எனக்குக் கிடைக்காத பொருளை... வேற யாருக்குமே நான் கிடைக்க விடாமப் பண்ணிடுவேன். நான் சொல்றது புரியுதா காந்தன்?'' அவனது விழிகளில் கொலை வெறித்தனம் கசிந்து கொண்டிருந்ததைக் கண்டவ னுக்கு... உள்ளூர திகில் ஊறியது.



சட்டென எழுந்து நின்றான். ''என் உயிருக்கு ஆபத்து வரும்னு நீங்க சொன்னாக் கூட.... நான் தைரியமா எதிர்த்துப் போராடுவேன். ஆனா... நிவேதாவை நீங்க ஏதாவது பண் ணிடுவீங்களோ... அப்படிங்கிற பயத்துல விலகிப் போறேன்.

''நீங்க நிவேதாவை ரொம்ப சீப்பா எடை போட்டுட்டீங்க... அவ பணத்துக்கு மசியக் கூடியவள் கிடையாதுங்கிறதை... அப்புறமா புரிஞ்சுப்பீங்க... ஒரு வேளை உங்க விருப்பத்துக்கு அவ சம்மதிச்சுட்டா... அப்பவும் நான் வருத்தப்பட மாட்டேன். அவ எங்கிருந்தாலும் நல்லா இருக்கணும்னு உள்ளூர வாழ்த்திட்டு தான் இருப்பேன். அவ கண் கலங்காம இருந்தா... அதுவே எனக்குப் போதும்.

''காலம் முழுக்கக் கஷ்டத்துலேயே உழன்ற பொண்ணு... உங்களைக் கைப்பிடிச்சு மகாராணியா வலம் வந்தா... எனக்கு சந்தோஷம்தான்!

''என் மனசுக்குள்ளே இருக்கிற நிவேதா நல்லவ... அப்பழுக்கில்லாத தேவதை... கள்ளம் கபடமறியாதவ... காசு பணத்தைத் துச்சமா நினைக்கிறவ... அவளை என் உயிர் உள்ளவரைக்கும் நான் நேசிச்சுட்டுத் தானிருப்பேன்.

''அதை உங்களாலத் தடுக்க முடியாது. நீங்க கோடீஸ் வரன் தான். உங்க பணத்தால எதையும் சாதிக்கலாம். சாதிச் சுட்டீங்க...!

''எங்க காதல் புனிதமானது. பவித்திரமானது. அதுக்கு சக்தி இருந்தால் எங்களைச் சேர்த்து வைக்கட்டும்.

''இதுக்கும் மேல நான் இங்கே வேலை பார்க்கிறது முறையில்லை... நான் என் சீட்டுக்குப் போய் ராஜினாமா கடிதத்தை எழுதிக் கொடுத்து அனுப்பி விடறேன்.

''ஒரு உண்மையான உழைப்பாளிக்கு நல்ல வெகுமதி தந்தீங்க. நன்றி!'' நடக்க எத்தனித்தவனை... வசீகரனின் குரல் தடை செய்தது.

''காந்தன்! உங்க ராஜினாமா கடிதம் கிடைச்ச உடனே... உங்களுக்கு முறையா சேர வேண்டியதையும் உங்க சான்றிதழ்களையும் மேனேஜர் கொண்டு வந்து கொடுத்துடுவாரு...

''நமக்குள்ளே நடந்த விஷயத்தை நிவேதா காது வரைக்கும் எட்டாமப் பார்த்துக்குங்க... அதான் எல்லாருக்கும் நல்லது.

''நீங்க விலகிப் போறதுக்குத் தோதான காரணத்தைச் சொல்லி சமாளிங்க... அவளை அடிக்கடி சந்திக்கிறதைத் தவிர்க்கப் பாருங்க...

''ஏன்னா... கூடிய சீக்கிரம் அவ மிசஸ். நிவேதா வசீகரனா ஆகப் போறவ... அது ஞாபகமிருக்கட்டும். ஆல் தி பெஸ்ட் காந்தன்'' என்று முறுவலித்தவனின் மென்னியை முறித்துப் போட வேண்டும் என்று... உள்ளூர எழுந்த கோபத்தைத் தட்டி அடக்கியபடி வெளியேறினான் காந்தன்.

வேலை மும்முரத்தில் கணினியில் பார்வையைப் பதித்த படி மூழ்கியிருந்த நிவேதாவை... நீர்த் திரையிட்ட விழிகளால் ஒரு கணம் ஏற இறங்கப் பார்த்து விட்டு... மௌன மாக தன் இருக்கையில் அமர்ந்து ராஜினாமா கடிதத்தை எழுதி முடித்து காகித உறையிலிட்டு... மிக முக்கியமான கோப்பு களை ஒழுங்கு படுத்தி அடுக்கி வைத்து விட்டு... விருட் டென்று வெளியேறி மேனேஜரின் அறைக்குச் சென்றான்.

அனுபவமும் திறமையும் வாய்ந்த இளைஞனை... நிறு வனம் இழக்கப் போகின்றதே என்ற கவலை... மேனேஜரின் முகத்தில் அப்பிக் கிடந்தது.

இருண்ட முகத்துடன் ராஜினாமா கடிதத்தைப் பெற்றுக் கொண்டவர் அவனிடம் ஒரு செக்கை நீட்டினார். மற்றொரு காகித உறையில் அவனது சான்றிதழ்களைத் திணித்து... மேசையின் மேல் வைத்தபடி அவனைத் தயக்கமாய் ஏறிட்டார்.

''மிக்க நன்றி மேனேஜர் சார்'' காகித உறையையும் செக்கையும் எடுத்துக் கொண்டு வலிய வரவழைத்துக் கொண்ட புன்னகையுடன் இதயம் கனக்க வெளியேறினான்.



கண்ணாடிக் கதவின் வழியே... வசீகரன் குரூரமாக இவனையே முறைத்துக் கொண்டிருந்தவன்... இவன் பார்த் ததும் மந்தகாசமாய் முறுவலித்தான். தாடை இறுக அலுவலக வாசலை விட்டு இறங்கினான் காந்தன்.

'ச்சீ! சிரித்துச் சிரித்து கழுத்தை அறுக்கும் கபட வேஷக் காரன். இவனுக்குப் போய் இத்தனை காலமாய் விசுவாசமாய் வேலை செய்தோமே?

'ஐயோ நிவேதா! நீ என்னவென்று நினைப்பாய்? உன்னை விட்டு விலகிச் செல்வதால் என்னைக் கோழை என்று மட்டும் நீ முடிவு செய்து விடாதே கண்ணே!

'நீ என் கண்ணின் கருமணி போன்றவள். அந்த நயவஞ் சகன் தன் வாயாலேயே 'எனக்குக் கிடைக்காத பொருளை... வேறு யாருக்குமே கிடைக்க விடாம நான் பண்ணிடுவேன்' என்றானே?

'அப்படியென்றால் அவன் உன்னைக் கொல்லக்கூடத் தயங்க மாட்டான் என்பது தானே அர்த்தம்?

'அவனால் எனக்கு எந்த ஆபத்து வந்தாலும் நான் தாங்கிக் கொள்வேன். என்னுயிரே போனாலும் நான் கவலைப்பட மாட்டேன்.

'ஆனால்... உனக்கு ஏதாவது ஒன்று என்றால் என்னால் தாங்கிக் கொள்ளவே முடியாது.

'உடம்பளவில் தான் விலகிச் செல்கிறேன் என் தேவ தையே! என் உயிர் உன்னிடத்தில் தான் இருக்கிறது என்பதை... நான் எவ்விதம் உனக்கு வெளிப்படுத்துவேன்?

'நம் காதல் முறிந்து விட்டது. நமக்கு இனி திருமணம் நடக்கப் போவது இல்லை என்ற உண்மை உனக்குத் தெரியும்போது... நீ எப்படியெல்லாம் துடிப்பாய் கண்ணே?

'இது கனவாக இருக்கக் கூடாதா? என்று என் உள் மனம் ஊமையாய் அழுது புலம்புவது உனக்குக் கேட்கிறதா நிவேதா?

'நம் காதல் தோல்வியடைந்து விட்டது என்று நினைக்கும் போது... இந்த பூமி இரண்டாகப் பிளந்து என்னை விழுங்கி விடக் கூடாதா? என்று ஏக்கம் பிறக்கிறது கண்ணே!

'விதி விட்ட வழி நடப்போம் நிவேதா! உனக்கு என் அம்மா மீனாட்சியும் உன் இஷ்ட தெய்வம் கவுமாரி அம்மனும்... நெஞ்சுறுதியையும் எதையும் தாங்கும் இதயத்தையும், தைரியத்தையும்... தந்தருளட்டும் என்று வேண்டிக் கொள் கின்றேன்.'

மனதில் உள்ள வேதனையை டைரியில் எழுத்தில் வடித்து கொட்டித் தீர்த்து விட்டு மேஜையில் தலை சாய்த்து அமர்ந்திருந்த காந்தனை... பாட்டி சீதம்மாள் பார்த்து விட்டுப் பதறினார்.

''காந்தன்! என்ன இப்படி இருக்கிறே? தலை வலிக்கு தாப்பா?''

''ஒண்ணுமில்ல பாட்டிம்மா... நீங்க எதுக்கு மாடியேறி வந்து சிரமப்படறீங்க?''

''செல்லை அணைச்சு வச்சுட்டே போலிருக்கு. கீழே உள்ள போன்லே நிவேதா பேசினா... உன் கிட்டப் பேசணும்னு சொன்னா... கொஞ்ச நேரம் கழித்து மறுபடியும் போன் பண்ணுவாளாம்... கீழே வர்றியாப்பா?''

''பாட்டிம்மா... நான் வெளியே கிளம்பிப் போயிட்டேன்னு சொல்லுங்க. வேற எதுவும் அவகிட்ட பேச வேணாம்... நைட்லே உங்க கிட்டேயும் தாத்தா கிட்டேயும் நான் விவரமா பேசறேன்... தயவு செய்து காபி, டிபன் எதுவும் இங்க எடுத்துட்டு வந்து தொந்தரவு பண்ணாதீங்க பாட்டிம்மா...

''கொஞ்ச நேரம் தனிமையில இருந்துவிட்டு வர்றேன். வந்து விவரமா காரணத்தைச் சொல்றேன்.''

உயிருக்கு உயிரான பேரன் காந்தன் விரைவில் உயிருக் குப் போராடப் போவதை அறியாத பாட்டி சீதம்மாள் மெல்ல மாடியை விட்டு இறங்கினார்.



## 15

விடியல் தன் முகவரியை பூமியில் பதித்த தருணத்தில்... சாரல் அடித்து முத்துக் குளித் திருந்த மரங்களில்... சிறு பறவைகள் தம் பாதங்கள் பதித்து பூபாளம் பாட ஆரம்பித்தன.

இரவெல்லாம் தூங்காமல் கவலையுடன் புரண்டு புரண்டு படுத்த நிவேதா... அதிகாலை மூன்று மணிக்கு மேல் மெல்லக் கண் அசந்தாள்.

வழக்கம் போல் நாலரை மணிக்கு தன்னிச்சையாய் விழிப்பு தட்டியது. தூக்கத்தைத் தொலைத்ததால்... விழிகள் இரண்டும் தீயாய் காந்தின.

இரு கைகளையும் பரபரவென்று தேய்த்து உள்ளங் கையில் பார்வையைப் பதித்தாள். பக்கவாட்டில் திரும்பிப் பார்த்தாள். படுக்கைகள் காலியாய்க் கிடந்தன.

உள்ளறையில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. போர்வையை மடித்து வைத்து விட்டு... கலைந்த கூந்தலைக் கோதி கொண்டையிட்டபடியே உள்ளறையை எட்டிப் பார்த்தாள்.

சுவரோரமாய் சாய்ந்து அமர்ந்தபடி நீலாவும் லீலாவும் சிரத்தையாய் படித்துக் கொண்டிருந்ததைக் கண்டதும்... அவளது முகம் ஆச்சரியத்தில் பூவாய் மலர்ந்தது.

''அட... ரொம்ப ஆச்சரியமா இருக்கே? காலையில் எந் திரிச்சு படிங்கம்மா'ன்னு எழுப்பி விட்டா... முனகிக்கிட்டே எழுந்திருப்பீங்க... நான் அந்தண்டை நகர்ந்ததும் புக்கை தலைக்கடியில வச்சு கும்ப கர்ணிங்க மாதிரி தூங்க ஆரம் பிச்சுடுவீங்க...

''இன்னிக்கு ரொம்ப அக்கறையா படிக்கிறதைப் பார்த் துட்டு... இடியும் மின்னலுமா பலத்த மழை பெய்யப் போகுது பாருங்க'' கிண்டலடித்த நிவேதாவை குற்ற உணர்வுடன் ஏறிட்டார்கள் லீலாவும் - நீலாவும்!

''அக்கா எங்களை மன்னிச்சுடுக்கா... இது நாள் வரை நாங்க பொறுப்பில்லாம நடந்துகிட்டு உங்களுக்கு வேதனையைக் கொடுத்துட்டோம். இப்போ எங்களுக்கு புத்தி வந்துடுச்சுக்கா'' தழுதழுத்தாள் நீலா.

''புதுசா ஞானம் பிறந்திருக்கே? காரணத்தை நான் தெரிஞ்சுக்கலாமா தங்கைகளா?'' சிரித்தாள் நிவேதா.

''நீ எங்களைக் கண்டிக்கும் போதெல்லாம் உன்னை நாங்க மனசுக்குள்ளே திட்டியிருக்கோம். அது ரொம்ப தப்புன்னு நாங்க நல்லாப் புரிஞ்சுகிட்டோம்.

''அன்னிக்கு உன் வார்த்தையை மட்டும் நாங்க மீறி யிருந்தா... பெரிய சிக்கல்லே மாட்டியிருப்போம். நல்ல காலம் எங்களை நீ தடுத்து, பிரச்சினையிலிருந்து காப்பாத்திட்டே'' என்று லீலா பேசப் பேச... நிவேதாவுக்கு தலையும் புரிய வில்லை... வாலும் புரியவில்லை.

''என்ன பிரச்சினை? என்ன சிக்கல்? எனக்கு ஒண்ணும் புரியவே இல்லையே? தெளிவா சொல்லும்மா.''

''போன ஞாயித்துக்கிழமை சாயந்தரம் நாலு மணிக்கு எங்க தோழி காவ்யாவைப் பார்க்கப் போறோம்னு கிளம்பி னோமே...? அப்பக்கூட நீ கண்டிப்பா நீங்க இன்னிக்கு வெளியே போகவே வேணாம். வீட்டிலேயே இருந்து படிங்கன்னு தடுத்துட்டியே?''

''ஆமா... அன்னிக்கு அப்பா வீட்டுக்கு வந்து தகராறு பண்ணிட்டுப் போனாரு... அந்தக் கவலை வேற... அத்தோட அன்னிக்கு மதியம் வரை காவ்யா வீட்டுலே உட்கார்ந்து தானே படிச்சீங்க...? மறுபடியும் சாயந்தர வேளையில வயசுப் பொண்ணுங்க வெளியே போறது நல்லாயில்லைன்னு தடுத்தேன். அதுக்கென்ன இப்போ?''

லீலாவும் நீலாவும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து விட்டு... சட்டென்று தமக்கையின் கால்களை இருபுறமும் வந்து கட்டிக் கொண்டார்கள்.



''எங்களை மன்னிச்சுருக்கா... காவ்யா ஒரு பணக்கார வீட்டுப் பையனை ரொம்ப விரும்பினா... அவன் பேரு மாதவன். அவன் தன்னோட நண்பர்களோட சேர்ந்து அவளைச் சந்திக்க வருவான். காவ்யா கூட நாங்க ஐந்தாறு தோழிங்க பட்டாளமா போயி... அவங்க சந்திக்கிறதை வேடிக்கைப் பார்த்துட்டு கலாய்ச்சுட்டு இருப்போம்.

''நூலகம், பூங்கா, தென்னந்தோப்புன்னு சுத்துவோம். காவ்யா - மாதவன் ஜோடியைப் பார்த்துட்டு எங்க கவனமும் சிதற ஆரம்பிச்சிடுச்சு.

''போன ஞாயித்துக்கிழமை அவங்க ரெண்டு பேரும் கல்யாணம் செய்துக்க முடிவு பண்ணினாங்க... ஊருக்கு ஒதுக்குப்புறமா இருக்கிற வயல் காட்டுப் பத்ரகாளியம்மன் கோவில்லே வச்சு திருட்டுத் தனமா தாலி கட்டணும்னு தீர்மானமாச்சு.

''காவ்யா, எங்க எல்லாத்தையும் கல்யாணத்துக்கு சாட்சியா கூப்பிட்டா... மாதவன் சார்பா அவனோட நண்பர்கள் வரத் தயாரா இருந்தாங்க. அன்னிக்கு ரொம்பவும் கண்டிப்பா நீ எங்களுக்கு தடை உத்தரவு போட்டுட்டதாலே... எங்களாலே போக முடியாமப் போச்சு.

''அந்த மாதவன் உண்மையில பணக்காரன் கிடையாதாம். அன்னிக்கு காவ்யா கூட மத்த தோழிங்களும் வயல் காட் டுக்குப் போனாங்கல்ல...? யாருமே வீட்டுக்குத் திரும்ப லையாம்.

''கோவில்லே இருந்து இருட்டற நேரத்துல வரப்புல நடந்து போய் ஜீப்புல ஏறிக்கிட்டே அவங்க எல்லாரும் போனதை... தூரத்துல இருந்து ஒரு விவசாயி பார்த்திருக் காரு.

''காவ்யா உட்பட மத்த தோழிங்களோட பெற்றோர்கள் கதறிக்கிட்டு இருந்தாங்க... வயசுப் பொண்ணுங்களைப் பத்தி விவரம் வெளியானா அவங்க எதிர்காலம் பாதிக்கப்

படும்னு... போலீஸ் வட்டாரத்துல மறைமுகமா தீவிரமா விசாரணை நடத்தினாங்க.

"மதுரை 'சுண்ணாம்பு கால வாசல்லே... அந்தப் பசங்களை வளைச்சுப் பிடிச்சு உதைச்சு... போலீஸ் எப்படியோ அந்தப் பொண்ணுங்களை மீட்டுக் கொண்டு வந்துட்டாங்க.

"அன்னிக்கு மட்டும் நீ எங்களைத் தடுக்காம இருந் திருந்தா... எங்க கதி என்னாயிருக்கும்? காவ்யாவைப் பார்த்தா நல்ல பொண்ணா தெரியலே அவளோட நட்பு வச்சுக்கா தீங்கன்னு... எங்களுக்கு நீ ஆரம்பத்திலேயே படிச்சுப் படிச்சு சொல்லியிருக்கே...

"நல்ல காலம்... மயிரிழையில தப்பிச்சோம். இல்லேன்னா காலத்துக்கும் அவமானப்பட்டு நிக்க வேண்டியது தான்!" அழுது கொண்டே கூறினாள் நீலா.

"இனிமே நாங்க அக்கறையா சிரத்தையா படிக்கப் போறோம். உன்னை மாதிரியே முதல் வகுப்புலே பாஸ் பண்ணி... மெரிட்டிலே காலேஜ் சீட் வாங்கணும்.

"நல்லபடியா படிச்சு முடிச்சு உன்னை மாதிரி நல்ல உத்தியோகத்துல கை நிறைய சம்பாதிக்கணும். பெரியவங்க மனசு குளிரும்படி நல்ல பேரெடுக்கணும். அதுதான் எங்க லட்சியம்!

"நீ இனிமே கண்டிக்கும்படி நாங்க நடந்துக்க மாட்டோம். எங்களுக்கு பொறுப்பு வந்தாச்சுக்கா... எங்களை நம்புவியா அக்கா?" பரிதாபமாக தமக்கையை ஏறிட்டாள் லீலா.

பாசத்தில் மனம் மெழுகாய் உருகிப் போக... குனிந்து இருவரையும் இறுக அணைத்துக் கொண்டாள் நிவேதா.

"நீங்க ரெண்டு பேருமே புத்திசாலிப் பொண்ணுங்க தான்! மனசை இழுத்துக் கட்டுக்குள்ளே வச்சு... கவனத்தைப் படிப்புல செலுத்தினா... நீங்க கண்டிப்பா முதல் மதிப் பெண்கள் வாங்கிடுவீங்க... எனக்கு நம்பிக்கை இருக்கு.



"மனசிலிருந்த பெரிய பாரம் குறைஞ்சாப்பல இருக்கு செல்லங்களா! நடந்ததை மறந்துடுங்க... அம்மா கிட்டே கண்டதையும் சொல்லி அவங்களைக் குழப்ப வேணாம்.

"நீங்க பொறுப்பான பொண்ணுங்களா மாறியிருக்கிறதைப் பார்த்து அம்மாவும் மாமாவும் ரொம்பவே சந்தோஷப் படுவாங்க, பாருங்களேன். சரி... நேரத்தை வீணாக்காம படிங்க" என்று கூறி விட்டு நீண்ட பெருமூச்செறிந்தபடி எழுந்தாள்.

தங்கைகளின் பொறுப்பற்ற தன்மையை நினைத்து இது நாள் வரை மனதை அரித்துக் கொண்டிருந்த கவலை மாயமாய் மறைந்து போக... குளியலறைக்குள் புகுந்து கொண்டாள் நிவேதா.

மனதில் புயல் போல் மையம் கொண்டு அவளை அலைக் கழித்த வேதனையிலிருந்து அவள் இன்னமும் விடுபட வில்லை தான்!

'காந்தன் ஒரு காரணமும் இல்லாமல் வேலையை விட்டுச் சென்றது ஏன்?

'என்னிடம் ஏன் ஒரு வார்த்தை கூடச் சொல்லாமல் சென்றார்?

'செல்லை சதா அணைத்தே வைத்து விட்டாரே?

'வீட்டிற்கு போன் செய்தால்... பாட்டியம்மாள் முன்னுக்குப் பின் முரணாக மழுப்பலாக பதில் சொல்கிறாரே?

'வேலையை விட்டு வந்ததும் இரண்டு மூன்று தடவை காந்தனின் வீட்டிற்குச் சென்றும் பிரயோஜனம் இல்லையே? அவர் வீட்டில் இருப்பதில்லையே?

'காந்தன் என்னைச் சந்திப்பதையே தவிர்க்கிறாரே?

'என்னவாயிற்று அவருக்கு? என்னிடம் ஏனிந்தக் கோபம்?

'நான் என்ன தவறு செய்தேன்?

'அவரது பாரா முகமும், மௌனமும் என்னை வேதனைப் படுத்தி வதைக்கின்றதே?

'இந்த விஷயத்தைப் பற்றி அம்மாவிடமும் மாமாவிடமும் சொல்லி ஆறுதல் தேட முடியாதே?

'வீட்டிற்கு வரப் போகும் மாப்பிள்ளை மனம் மாறி விட்டாரே?' என்று அவர்கள் கதி கலங்கிப் போக மாட்டார்களா?

'நல்ல பதவி கை நிறைய சம்பளமிருந்தும் வேலையை ஏன் உதறித் தள்ளி விட்டார் மாப்பிள்ளை? என்று கேட்டால் நான் என்ன பதில் சொல்வது?

'என்ன ஏது என்று காந்தனிடம் நிதானமாகத் தெரிந்து கொண்டு தான்... வீட்டில் விவரத்தைச் சொல்ல வேண்டும்.

'அதற்குள் உள்ளதைச் சொல்லி... வீணாக ஏன் வயதானவர்களைக் கலவரப்படுத்த வேண்டும்?'

மனதிற்குள் ஆயிரம் கேள்விகள் படையெடுத்த வண்ணம் இருந்தன.

'சாயந்தரத்தில் தானே எங்கோ நழுவிச் சென்று விடுகிறார்? குளித்து உடை மாற்றிக் கொண்டு உடனடியாக அவரது வீட்டிற்குச் சென்றால்... அவரைப் பார்த்துப் பேசி விடலாமே?' என்று தோன்ற... சடுதியில் குளித்து விட்டுத் தோட்டத்தில் மலர்ந்த செம்பருத்திப் பூக்களைப் பறித்து அர்ச்சனைக் கூடைக்குள் போட்டுக் கொண்டு கிளம்பினாள்.

''நான் கோவிலுக்குப் போயிட்டு வரேன் அம்மா... தாத்தா என்னைப் பார்க்கணும்னு பிரியப்பட்டாராம். காந்தன் சொன்னாப்பல... அப்படியே ஒரு நடை போயிட்டு வந்துடறேன்'' அடுக்களைக்குள் எட்டிப் பார்த்து அம்மாவிடம் பொய் மூட்டையை அவிழ்த்து விட்டு விட்டு... ஓட்டமும் நடையுமாகச் சென்றாள்.

அவள் எதிர்பார்த்தது போலவே... காந்தனைப் பார்க்க முடிந்தது. அவன் பேசிய வார்த்தைகள் ஒவ்வொன்றும்... நிவேதாவின் செவிகளில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றின.



## 16

காந்தனின் முகம் உணர்ச்சிகளை உள்ளடக்கிப் பாறையாய் இறுகிக் கிடந்தது.

துணி கொண்டு துடைத்தாற் போல்... நிவேதாவின் முகத்தில் முன்பு இருந்த மந்தகாசமும் மலர்ச்சியும் மறைந்து விட்டிருந்தன.

''வேலையை திடீர்னு ராஜினாமா பண்ணிட்டீங்களே காந்தன்? நீங்க இல்லாத ஆபீசுலே என்னால வேலை பார்க்கவே முடியலை. என்னைப் பார்க்காம பேசாம தவிர்த்துட்டு இருக்கீங்களே... என்ன காரணம் காந்தன்?''

''இது நாள் வரை அடுத்தவனுக்கு கை கட்டி சேவகம் பார்த்தாச்சு. நானும் என் நண்பனும் சேர்ந்து சொந்தமா ஒரு சாஃப்ட் வேர் நிறுவனத்தை ஆரம்பிக்கப் போறோம்.

''நம்ம கையில திறமை இருக்கு. நானே ராஜா நானே மந்திரின்னு சொந்தக் கால்லே நிக்கணும்னு ஆசை வந்தது... அந்தப் பணக்கார நண்பன் முதலீடு பண்றான்... திறமை என் கிட்ட இருக்கு...

''நாலு பேருக்கு வேலை வாய்ப்பு தந்து தொழில்லே முன்னேறிக் காட்டணும்கிற உத்வேகம் பிறந்திருச்சு.

''வியாபார நுணுக்கங்கள் அத்தனையும் நமக்கு அத்துபடியாச்சே? தொழில்லே முன்னேறி உசந்து பல சிகரங்களைத் தொடணும். அதான் என் லட்சியம்!

''அதுக்கு திருமண வாழ்க்கை தடையா அமைஞ்சிடுமோன்னு பயமா இருக்கு. நமக்கு எளிய முறையில வீட்டளவில தானே 'நிச்சயம்' ஆச்சு.

''அதை ஒரு கெட்ட கனவா நெனச்சு மறந்துடு. உன்னோட அழகுக்கும், திறமைக்கும் என்னைவிட எல்லா விதத்துலேயும் உசந்தவன் உனக்குக் கிடைப்பான் நிவேதா!

''தயவு செய்து என்னை மன்னிச்சுடு. மறந்துடு. அதான் உன் எதிர்காலத்துக்கு நல்லது. இதை உங்க வீட்டுல தெளிவா எடுத்துச் சொல்லிடு.

"இது விஷயமா யாரும் என்னை வந்து பார்க்க வேணாம். பேச முயற்சி பண்ண வேணாம். இது தான் என்னோட இறுதியான முடிவு!"

எதிர்கால வாழ்க்கையைப் பற்றி மனதில் ஆயிரம் ஆசைக் கோட்டைகள் கட்டி வைத்திருந்தாள் நிவேதா.

காந்தன் பேசப் பேச... அவளது ஆசைக் கோட்டைகள் எல்லாம் தூள் தூளாக நொறுங்கிச் சரிந்தன.

'காந்தனா? என் காந்தனா இப்படி எடுத்தெறிந்து பேசுகிறார்?' இது கனவா, நிஜமா என்று இன்னமும் ஐயமாகத் தானிருந்தது.

தன் மனதிலிருந்து அவளை வேரோடு பிடுங்கி எறிந்த அதிர்ச்சியில் இதயத்தில் ரத்தம் கசிந்தது.

விழிகளிலிருந்து உப்பு நீர் வெப்பத்துடன் பொங்கிப் பொங்கி வழிந்தது.

"உங்க லட்சியத்துக்கு திருமண வாழ்க்கை தடையா அமைஞ்சிடும்னு... நீங்க சொல்ற காரணத்தை என்னால ஜீரணிக்கவே முடியலை.

"என்னைத் தவிர்க்கணும்னு முடிவு பண்ணிட்டீங்க... அதனால தானே சப்பைக் கட்டு கட்டறீங்க? கடைசியில நீங்களும் ஒரு சராசரி ஆண் மகன்னு நிரூபிச்சுட்டீங்களே காந்தன்?

"எங்கப்பா உங்க கிட்டே வந்து என்னையும் என் குடும்பத்தையும் பத்தி கண்டபடி பேசினதை நீங்க நம்பிட்டீங்க... அதனால தானே என்னை நிராகரிக்கிறீங்க? சந்தேகம்கிற விஷ விதை உங்க மனசுல விழுந்தாச்சு இல்லையா?" குரல் பிசிறடிக்கப் பேசியபடி தேம்பினாள் நிவேதா.

"நிறுத்து நிவேதா! அப்பா இங்க வரவே இல்ல... சந்தேகப்படற அல்ப புத்தியும் எனக்கில்ல... இதுக்கு மேல என்னால எதுவும் சொல்ல முடியாது. சந்தர்ப்பமும் சூழ்நிலையும் என் வாயைக் கட்டிப் போட்டிருச்சு.



"இனி நமக்குள்ளே எதுவும் இல்ல நிவேதா... இனிமே நீ இங்க அடிக்கடி வந்தா... உன்னோட எதிர்கால வாழ்க்கை பாதிக்கப்படும். அவ்வளவுதான் சொல்லுவேன்" பேசியபடி முதுகு காட்டி நின்று கொண்டான் காந்தன்.

கண்களில் குபுக் என்று கண்ணீர் எட்டிப் பார்த்து வழிந்து 'சொல்லட்டுமா?' என்று வினவியது.

தன் மன வேதனை முகத்திலும் குரலிலும் வெளிப்பட்டு விடாமலிருக்க... காந்தன் பிரம்மப் பிரயத்தனம் செய்ய வேண்டியிருந்தது.

"உயிருக்குயிரா நாம்ப காதலிச்சோமே? 'பூர்வ ஜென்ம பந்தம் இது'ன்னு நீங்க அடிக்கடி சொல்வீங்களே? அதுக்கு என்ன அர்த்தம் காந்தன்? ஒரு நிமிஷத்துல நமக்குள்ளே இனி எதுவுமில்லைன்னு... முறிச்சுப் போட்டுட்டீங்களே காந்தன்? இது நியாயமா?" என்று கேட்டு விட்டு சேலைத் தலைப்பால் தன் வாயைப் பொத்திக் கொண்டு குமுறி அழுதாள் நிவேதா.

கல் தூணைப் போல் அசைந்து கொடுக்காமல்... திரும்பிக் கூடப் பாராமல் முதுகு காட்டி நின்றவனை... நீர்த் திரையிட்ட விழிகளால் ஒரு கணம் ஏற இறங்கப் பார்த்து விட்டு... திரும்பி நடந்தாள்.

கூடத்து சோபாவில் அமர்ந்திருந்த ராமசாமியும், சீதம்மாளும் குற்ற உணர்வுடன் தலை குனிந்து கொண்டனர்.

துக்கம் பந்தாய் எழும்பி தொண்டையை அடைக்க... அர்ச்சனைக் கூடையுடன் விருட்டென்று வெளியேறினாள் நிவேதா.

தாரை தாரையாக வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு வீட்டிற்குள் நுழைந்தாள்.

மெஸ்ஸிற்கு காலை டிபனை சமைத்து முடித்து சட்னிக்குத் தாளித்துக் காட்டிய மரகதம்... கைகளை முந்தானையில் துடைத்துக் கொண்டே வெளிப்பட்டு மகளை ஏறிட்டாள்.

''ராமசாமி தாத்தா என்னத்துக்கு உன்னைக் கூப்பிட்டு அனுப்பிச்சாராம்?''

''ஒ... ஒண்ணுமில்லைம்மா... சும்மா... சும்மா தான் பாக்கணும்னு தோணிச்சாம்.''

''எ... என்ன நிவேதா? கண்ணெல்லாம் சிவந்து வீங்கியிருக்கு? அழுதியா என்ன?''

''மூணு நாலு நாளா ஒத்தை தலை வலிம்மா... வலி தாங்க முடியலை...'' என்றபடி தாயின் கண்களை ஊடுருவினாள்.

''இந்தக் கல்யாணம் நடக்காதுன்னு... காந்தனே சொல்லிட்டாரும்மா எல்லாமே முடிஞ்சு போச்சும்மா...'' தொண்டை வரை ஓடி வந்த வார்த்தைகளை சிரமப்பட்டு விழுங்கினாள்.

''துளசி இலையைப் பறிச்சுப் போட்டு சுக்கு கஷாயம் வச்சுத் தரட்டுமா? நாலு நாளா நீ சரியாவே சாப்பிடறதில்ல... கன்னமெல்லாம் ஒட்டிப்போய்... கண்ணுல கருவளையம் விழுந்திடுச்சே?

''கூடிய சீக்கிரம் மணமேடையில உட்கார வேண்டிய பொண்ணு கல்யாணக் களையோட இருக்க வேணாமா?

''நல்லா சாப்பிட்டு தெம்பா பொலிவா இருக்கிறதை விட்டுட்டு... எதையோ பறி கொடுத்தாப்பல இருக்கியே?

''கல்யாணமாகிட்டா இந்தக் குடும்பத்தை விட்டுப் பிரிஞ்சு போக வேண்டியிருக்கும்னு பயப்படறியா? இதே ஊர்லே தான வாழ்க்கைப் படப் போறே?

''பத்து நிமிட நடையில நீ வீட்டுக்கு வந்துடலாம். அப்புறமென்ன? காந்தன் மாப்பிள்ளை எவ்ளோ தங்கமானவரு? அவரு இந்த வீட்டுக்கு 'மாப்பிள்ளை'யா இல்லை! மூத்த மகனா வரப் போறாருன்னு... தன் வாயாலேயே சொல்லிட்டாருல்ல?

''வரவர என் பேச்சையே நீ கேட்கிறதில்ல... காந்தன் மாப்பிள்ளைக்கு போன் போட்டு உன்னைக் கண்டிக்கச் சொன்னால் தான்... நீ சரிப்பட்டு வருவே... போலிருக்கு.''



மகளைச் செல்லமாய்க் கடிந்து கொண்டபடி நடக்க எத்தனித்தவளின் தோளைத் தொட்டாள் நிவேதா.

''வே... வேணாம்மா! அவருக்கு இனிமே போன் எதுவும் பண்ணிடாதே... ஏன்னா... இந்தக் கல்யாணம் நடக்காதும்மா... இந்த சம்பந்தத்துல தனக்குச் சம்மதம் இல்லேன்னு... காந்தன் தெளிவா கொஞ்ச நேரத்துக்கு முன்னே தான் சொன்னாரும்மா...''

''எ... என்னடி சொல்றே? விளையாடாதே நிவேதா... அவங்களா விரும்பித்தானே பொண்ணு கேட்டு வந்தாங்க? இப்போ திடீர்னு இஷ்டம் இல்லேன்னா... என்ன அர்த்தம்?

''நிவேதா! நான் பயந்தபடி ஆயிடுச்சு பார்த்தியா? உங்கப்பாவுக்கு விஷயம் தெரிஞ்சு போயி... காந்தன் வீட்டுக்குப் போயி ஒண்ணு கிடக்க ஒண்ணு சொல்லிட்டாரு போல...?

''அந்த மனுஷன் பேசின பேச்சைக் கேட்டுட்டுத்தான்... இவரு இந்த முடிவுக்கு வந்துட்டாரு போலிருக்கே? நிச்சயம் பண்ணின கல்யாணம் திடீர்னு நின்னு போயிட்டா... எல்லாரும் கண்டபடி பேசுவாங்களே? உன் எதிர்காலமே இருண்டு போயிடுமே நிவேதா!''

''இ... இல்லைம்மா! நானும் சந்தேகப்பட்டு இதே கேள்வியைத் தான் கேட்டேன். அப்பா அவங்ககிட்டே எதுவும் சொல்லலையாம்...

''இதுக்கு வேற ஏதோ வலுவான காரணம் இருக்கும்னு தோணுதும்மா'' என்றவள் காந்தன் திடீரென்று வேலையை உதறி விட்டுச் சென்றதையும் கூறினாள்.

அதீத அதிர்ச்சி காரணமாக மகள் பேசியதைக் காதில் வாங்கிக் கொள்ளாமல்... 'போச்சு! உன் வாழ்க்கையே இருண்டு போச்சே...' என்று புலம்பியபடி இருந்த மரகதம்... திடீரென்று தலையைப் பிடித்துக் கொண்டாள்.

மறுகணமே வேரற்ற மரம் போல் தடாலென்று கீழே விழுந்து மூர்ச்சையானாள்.

# 17

'பட்ட காலிலேயே படும். கெட்ட குடியே கெடும்' என்று சொல்லி வைத்தது போல... நிவேதாவுக்கு அடுத்தடுத்து விழுந்த அடிகளால்... மனதளவில் மிகவும் நொறுங் கிப் போய் விட்டிருந்தாள்.

உயிருக்குயிராக நேசித்த காந்தன்... திடீ ரென்று கை விட்டு விட்ட அதிர்ச்சியை உள் வாங்கி ஜீரணித்துக் கொள்ளும் முன்... அம்மா வேறு மயங்கி விழுந்து விட்டாளே?

''அ... அம்மா! என்னைப் பாரும்மா... எங்களுக்கு உன்னை விட்டா யாரும்மா இருக்காங்க? பாரும்மா... டென்ஷன் படாம இரும்மா...''

அம்மாவின் முகத்தில் தண்ணீர் தெளித்து... கன்னத்தில் தட்டி கை கால்களில் தேய்த்து விட்டதும்... மரகதம் மெல்ல விழிகளை மலர்த்தினாள்.

''அம்மா! தயவு செய்து மனசைப் போட்டு அலட்டிக் காதேம்மா... என்னைக் கஷ்டப்பட்டு வளர்த்து நல்லா படிக்க வச்சுட்டே... நானும் கை நிறைய சம்பாதிக்கிறேன்.

''என்னோட சொந்தக்கால்லே நிக்கிறேன். யாரையும் நம்பி நான் பிறக்கலை. நீ எதுக்கும் கவலைப் படாதே... பகவான் மேல பாரத்தைப் போடும்மா... நடக்கிறது நடக்கட்டும்.

''எங்களுக்கு நீ வேணும்மா... இரு... ஆட்டோவைப் பிடிச் சுட்டு வரச் சொல்றேன். ஆஸ்பத்திரிக்குப் போயிட்டு வரலாம்.''

''வேணாம் நிவேதா! கவலைக்கு மருந்து இருக்கா என்ன? கொஞ்ச நேரங் கழிச்சு பி.பி. மாத்திரை போட்டுக்கிறேன். விடியக் காத்தால நாள் தவறாம பூஜை பண்ணுவோமே?

''இப்படி ஆயிடுச்சே? அந்த அம்பாள் தான் கண் திறந்து பார்க்கணும்'' முணுமுணுத்தபடி படுக்கையில் சுருண்டு



படுத்துக் கொண்டாள். நீலாவும் லீலாவும் பள்ளிக்குச் சென்று விட்டனர்.

வழக்கம் போல் தணிகை வேல் மாமா கல்லாவைப் பார்த்துக் கொள்ள... பூங்காவனத்தையும் தாயம்மாவையும் மெஸ்ஸை கவனித்துக் கொள்ளும்படி ஏவி விட்டு... அம் மாவை வற்புறுத்தி ஆட்டோவில் ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்றாள்.

ஊசி போட்டு மருந்து மாத்திரைகளை எழுதிக் கொடுத்த டாக்டர் ''ரொம்ப பலவீனமா இருக்காங்க. பி.பி. இப்படி எகிறிப் போயிருக்கே? டென்ஷன் படாம பார்த்துக்கோங்க... இல்லேன்னா 'அட்டாக்' வந்துடும். ஜாக்கிரதையா கவனிச் சுக்கோங்க.

''நல்ல ஓய்வில இருக்கணும். தொடர்ந்து பி.பி. மாத்திரை எடுத்துக்கணும். தியானம் பண்ணச் சொல்லுங்க...'' என்று கறாராக சொல்லி விட்டிருந்தார்.

வீட்டிற்கு வந்ததும் அம்மாவை சாப்பிட வைத்து மாத் திரைகளை விழுங்க வைத்து விட்டு... அம்மா சற்று கண் அயர்ந்ததும் போர்வையைப் போர்த்தி விட்டு மெல்ல எழுந்தாள்.

நடந்த அமர்க்களத்தில் அலுவலகத்திற்கு போன் செய்து 'ஆபீசுக்கு வர முடியாத காரணத்தைக் கூடச் சொல்ல வில்லையே?' என்று தோன்ற... கவலையுடன் நெற்றியைத் தேய்த்தபோது... மீண்டும் விழிகளிலிருந்து கண்ணீர் பிர வாகமெடுத்து வழிந்தது.

'ட்ரிங்... ட்ரிங்... ட்ரிங்' மேஜையிலிருந்த அவளது செல் போன் அவசரக் குரலில் அழைப்பு விடுத்தது.

திரையில் மின்னி மின்னி சிரித்த நம்பர் புதிதாய் தோன்றவே... யோசனையுடன் புருவங்கள் நெரிய.. 'ஹலோ' என்றாள்.

''ஹலோ... என்ன நிவேதா? லீவு போட்டுட்டியா? போன் பண்ணி ஆபீஸ்லே சொல்லிடணும்னு கூடத் தோணலையா?'' உரிமையாய் செல்லமாய் கோபித்துக் கொள்வதைப் போன்ற குரலை எங்கோ கேட்டது போல் இருந்தது.

''ஹலோ... யார் நீங்க?'' வெடுக்கென்று கேட்டாள்.

''நான் தான் வசீகரன்! இன்னுமா புரியலை நிவேதா? புராஜெக்ட் சம்பந்தமா உன்கூட நிறைய டிஸ்கஸ் பண்ண ணும்னு நெனச்சிருந்தேன். ப்ச்... நீ வரலே...

''என்ன திடீர்னு லீவு?... என்ன சத்தத்தையே காணோம்? கிட்ட யாராவது இருக்காங்களா? உன் குரல் கூட ரொம்ப டல்லா இருக்கே? என்னாச்சு? ஓ... இன்னிக்குத் தான் உனக்கு விவரம் தெரிஞ்சுதா?

''அந்த அதிர்ச்சியில தான் லீவு போட்டுட்டியா? இன்னிக்கு உன்னை நேர்ல பார்க்க முடியலை... அட்லீஸ்ட் உன் இனிமையான குரலைக் கேட்டாவது திருப்தி பட்டுக்க லாம்னு தானே... உனக்கு போன் பண்ணியிருக்கேன்.

''கம்முனு இருந்தா என்ன அர்த்தம் நிவேதா? பேசு... ஏதாச்சும் பேசு... நீ பேசறதைக் கேட்டா... காதுலே தேன் பாய்ஞ்சாப்பல அப்படியொரு சுகம்! பேசுடா செல்லம்...''

வசீகரன் கொஞ்சிக் குழைந்து குலவியதைக் கேட்டதும்... நிவேதாவிற்கு அடி வயிற்றில் சூடிழைத்தது போல் சுரீர் என்றிருந்தது.

''இன்னிக்குத்தான் உனக்கு விவரம் தெரிஞ்சுதா?'' என்று கேட்கிறானே? அப்படியென்றால்... மூளையைக் கசக்கிய போதுதான் குழப்பம் நீங்கி தெளிவு பிறந்தது.

''காந்தனை நீங்க தான் வேலையை விட்டுப் போகச் சொன்னீங்களா?'' ஆங்காரமாய் கேட்டாள்.

''நோ... நோ! மணம் விட்டுப் பேசினேன். என் மனம் உன்னை விரும்புதுன்னு தெரிஞ்சவுடன்... அவனாவே வேலையை விட்டுட்டான் நிவேதா.''



''பொய்... சுத்தப் பொய்! உங்க பண பலத்தையும் அதிகார பலத்தையும் காட்டி மிரட்டியிருக்கணும். காந்தன் உருட்டல், மிரட்டலுக்குப் பயப்படற ஆள் இல்லை தான்...

''வேற ஏதாவது விதத்துல பயம் ஏற்படும்படி பேசியிருக் கணும். அதான் விலகிப் போயிட்டாரு... மிஸ்டர்! உங்க கிட்ட வேலை பார்க்க வந்தவள் நான்! அதுக்காக என்னை உங்களோட கொத்தடிமைன்னு நெனச்சுட்டீங்களா?''

''உண்மையான காதலர்களைப் பிரிக்கிறதிலே... அப்படி என்ன சந்தோஷம் உங்களுக்குக் கிடைச்சதாம்?'' அழுகை வெடிக்க ஊசிப் பட்டாசாய் பொரிந்தாள்.

''அவன் விலகிப் போனாத் தானே... நான் உன்னை நெருங்க முடியும்? இதுவரைக்கும் எத்தனையோ பெண்களைப் பார்த்திருக்கேன். அவங்க எல்லாரும் என் கிட்டே இருக்கிற பணத்துக்கும் செல்வாக்கிற்கும் ஆசைப்பட்டு வலிய வந்த வங்க தான்...

''ஆனா... நீ மட்டும் தான்... என் கிட்டே இருக்கிற பணம், பதவி, அந்தஸ்து, செல்வாக்கு, புகழ்னு எதுக்கும் மயங்கலை. அத்தனையையும் துச்சமா நெனைச்சு உதறிட்டு... காந்தனை விரும்பிட்டே பாரு!

''அந்த குணம் தான் என்னை உன் கிட்டே காந்தமா ஈர்த்திடுச்சு. நான் காந்தனை விட சகல விதத்துலேயும் உசந்தவன்னு... உனக்கே நல்லாத் தெரியும்.

''இதுவரைக்கும் கல்யாணம்கிற பேச்சை எடுத்தாலே... எனக்கு எட்டிக் காயா கசக்கும். இப்போ கல்யாணம் பண ணிக்க நான் சம்மதிச்சுட்டேன். என் பெற்றோருக்கு உன்னை ரொம்பவும் பிடிச்சுப் போச்சு.

''என் இதயத்தைத் தொட்டவ நீ தான். என் மனசு உன்னைத் தான் சுத்திச் சுத்தி வருது. காந்தனை மனசிலிருந்து தூக்கி எறிஞ்சுட்டு... நீ என்னை விரும்பித்தான் ஆகணும். வேற வழியே இல்லை.

''உனக்குத் தான் கற்பூர புத்தியாச்சே? புரிஞ்சிருக்கும்னு நெனக்கிறேன். சரிதானே நிவேதா? நீ கொத்தடிமை இல்ல... என் சாம்ராஜ்ஜியத்தை ஆள வந்த யுவராணி...! என் காதல் தேவதை!

''இந்த வசீகரனை வசீகரித்த வஞ்சிக்கொடி! அழகுப் பெட்டகம்!''

''மிஸ்டர்! இதுக்கு மேல ஒரு வார்த்தை பேசினா... மரியாதை கெட்டுப் போயிடும். நான் காந்தனை ரொம்ப நேசிக்கிறேன். அவர் தான் என்னோட கணவர்னு நான் முடிவு பண்ணி ரொம்ப நாளாச்சு.

''நீ கோடீசுவரனா இருக்கலாம். பெரிய சாம்ராஜ்ஜியத் துக்கே சக்கரவர்த்தியா இருக்கலாம். அதனால நீ நெனக்கிற படியே எல்லாம் நடந்துடும்னு தப்புக் கணக்குப் போடாதே!

''அவர் மனசு பாதிக்கும்படியா நீ என்னவோ பேசி யிருக்கே... அதான் காந்தன் பிடிவாதமா என்னை விட்டு விலகி நிக்கிறாரு... அவர் எப்படி இருந்தாலும் சரி... என் மனசு மாறவே மாறாது தெரிஞ்சுக்கோ... செத்தாலும் சாவேனே தவிர... அவரை என்னால மறக்க முடியாது.

''இதுக்கு மேலே உன் ஆபீசுக்கு நான் வேலைக்கு வர மாட்டேன். என் வழியில இனிமே குறுக்கே வராதே...'' அவளது குரலில் அனல் தெறித்தது.

''வேற எங்கியாச்சும் போயி வேலை பார்க்கப் போறியா? உன் திறமைக்கு எங்க போனாலும்... டக்குனு வேலை கிடைச்சுடும் தான்... ஆனா நான் உன்னை விட மாட்டேன்.

''ஒரு மாசத்துக்கு மேல உன்னால எங்கேயும் தாக்குப் பிடிக்கவே முடியாது நிவேதா?'' வசீகரன் சூளுரைத்ததும் ஒரு கணம் ஸ்தம்பித்து நின்றவளுக்கு... அழுகை முட்டிக் கொண்டு வந்தது.

'உண்மைதான்! வசீகரன் தனது செல்வாக்கைப் பயன் படுத்தி என்னை ஒரு வாரம் கூட எந்த வேலையிலும் நீடிக்க விட மாட்டானே?



'கல்யாணமும் பாதியில் நின்று விட்டது.

'படித்த படிப்பும் திறமையும் கையில் இருக்கிறதே... வேலை பார்த்து சொந்தக் காலில் நின்று வாழ்க்கையை ஓட்டி விடலாம் என்று நினைத்தால்... அதற்கும் முட்டுக்கட்டை போடுகிறானே?

'படு பாவி! இந்த அக்கிரமத்தை யாரிடம் சொல்லி முறையிடுவது? பணபலம் படைத்தவனோடு முட்டி மோதி நான் ஜெயிக்க முடியுமா?

'ஓ... அதனால் தான் மவுனமாக காந்தன் விலகிக் கொண்டாரா?

'என்ன செய்யப் போகிறேன் நான்?' அவளுக்கு விழி பிதுங்கியது.

திகிலிலும் பயத்திலும்... காலடியில் தரை நகர்ந்து செல்வதைப் போலிருந்தது.

## 18

உலகமே திடீரென இருண்டு சூனிய மானது போலவும்... அகண்ட பிரபஞ்சத்தின் நடுவில் தான் மட்டுமே தன்னந்தனி ஆளாய் நிற்பது போலவும் தோன்ற விக்கித்துப் போனாள் நிவேதா.

''என்ன நிவேதா? பதிலையே காணோம்? கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி தைரியமா சவால் விட்டியே? இப்ப பேசேன்... கோபம் வந்து சபிச்சாலும் சரி... திட்டினாலும் சரி... எனக்கு உன்னோட மதுரமான குரலைக் கேட்டுக்கிட்டே இருக்கணும் போலிருக்கு நிவேதா.''

''ச்சே! என்ன மனுஷன் நீ? நான் இன்னொருத்தரை மனசார காதலிக்கிறேன்னு தெரிஞ்சிருந்தும்... என்னை உன் மனைவியாக்கணும்னு துடிக்கிறியே? உனக்குக் கேவலமா இல்லியா?''

“திட்டு... நல்லாவே திட்டு... சபி! கோபிச்சுக்கோ... ஆனா முடிவுலே சரணடைஞ்சுடு... இந்த வசீகரன் கிட்ட நீ வசமா மாட்டிக்கிட்டே... தப்பிக்கவே முடியாது கண்ணே!

“மறுபடியும் மவுனமாயிட்டே பார்த்தியா டார்லிங்” என்ற படி கடகடவென்று நகைத்தான்.

“ஏழைங்க நாங்க... ‘இவங்களால நம்மை என்ன செய்துட முடியும்கிற அகம்பாவத்துல ஆடறியா? உன்னோட ஆணவமும் அகங்காரமுமே உன்னை அழிக்கப் போகுது.

“பெண் பாவம் பொல்லாததுன்னு சொல்லுவாங்க. எங்க வயித்தெரிச்சலைக் கொட்டிக்கிட்டே இல்ல? ஈரேழு ஜென்மத்துக்கும் அந்தப் பாவம் உன்னை சும்மா விடாது!

“ஒரு வழியும் இல்லேன்னா... உன் கிட்ட சரணடைஞ் சுடுவேன்னு முடிவு பண்ணிட்டியா?

“படிச்ச படிப்பும் வாங்கின பட்டமும் எனக்குக் கை கொடுக் கலேன்னா என்ன? அதுக்காக உனக்கு படிஞ்சு போயிடு வேணா?

“நெவர்... எங்கம்மா என்னை அப்படி வளர்க்கலைடா...

“உழைக்கிறதுக்குத் தயாரா ரெண்டு கைகள் இருக்கே? மனசு நிறைய வைராக்கியமும் தன்னம்பிக்கையும் இருக்கே?

“பத்து பேருக்கு சமைச்சுப் போட்டு பத்துப் பாத்திரம் தேய்ச்சாவது... என்னால தலை நிமிர்ந்து வாழ முடியும்டா...

“உன்னால ஆனதைப் பார்த்துக்கோ... பகவான் எனக்கு துணை இருக்காருடா.”

“அப்படியா? எத்தனை நாளைக்குத் தாக்குப் பிடிக் கிறேன்னு நானும் பார்க்கிறேன் டியர்.”

“எத்தன நாளைக்கா? நான் உயிரோட இருக்கிற வரைக் கும் தாக்கு பிடிப்பேன். ஏன்டா சிரிக்கிறே? ஏழைத் தொழி லாளர்களோட கண்ணீரைத் துடைச்சு... அவங்களுக்கு நிறைய உபகாரம் பண்ணி பரோபகாரம் பண்ணி... கிட்டத்



தட்ட நடமாடும் தெய்வங்களா மதிக்கப்படறாங்க உங்கப் பாவும் அம்மாவும்!

“அவங்களுக்கு மகனாப் பொறந்துட்டு... கொஞ்சம் கூட மனசாட்சி இல்லாம நடந்துக்கிறியே? உன்னோட சுயரூபம் தெரிஞ்சா... அதிர்ச்சி தாங்காம உன்னைப் பெத்த பாவத்துக்கு அவங்க உயிரையே விட்டுருவாங்கடா...

“சிரிக்காதே... சீக்கிரமே நீ அழியப் போறே...” பட்டென்று இணைப்பைத் துண்டித்தாள்.

கோபத்திலும் திகிலிலும் அவளுக்கு மூச்சு வாங்கியது.

‘காந்தன் ஏனிப்படி நடந்து கொண்டார்? ஏன் மாறி விட்டார்?’ என்று இதுவரை தலைக்குள் வண்டு குடைந்த வண்ணம் இருந்தது.

இப்போது அதற்குரிய முழு காரணமும் தெரிந்து விட்ட தில்... மனதின் மூலையில் சிறு வெளிச்சப் புள்ளி பிறந்தது நிஜம்!

‘காந்தனை மீண்டும் சந்தித்து இது விஷயமாக மனம் விட்டுப் பேசி ஒரு முடிவுக்கு வந்தால் என்ன?’ என்று மனதில் தோன்றிய யோசனையை உடனே நீர் ஊற்றிக் கலைத்தாள் நிவேதா.

‘வேண்டாம்... நடப்பது நடக்கட்டும்! இனிமேல் வேலைக் கும் எங்கும் போகப் போவதில்லை.

அம்மா அதிர்ச்சி தாளாமல் சுருண்டு படுத்து விட்டாள். அவளுக்கு பரிபூரண ஓய்வு தேவை...

அம்மாவுக்கு பதிலாக இனி கரண்டியை கையில் பிடிக்க வேண்டியது தான்... மெஸ்ஸை திறம்பட நடத்த வேண்டும்.

தங்கைகளைப் படிக்க வைத்து நல்லபடியாகக் கரையேற்ற வேண்டும். இதுதான் என் லட்சியம்!

‘காந்தன்! நமக்கு மனசளவில கல்யாணம் நடந்தாச்சு. நான் உங்க மனைவி.

'அந்த நெனைப்பிலேயே நான் காலத்தைத் தள்ளி விடுவேன். எது வந்தாலும் சரி... நான் கை சளைக்காம எதிர் நீச்சல் போடுவேன்.

'நான் தினமும் வணங்குகிற தெய்வம்... நம்மை அடுத்த ஜென்மத்திலாவது சேர்த்து வைக்கட்டும்.'

விழிகளில் வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு... முந்தானையை வரிந்து சொருகிக் கொண்டு அடுக்களைக் குள் புகுந்தாள்.

''மணி பதினொண்ணு ஆச்சும்மா... அம்மாவுக்கு உடம்பு முடியாம படுத்துட்டாங்களே? இன்னிக்கு என்ன சமையல்னு தெரிஞ்சா... காய் நறுக்கி வச்சிடுவோம்...'' தாயம்மாள் தயங்கியபடிக் கேட்டாள்.

''மாங்காய் முருங்கைக்காய் சாம்பார், பிஞ்சுப் புடலை பால் கூட்டு, பிடி கருணை காரக் குழம்பு, மைசூர் ரசம், சேனைக் கிழங்கு மசாலாக் கறி அப்பளம்...

''இனிமே நான் ஆபீசுக்குப் போகப் போறதில்லை. மெஸ்ஸை நடத்தணும். அம்மாவையும் கிட்ட இருந்து பார்த்துக்கணும் இல்லையா? அதான்... சாம்பாருக்கு காய் வெட்டி... கருணைக் கிழங்கை கழுவி பொடியா வெட்டுங்க...

''மசாலுக்குத் தேவையானதை வறுத்து வைக்கிறேன். அம்மியில கரகரப்பா அரைச்சுக் குடுங்க... தோட்டத்துல காய்ச்சிருக்கிற பிஞ்சுப் புடலையை நான் பறிச்சுட்டு வந் துடறேன். சரியா?''

தாயம்மாவும் பூங்காவனமும் சந்தோஷமாய் தலையாட் டினார்கள்.

நழுவிய துண்டை தோளில் போட்டபடி அடுக்களைக்குள் எட்டிப் பார்த்த தணிகை வேல் மாமாவைக் கண்டதும்... மீண்டும் விழிகள் உடைப்பெடுத்துக் கொண்டன.

கீழுதட்டை அழுந்தக் கடித்து அழுகையை சிரமப்பட்டு விழுங்கினாள்.



''மாமா! நான் வந்து...'' வார்த்தைகளைத் தேடித் தவித் தாள்.

''நிவேதா! நான் நீ பேசிட்டிருந்ததை எல்லாம் கேட்டுட் டேன் அம்மா! அங்க... போனிலே பேசினே பாரு?

''அந்த அம்பாளே உன் ரூபத்துல வந்த மாதிரி இருக்குடா! உன்னோட தைரியத்தையும் தன்னம்பிக்கையையும் பாராட்டறேன். கவலைப் படாதே ராஜாத்தி!

''உனக்கு அந்த மகமாயி துணையிருப்பா... ஒரு நாளும் கைவிடமாட்டா. மரகதத்துக்கு நீதான் பக்குவமா எடுத்துச் சொல்லணும்.

''படிச்ச படிப்பை விட்டுட்டுக் கரண்டியைப் பொண்ணு கையில எடுத்துக் கிட்டாளேன்னு... துடிச்சுப் போவாள் இல் லியா? நிதானமா பக்குவமா பதமா விவரத்தைச் சொல்லு...

''அதே சமயம்... அவ அதிர்ச்சியையும் தாங்கிக்கணும் இல்லையா? ஜாக்கிரதையா நடந்துக்கணும். சரி... வாழையிலை தீர்ந்து போச்சு. நான் வாங்கிட்டு வந்துடறேன்... கண்ணைத் துடைச்சுக்கோ'' அவளது தோளில் ஆதுரமாய் தட்டினார்.

''சரிங்க மாமா!... கோதுமை மாவு கூட ஸ்டாக் இல்ல மாமா! இன்னிக்கு நைட்டுக்கு முருங்கைக் கீரை சப்பாத்தியும் சன்னா மசாலாவும் செய்யலாம்னு இருக்கேன்.''

''சரிம்மா... கோதுமை மாவையும் வாங்கிட்டு வந்துட றேன்'' பரபரப்பாக நகர்ந்தார்.

தோட்டத்தில்... பந்தலில் தொங்கிய பிஞ்சுப் புடலை களைப் பறித்தபோது துக்கம் அடைத்துக் கொண்டு வர... சேலைத் தலைப்பால் வாயை மூடிக் கொண்டு குமுறிக் குமுறி அழுது தீர்த்தாள்.

டகடகவென்று ஜகடை உருள... கிணற்றிலிருந்து நீரை இறைத்து முகத்தை அலம்பிக் கொண்டு, தோட்டத்தில் பறித்த காய்களுடன் அடுக்களைக்குள் நுழைந்தாள்.

கவலையைத் தூக்கி அப்பால் வைத்துவிட்டு சிரத்தை யுடன் 'நளபாகத்தில்' இறங்கி விட்டாள் நிவேதா.

எந்த வேலையாக இருந்தாலும் முழு ஈடுபாட்டுடனும் ஆர்வத்துடனும் அக்கறையுடனும் செயல்பட வேண்டும் என்று நினைப்பவள் அவள்.

மதியம் சாப்பிட வந்தவர்கள், மாமா தணிகைவேல் என்று ஒருவர் விடாமல் அவளது சமையலைப் பாராட்டவே செய்தனர்.

அடுத்து வந்த இரு தினங்களில் ஆற்றாமை தாளாமல் மரகதம் கேட்டே விட்டாள்.

''என்னம்மா நீ? ஆபீசுக்கு ஒரேயடியா லீவு போட்டுட்டு மெஸ் வேலையை இழுத்துப் போட்டு செய்துட்டிருக்கே? ஏ.ஸி.யிலே கம்ப்யூட்டர்லே வேலை பார்க்க வேண்டிய பொண்ணு நீ!

''இப்படி அடுப்படியில வெந்தும் வேகாம சமைச்சுப் போடணும்னு தலையெழுத்தா? இதுக்கா நான் கஷ்டப்பட்டு உன்னை வளர்த்து ஆளாக்கினேன்? வேணாம்டா செல்லம்!

''மெஸ்ஸைக் கூட நிறுத்திடலாம். நீ நாளையில் இருந்து ஆபீசுக்குப் போடா'' தழுதழுத்தாள்.

''இல்லைம்மா... டாக்டர் உன்னை ஒய்வா இருக்கச் சொல்லியிருக்காரு. உன்னை கிட்டக்க இருந்து கொஞ்ச நாளைக்கு நான் கவனிச்சுக்கணும்னு ஆசைப்படறேன்.

''மெஸ்ஸை சட்டுனு நிறுத்தினா... வாடிக்கையாளர்கள் தவிச்சுப் போவாங்கன்னு... நீ தானேம்மா சொன்னே? காந்த னுக்கு பதிலா ஆபீஸ்லே... வேற ஒரு நபர் வந்திருக்காரு. அவர் சரியில்லை... ஒரே கேபின்லே அந்த ஆள் கூட வேலை செய்யப் பிடிக்கலைம்மா...

''கொஞ்சம் நாளாகட்டும். இதை விட நல்ல வேலை என் திறமைக்கு கிடைக்காமலா போகும்?'' எப்படியோ பூசி



மெழுகி சமாளித்து விட்டாள். அரை மனதோடு அம்மா தலையாட்டி வைத்தாள்.

காலண்டரில் ஐம்பது நாட்கள் விரயமாயின.

உள்ளூர நிவேதா பயந்து கொண்டிருந்தது போலவே... வசீகரன் அவளது தலையில் பெரிய இடியை இறக்கினான்.

## 19

அன்று ஞாயிற்றுக்கிழமை! பொன் அந்தி மாலைப் பொழுது! கவலையும் வேதனையும் உருக்கியதில்... மரகதம் ஏகத்திற்கும் மெலிந்து விட்டிருந்தாள்.

மகள் நிவேதா தனது கண்களிலிருந்த ஜீவனைத் தொலைத்து விட்டு... அடுக்களையில் கிடந்து அல்லாடி கடமைக்காக ஒப்புக்கு நடமாடுவதைப் பார்க்கும் போது... அவளுக்கு அடி வயிற்றைப் பிசைந்தது.

தங்கைகள் லீலா - நீலாவுக்கு பாடத்தில் ஏற்பட்ட சந்தேகத்தைத் தெளிவு படுத்தி விட்டு வந்த நிவேதாவை ஏறிட்டாள்.

''அம்மாடி! பூஜையறையில வச்சிருக்கிற வயலினை எடுத்துட்டு வந்து அபிராமி அந்தாதி பாடறியா?

''அம்பாளைக் கூப்பிட்டுப் பாடேன் நிவேதா! மனசே சரியில்லை அதான்.''

''சரிம்மா... பாடிட்டா போச்சு'' முறுவலித்தபடி வயலினை எடுத்துக் கொண்டு வந்து கூடத்தில் அமர்ந்தாள்.

**''தாயே மலைமகளே செங்கண்மால் திருத்தங்கச்சியே**
**ஆசைக்கடலில் அகப்பட்டு அருளற்ற அந்தகனாகப்**
**பாசத்தால் அல்லற்பட இருந்தேனை நின்பாதமெனும்**
**வாசக்கமலம் தலைமேல் வலிய வைத்தாண்டு கொண்ட**
**நேசத்தை என் சொல்லுவேன் ஈசர் பாகத்து நேரிழையே...''**

அவளது குரலில் இழைந்திருப்பது தேனா? மதுரமா? பக்தியா? பரவசமா? பச்சாதாபமா? சோகமா? உணர்ச்சிகள் உருக உள்ளமெல்லாம் தித்திக்க, கேட்பவர் எலும்பை யெல்லாம் ஊடுருவிக் கொண்டு பக்தி சுவை சொட்டச் சொட்ட... எங்கேயோ அமைதியான இடத்திற்கு அழைத்துச் செல்வது போலிருந்தது.

மரகதத்தின் கண்களிலிருந்து ஆறாக நீர் பெருகியது. மாமா தணிகைவேல் எங்கோ பார்வையைப் பதித்தபடி மெய் மறந்து அமர்ந்திருந்தார்.

நிவேதா விழிகளை மூடியபடி ஒரு லயிப்பில் பாடினாள். அவளது கண்ணோரங்களில் கசிந்த கண்ணீர் முத்துக் களைப் போல் பிரகாசித்ததை வேதனையுடன் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த லீலாவும் நீலாவும்... வாசலில் நிழலாடியதும் திரும்பிப் பார்த்தனர்.

காரை நிறுத்திவிட்டு வேதாசலமும் வரலட்சுமியும் தயங்கியபடி கூடத்திற்கு வந்தனர். நிவேதா பாடியதைக் கேட் டதும் இருவருமே ஆணி அடித்த தினுசில் நின்று விட்டனர்.

காற்றில் தேனைக் கலந்து அவளது குரலிலிருந்த இனி மையும் இதமும் அவர்களைக் கட்டிப்போட... ஸ்தம்பித்துப் போய் நின்றனர்.

பாடி முடித்ததும் வயலினைப் பொக்கிஷமாய் எடுத்து பலகை மீது வைத்துவிட்டு... கண்களில் ஒற்றியபடி நிமிர்ந்தவளின் விழிகள் வியப்பில் விரிய மெல்ல எழுந்து நின்றாள்.

''வாங்க ஐயா... வாங்கம்மா... உட்காருங்க'' உபசரித்தாள்.

''பக்கத்துல வீரபாண்டி கவுமாரி அம்மன் கோவிலுக்கு வந்தோம். அப்படியே உன்னைப் பார்த்துட்டுப் போகலாம்னு தோணுச்சு. வசீகரன் தான் உன்னோட முகவரி கொடுத் தான்.



''உங்க வீட்டுப் பெரியவங்களைப் பார்த்து முறைப்படி பேசி முடிவு பண்ணிடலாம்னு வந்தோம். ராகு காலம் முடியற வரை கோவில்லே உட்கார்ந்துட்டுக் கிளம்பி நேரா வர்றோம்.

''உன்னை எங்க வீட்டுக்கு மருமகளா கூட்டிட்டுப் போகணும்னு பிரியப் படறோம். வசீகரனோட விருப்பமும் அது தான்... அவன் இதைப் பத்தி முன் கூட்டியே உன் கிட்ட சொல்லியிருப்பான்னு நெனக்கிறோம்.

''கடந்த சில நாட்களா... ஐயாவுக்கு ஆஸ்துமா தொந்தரவு அதிகமா இருக்கிறதால... தேனி பங்களாவுல தான் தங்கி யிருக்கோம். இனிமே எங்க நிரந்தர வாசம் இங்கே தான்...

''இந்தா முகவரி!'' ஒரு விசிட்டிங் கார்டை உரிமையாய் அவளது கையில் திணித்தபடியே பேசிவிட்டு... சோபாவில் அமர்ந்தார் வரலட்சுமி.

''அம்மா! அன்னிக்கு ஆபீஸ் சார்பா உங்க எஸ்டேட்டுக்கு நாங்க வந்தபோதே கவனிச்சேன்... எஸ்டேட் தொழிலாளிகள் எல்லாரும் உங்க ரெண்டு பேரையும் கண்கண்ட தெய்வங் களா மதிக்கிறதை... கண் கூடாப் பார்த்து பிரமிச்சிருக்கோம்.

''உங்களை நான் வணங்கற அம்மனா நெனச்சு... கை கூப்பி வணங்கி மனசுல உள்ளதைக் கொட்டித் தீர்க்கணும்னு தோணுது...'' திணறியபடி நிறுத்தினாள் நிவேதா.

''என்னம்மா... என்னத்துக்கு தயங்கறே? எதுவா இருந் தாலும் எங்ககிட்டே வெளிப்படையா நீ பேசலாம். உன்னைப் பார்த்ததுமே எங்களுக்கு ரொம்பப் பிடிச்சுப் போச்சே!

''உன்னைப் பெத்த மகளா நாங்க பாவிக்கிறோம். அன் னிக்கு நாங்க பார்த்ததைவிட ரொம்பவே மெலிஞ்சு கறுத்துப் போயிட்டியே? என்ன பிரச்சினை? சொல்லும்மா... நாங்க இருக்கோம் உனக்கு!'' வரலட்சுமி எழுந்து இதமாய் அவளது தோளில் கை வைத்தார்.

''அது வந்து... உங்க பிள்ளை வசீகரன்...'' அவள் வாயைத் திறந்து பேசிமுடிக்கும் முன்... அவளது செல்போன் அலறித் தடை செய்தது.

''ஹலோ'' செல்லை எடுத்துப் பேசினாள்.

''ஹலோ... நிவேதா! நான் தான்... எப்படி இருக்கே? வாழ் நாள் முழுக்க 'தாக்குப் பிடிக்கிறது' கஷ்டம்னு தோணி யிருக்குமே?

''காந்தன் தான் உன்னை விட்டு விலகிப் போயிட்டானே? எத்தனை நாளைக்கு நீ தனி மரமா நிக்க முடியும்? அப்படி நிக்கிறதுக்கு உன் வீட்டுலே அனுமதிப்பாங்களா என்ன?

''சொல்லு நிவேதா! ஓரளவுக்கு இறங்கி வந்தாச்சா?''

''மிஸ்டர் வசீகரன்! காந்தன் எங்கேயும் விலகிப் போகலை... என் மனசுல தான் இருக்காரு...''

''அவர் நெனப்பு என் மனசுல ஆழமா ஆணி வேரா இறங்கிப் போச்சு. அவ்ளோ லேசுலே யாராலும் அதை எடுத்து எறிய முடியாது.

''நான் தனி மரமா நின்னா யாரும் ஒண்ணும் சொல்ல மாட்டாங்க... நிழல் தரும் கற்பக விருட்சத்துக்கு என்னிக்கும் சமுதாயத்துல மதிப்பு உண்டு. நான் இறந்து போனாலும் போவேனே தவிர... என்னிக்கும் நான் இறங்கி வரவே மாட்டேன். தெரிஞ்சுக்கோங்க'' அவளது முகத்தில் கோபமும் கவலையும் மாறி மாறிப் பிரதிபலித்தன.

அர்த்த புஷ்டியுடன் வேதாசலமும் வரலட்சுமியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

''ஹஹ்ஹா... ஹஹ்.. ஹஹ்ஹா... நான் நெனச்சேன். அதே மாதிரியே பேசறியே?

''காந்தன் உயிரோடு இருக்கிற வரைக்கும் நீ இப்படித்தான் பேசுவேன்னு... எனக்குப் புரிஞ்சு போச்சு!

''அதனால அவனை அனுப்பி வைக்க ஏற்பாடு பண்ணி னேன். இப்பத்தான் கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி.. லாரி ஆசை ஆசையா காந்தனோட பைக்கை முத்தமிட்டுச்சாம்...

''மோதின வேகத்துல ஆள் எகிறிப் பறந்து சாலையோரமா 'செத்து'னு கவுந்து விழுந்தானாம்.



''கம்பத்துக்குப் போற பிரதான சாலையில விபத்து நடந்த தாம்... உசுரு ஒட்டிட்டிருக்காம்... 98 சதவீதம் ஆள் பிழைக்க வாய்ப்பில்லையாம்.

''தேனியில இருக்கிற மருத்துவமனையில அவசர சிகிச்சைப் பிரிவுலே உசுருக்குப் போராடிக்கிட்டிருக்கான்.

''சீக்கிரமா 'தகவல்' வரும்... அதுக்கு அப்புறம் அவனை... அவன் நெனப்பை உதறித்தானே ஆகணும்?

''காலப் போக்குல அவனை நீ மறந்தே போயிடுவே... சரி தானே நிவேதா?''

''அடப்பாவி... நீ நல்லாயிருப்பியா? என்னை மனசார விரும்பினது தவிர... காந்தன் ஒரு பாவமும் பண்ணலையே? அவரைக் கொல்ல உனக்கு எப்படி மனசு வந்துச்சு?''

அதிர்ச்சியில் உடல் கிடுகிடுவென்னு நடுங்க... செல் போனை நழுவ விட்டுத் தடுமாறியவள்... கூடத்துத் தூணை இறுகப் பிடித்துக் கொண்டாள்.

''அ... அம்மா! வி... விஷயம் ஓரளவுக்கு உங்களுக்குப் புரிஞ்சிருக்கும்னு நெனைக்கிறேன். காந்தன் என்னை நேசிச்சாரும்மா...

''நானும் காந்தனை விரும்பினேன். பெரியவங்க கலந்து பேசி எங்களுக்கு நிச்சயதார்த்தமும் ஆயாச்சு!

''இடையில உங்க பிள்ளை புகுந்து காந்தனை மிரட்டி விலகிப் போகச் சொல்லிட்டாரு.

''என்கிட்டேயும் போன்லே தன்னைக் கல்யாணம் செய்துக் கணும்னு வற்புறுத்தினாரு... நான் சம்மதிக்கலே...

''இ... இப்போ... காந்தன் மேல லாரியை மோதவிட்டு... ஐயோ! நான் என்ன செய்வேன்?

''என்னைக் காதலிச்ச பாவத்துக்கு காந்தன் உசுருக்குப் போராடறாரு... இதுக்குப் பதிலா உங்க பிள்ளை என்னைக் கொன்னு போட்டிருக்கலாமே?

''இனிமே நீ காந்தனை மறந்து தானே ஆகணும்னு... போன்ல உங்க பிள்ளை சிரிக்கிறாரே?

''இந்த அக்கிரமத்தை யாரு தட்டிக் கேட்கிறது?

''என்ன நடந்தாலும் சரி... இன்னும் எத்தனை ஜென்மங்கள் நான் எடுத்தாலும் காந்தன் தான் என் கணவன்... அதுல எந்த மாற்றமும் இல்லைன்னு... உங்க பிள்ளைக்குச் சொல்லுங்க...

''உங்க வம்சம் விளங்குமா? ஈரேழு ஜென்மம் எடுத்தாலும் இந்தப் பாவம் உங்களைச் சும்மா விடாது. தெரிஞ்சுக் கோங்க...'' தூணோரமாய் சரிந்து அமர்ந்து... முழங்காலில் முகம் புதைத்து தேம்பத் தொடங்கினாள் நிவேதா.

''ஐயோ! நிவேதா! உன் வாழ்க்கை இப்படியா ஆகணும்? இன்னிக்கு இல்லாட்டி நாளைக்காச்சும்... காந்தன் மனசு மாறி வந்து உன்னைக் கல்யாணம் பண்ணிப்பாருன்னு... உறுதியா நான் நம்பிட்டிருந்தேனே?

''எப்பேர்ப்பட்ட நல்ல மனசு உனக்கு? உனக்கா இந்த கதி வரணும்? என்னால தாங்க முடியலையே ராஜாத்தி'' துக்கம் தாளாமல் வாய் விட்டுக் கதறி அழுதாள் மரகதம்.

குற்ற உணர்வில் கூனிக் குறுகிப் போய்... தலை குனிந்த படி வேதாசலமும் வரலட்சுமியும் வெளியேறினார்கள்.

அடுத்த சில நிமிடங்களில்... மீண்டும் போன் கிணு கிணுத்தது.

## 20

''ஹலோ! யார் பேசறது?'' திகிலுடன் கேட்டாள் நீலா.

''ஹலோ... நான் ராமசாமி தாத்தா பேச றேன்மா... நிவேதா கிட்டே போனைக் குடும்மா...''

''அ... அக்கா! ராமசாமி தாத்தா லைன்ல இருக்காரு. பேசு.''

''ஹலோ நிவேதா! நம்ம காந்தன் வி... விபத்துல அடி பட்டுட்டுட்டான் அம்மா... நிலைமை சீரியஸா இருக்கும்மா...



''டாக்டர்கள் ஒண்ணுமே சொல்ல மாட்டேங்கிறாங்க... எ... எனக்கு ரொம்ப பயமா இருக்கும்மா... நீ கிளம்பி வர்றியா?''

''இந்தத் தள்ளாத வயசுல கடவுள் என்னை இப்படிச் சோதிக்கிறானே?'' விசும்பினார் ராமசாமி.

''தா... தாத்தா! நம்பிக்கையை மட்டும் தளர விடாதீங்க. நான் இதோ புறப்பட்டு வரேன்... தைரியமா இருங்க. அம்மன் நம்மை கை விடவே மாட்டா... நம்புங்க தாத்தா!

''பாட்டிம்மாவுக்கு நீங்க தானே ஆறுதல் சொல்லணும். இதோ கால் மணி நேரத்துல நான் அங்க இருப்பேன்'' முதியவரைத் தேற்றி விட்டுத் தாயை ஏறிட்டாள்.

''அம்மா! தயவு செய்து மனசைத் திடப் படுத்திக்கோ... வாழ்நாள் முழுவதும் உன்னைக் கடவுள் சோதிச்சுட்டாரு...

''இன்னமும் நாம்ப எதிர் நீச்சல் போட்டுட்டுத் தான் இருக்கோம். ஆனா கடவுள் நம்பிக்கையைக் கெட்டியா பிடிச் சுட்டிருக்கோமே? அதுக்காக... நம்மைக் கடவுள் கைவிட மாட்டாரும்மா.

''போ! பூஜையறையில உட்காரு. தியானம் பண்ணு. காந்தன் திரும்ப வரணும்னு... பிழைச்சு வரணும்னு வேண்டு...

''நாம்ப யாருக்கும் கெடுதல் செய்யலை... கெடுதல் நினைக்கல... நமக்கு எந்தக் குறையும் வராது.

''கடைசி நிமிஷத்துல ஏதாவது அற்புதம் நிகழும். எனக்கு நம்பிக்கை இருக்கும்மா... தைரியமா இரு! நான் மாமா கூடப் போயிட்டு வந்துடறேன்...'' அரக்கப் பரக்க எழுந்து கலைந்த கூந்தலை வாரிக் கொண்டையிட்டுக் கொண்டு... செல் போனை ஹேண்ட் பேக்கில் திணித்துக் கொண்டு... ஓட்டமும் நடையுமாக வெளியேறினாள் நிவேதா.

ஆஸ்பத்திரி வராண்டாவில் பெஞ்சில் அமர்ந்திருந்த சீதம்மாள்... நிவேதாவைக் கண்டதும் குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

''வாழற வயசுல மீனாட்சியை நாங்க வாரிக் குடுத்தோம். பேரப் பயலை வளர்த்து ஆளாக்கணுமேன்னு... உசுரைக் கையில பிடிச்சுக்கிட்டு உழைச்சோம்.

''அவனுக்கொரு கல்யாணம் காட்சியைப் பண்ணிப் பார்த்துட்டு... கண்ணை மூடலாம்னு இருக்கிற நேரத்துல... காந்தனுக்கு இப்படியொரு கோர விபத்து நடந்துடுச்சே?

''நாங்க என்ன பாவம் பண்ணினோம் நிவேதா! அந்த விபத்து எனக்கு நேரக் கூடாதா?'' தள்ளாடியபடி கேவினார் ராமசாமி.

''தாத்தா! தைரியமா இருங்க... நீங்க வணங்கற அம்ம னோட பாதத்தைக் கெட்டியா பிடிச்சுக்கங்க... எல்லாம் நல்லதே நடக்கும். காந்தனுக்கு நேர்ந்தது விபத்து இல்லை தாத்தா... இது வேறே...'' அவளையும் மீறி வார்த்தைகள் துள்ளி வெளியே விழுந்து விட்டன.

''என்ன சொல்றே நிவேதா? எ... எனக்கு புரியலையே?'' கிழவர் இடுங்கிய கண்களால் அவளை ஊன்றிப் பார்த்தார்.

இதற்கு மேலும் அந்த வயதானவரை சங்கடத்தில் ஆழ்த்த அவள் மனம் விரும்பவில்லை.

'கொலை முயற்சி' என்று தெரிந்தால் பாட்டியம்மாள் அதிர்ச்சியில் உயிரையே விட்டு விடக் கூடும். எதற்கு வம்பு?

''அவருக்குக் கெட்ட நேரம்... 'கண்டம்' வந்து விலகிப் போயிடுச்சுன்னு சொல்ல வந்தேன். டாக்டர் என்ன சொன்னாங்க தாத்தா?'' பேச்சை சாமர்த்தியமாக மாற்றினாள்.

''தலைமை மருத்துவர் ஒரு அஞ்சு நிமிடத்துல தன்னோட அறைக்கு வந்துடுவாருன்னு... நர்ஸ் சொல்லிட்டுப் போனா...

''இப்போ அநேகமா வந்திருப்பாரு... வா! நீயும் வந்து நல்லா விவரம் கேட்டுக்கோ... இந்தக் கிழவனுக்கு பயத்துல கையும் ஓடலை... காலும் ஓடலைம்மா.''



''நான் பாட்டிம்மா கூட இருக்கேன். நீ போயி விவரமா கேட்டுட்டு வா நிவேதா'' மாமா தணிகை வேல் தளர்வாய் பெஞ்சில் அமர்ந்து விட்டார்.

'டாக்டர் என்ன முடிவு சொல்லப் போகிறாரோ?' என்ற திகிலில் அவளது இதயத் துடிப்பு எகிறிக் குதித்தது.

''வணக்கம் சார்! காந்தனுக்கு இப்போ எப்படி இருக்கு டாக்டர்?'' உலர்ந்த உதட்டை நாவால் ஈரப்படுத்தியபடி கேட்டாள்.

''கிரிட்டிகல் ஸ்டேஜ் தான்! இதயத்துல ரொம்ப பலமா அடிபட்டதால... இதயம் பலவீனமா இருக்கு.

''இதே நிலைமை நீடிச்சா... 'கஷ்டம்' தான்! மனசை திடப்படுத்திக்கோங்க'' இறுகின முகத்துடன் பேசிய டாக்டரை திகிலுடன் பார்த்தார் ராமசாமி.

''எவ்ளோ செலவானாலும் பரவாயில்லை. எப்படியாவது காப்பாத்திக் குடுங்கய்யா.''

''டாக்டர்! உங்களைத் தான் மலை போல் நம்பியிருக்கோம். காந்தன் குணமாக வாய்ப்பே இல்லையா?'' தழுதழுத்தாள் நிவேதா.

''காந்தன் இப்போதைக்கு ஒரு இதய நோயாளி மாதிரி தான். அப்பப்போ மூச்சுத் திணறல் ஏற்படுது. செயற்கை சுவாசம் குடுத்துட்டு வரோம்... இது நிரந்தரத் தீர்வு கிடையாதே?

''காந்தன் பிழைக்கணும்னா... அதுக்கு ஒரே ஒரு வழி தான் இருக்கு. இதய மாற்று சிகிச்சை செய்தா... பிழைக்க வாய்ப் பிருக்கு.

''பழுதான இதயத்தை உடனடியா வெட்டி நீக்கிவிட்டு வேறொரு இதயத்தைப் பொருத்தணும். அதுக்கு டோனர் கிடைக்கணுமே?

''அப்படியே கிடைச்சாலும் காந்தனின் உடலுக்குப் பொருத் தமா ரத்தம், தசை, உடல் திரவங்கள் எலலாம் அமையணும்.

''அப்படிப் பொருத்தமா ஒரு இதயம் கிடைச்சு... அறுவை சிகிச்சை மூலமா அதைப் பொருத்திட்டா... காந்தன் பரிபூரணமா குணமாகி நடமாடுவாரு...

''அப்படியொரு அதிசயம் நடக்கணும்னு வேண்டிக் கோங்க...

''அதுவரைக்கும் காந்தன் சீரியஸ் கண்டிஷன்லே தான் இருப்பாரு... அதாவது... தன்னோட நாட்களை அவர் எண் ணிட்டிருக்காரு...

''எந்த நிமிஷத்திலேயும் எது வேணா நடக்கலாம். அது தான் உண்மை.''

டாக்டர் உண்மையான நிலவரத்தைத் தெளிவாகப் பிட்டுக் காண்பித்ததும்... அதிர்ச்சியில் உறைந்து போய் விட்டாள் நிவேதா.

பீறிட்டுக் கொண்டு வந்த அழுகையை... கீழுதட்டை அழுந்தக் கடித்து அடக்கினாள்.

கண்களைச் சிமிட்டி கண்ணீரை உள்ளிழுத்துக் கொண் டாள்.

''டாக்டர்! எனக்கு நம்பிக்கை இருக்கு. நீங்க சொன்னபடி ஏதாவது அதிசயம் நடந்து என்னோட காந்தன் பிழைச்சுப் பாரு... நான்... காந்தனைப் பார்க்கலாமா டாக்டர்?''

''கால்லேயும் வலி தெரியாம இருக்க ஊசி போட்டிருக் கோம். நல்லா தூங்கறாரு... மயக்கம் தெளிஞ்சதும் போய் பாருங்க... அதிகமா தொந்தரவு தராம பார்த்துக்கோங்க.''

''நன்றி டாக்டர்'' கை கூப்பி வணங்கி விட்டு வெளியே வந்தனர்.

கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் கழித்து தான்... காந்தனை சந்திப்பதற்கு அனுமதித்தனர்.

''அவனை அந்த நிலைமையில பார்க்கிறதுக்கு என் மனசுல தெம்பு இல்லம்மா... நீயே போய்ப் பாரு நிவேதா'' தாத்தா பிடிவாதமாக மறுத்து விட்டார்.



அவனிருந்த கோலத்தைப் பார்த்து விட்டு மாமா தணிகை வேல் முகம் வெளிற வேதனையுடன் வெளியேறி விட்டார்.

உயிரின் ஓட்டத்தையும், தப்பித்தலையும் தடுத்து நிலை நிறுத்தக் கூடிய கருவிகள் பலவற்றின் காட்சிச் சாலையாக இருந்தது அந்த அறை!

அவனது நிலைமையைப் பார்த்ததும்... சிலீரென்று குளிர் உயிர் நிலையைப் பிடித்து உறைய வைத்தது.

அவளது நம்பிக்கை ஊசலாடியது. கரிசனம் கொப் பளித்தது.

அவனது நேசம் கோர்த்த பார்வை... குற்றாலச் சாரல் மாதிரி பன்னீர் தெளித்தது. விழியசைவில் அவனது அருகில் வரும்படி ஜாடை காட்டினான்.

அவனை நெருங்கி முகம் நோக்கி மெல்லக் குனிந்தாள். அவளது கையைப் பிடித்தான்.

''நான்... நான்... உன்னை...'' திணறினான்.

''எனக்கு எல்லாம் தெரியும் காந்தன். உங்க நிலைமைக்கு யார் காரணம்னு தெரியும்... எனக்கு உங்க மேல வருத்தமோ கோபமோ இல்லை... விஷயம் தெரிஞ்சதும்... உங்க மேல இருந்த வருத்தம் கூடப் போயிடுச்சு.

''நீங்க கண்டிப்பா குணமாகி வீடு திரும்பத் தான் போறீங்க காந்தன். நம்புங்க.''

''இல்ல... வயசான காலத்துல தா... தாத்தா பாட்டியை நான் அநாதரவா விட்டுப் போறேன்... நான் பிழைக்க மாட் டேன் நிவேதா... நீ...'' சட்டென்று அவனது வாயை இதமாகப் பொத்தினாள்.

''உங்களுக்கு எப்படியோ? எனக்கு நம்பிக்கை இருக்கு. தாத்தா பாட்டிக்கு நான் இருக்கேன் காந்தன். அப்படியொரு நிலைமை வந்தா அவங்களை அநாதரவா தவிக்க விடமாட் டேன்.

''மனசளவில உங்க கூட வாழ்ந்துட்டிருக்கேன். இன்னும் எத்தனை ஜென்மம் எடுத்தாலும் நம்மை யாரும் பிரிக்க முடியாது காந்தன். ஏன்னா... இது பூர்வ ஜென்ம பந்தம்! இது நீங்க சொன்னதுதான் நான் எதையும் மறக்கலை காந்தன். ஐ லவ் யூ ஸோ மச்.''

வார்த்தைகள் வாத்சல்யம் சுமந்து வருவதைக் கேட்ட காந்தனுக்கு கண்களில் கண்ணீர் குளம் கட்டியது.

முகத்தில் நிறைவும் நிம்மதியும் பரவ ஆயாசத்துடன் அவனது விழிகள் மூடிக் கொண்டன.

மறுகணமே அவனுக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டது.

''ஐயோ காந்தன்... ந... நர்ஸ்... சிஸ்டர் ஓடி வாங்க'' அலறி விட்டாள்.

ஷூக்கள் சப்திக்க நர்ஸுகளும் டாக்டர்களும் விரைந்து வந்தனர். தீப்பிடித்தாற் போன்று... பரபரப்பு அங்கே தொற்றிக் கொள்ள உடனடியாக செயற்கை சுவாசம் காந்தனுக்கு அளிக்கப்பட்டது.

பதட்டம் சிலந்தியாய் கால் பரப்பி... இவளுள் நடக்க ஆரம்பித்தது.

'என் காந்தன் பிழைத்து வந்து விடுவார்'... என்ற நம்பிக்கை நூலில் தொங்கிக் கொண்டிருந்தாள்.

அவளது உதடுகள் காற்றில் சிக்கிய மலரிதழ்களாய் துடித்தன.

## 21

வேதாசலம் குட்டி போட்ட பூனையாய் குறுக்கும் நெடுக்குமாய் நடந்து கொண்டிருந்தார்.

வரலட்சுமிக்கு அழுதழுது கண்கள் வீங்கிப் போய் விட்டிருந்தன.

''ஏங்க! குற்ற உணர்ச்சியே என்னைக் கொன்னுடும் போலிருக்கே? அவன் பிறந்ததும்... 'வாழையடி வாழையா



வம்சத்தை விளங்க வைக்க வந்தவன்'னு... பூரிச்சுப் போனோமே?

''இப்படியொரு பிள்ளையைப் பெத்து, வம்சத்தோட பேரைக் கெடுத்துட்டோமேன்னு... மனசாட்சி அறுக்குது...'' தேம்பினார்.

''பெண்கள் விஷயத்துல தான் அவன் ரொம்ப மோசம். குடும்ப மானத்தைக் குழி தோண்டிப் புதைச்சட்டிருக் கானேன்னு... நாம்ப ஆடிப் போயிருக்கோம்.

''பண்ணின பாவமெல்லாம் பத்தாதுன்னு... கொலை செய் யற அளவுக்குத் துணிஞ்சுட்டானே? இவன் உருப்படுவானா?

''அந்தப் பொண்ணோட கண்ணீர் வீண் போகுமா வரலட்சுமி? அவ விட்ட சாபம் பலிக்கத் தான் போகுது. அவளை அடையறதுக்காக... கொலைகாரனா மாறிட்டானே?

''நீதி, நியாயம், தர்மம்னு ஒண்ணு இருக்கே... இவன் பண்ற அராஜகத்துக்கு கடவுள் பெரிய தண்டனையா குடுப்பாரு. பாரேன்!

''அது மட்டுமா? என்னிக்காவது ஒரு நாள் போலீஸ் அவனை அரஸ்ட் பண்ணிரும் பாரு...

''கோர்ட் தண்டனை குடுத்து அவனை ஜெயில்லே போடும்... டி.வி., பத்திரிகைகள்லே நம்ம குடும்பத்துப் பேரு அடிபடும். அது எவ்ளோ பெரிய அவமானம்?

''அவனோட எதிர்காலமே இருண்டு மானம் போயி... ஜெயில்லே களியைத் தின்னு அடைபட்டுக் கிடக்கத்தான் போறான்.

''இந்தக் கண்றாவியை எல்லாம் பார்க்கிறதுக்கு முன்னே... நீயும் நானும் இவனைப் பெத்த பாவத்துக்கு... விஷத்தைத் தின்னுட்டு அக்கடான்னு கண்ணை மூடிடலாம். என்ன சொல்றே?''

''இதெல்லாத்தையும் விட அவன் நம்மை எடுத்தெறிஞ்சு பேசினான் பாருங்க... அதைத் தாங்க என்னால தாங்க முடியலை.

''ஏன்டா... இது நாள் வரை பண்ணின அக்கிரமம் பத்தா துன்னு... ஆட்டைக் கடிச்சு மாட்டைக் கடிச்சு கடைசியில கொலை பண்ணவே துணிஞ்சுட்டியே?'ன்னு கேட்டதுக்கு... 'விஷயம் எல்லாம் தெரிஞ்சுடுத்தா?' அப்படின்னு குளிர் விட்டுச் சிரிச்சானே?

''ஆமாம்மா... நான் அப்படித்தான் நடந்துப்பேன். என்ன செய்யறதா உத்தேசம்? நீ எங்களுக்கு பிள்ளை இல்லை... சொத்துல சல்லிப் பைசா தர முடியாதுன்னு வீட்டை விட்டு உங்களால துரத்த முடியுமா? முடியாது...

''ஏன்னா... இது பரம்பரை சொத்து! தாத்தா சொத்து பேரனுக்குத் தான்... உங்களால என்னை என்ன செய்துட முடியும்?

''கிருஷ்ணா ராமா'ன்னு கோவில் குளத்தைச் சுத்திக்கிட்டு கண்ணை மூடிக்கிட்டு கிடங்க... எதையும் கண்டுக்காம இருந்தாத்தான் உங்களுக்கு நல்லது.

''இல்லேன்னா... பெத்த தாய்னு கூடப் பார்க்க மாட்டேன். என்னோட சந்தோஷத்துக்கு யார் குறுக்கே வந்தாலும் சரி... வெட்டித் தூக்கி எறிய நான் தயங்க மாட்டேன்னு உறுமலா வசீகரன் பேசிட்டானே?

''அவன் பேசியதைக் கேட்டதிலிருந்து நெருப்புக் கங்காய் மனசு குமையுதேங்க?

''இப்பேர்ப்பட்ட புள்ளையைப் பெத்ததுக்கு... நான் பேசாம மலடியாவே இருந்திருக்கலாம்னு தோணுதுங்க...''

''என்னிக்கு சிவனாண்டி பொண்ணை அவன் கெடுத் தான்னு தெரிஞ்சுதோ... அன்னிக்கே நான் தண்ணி தெளிச்சு விட்டுட்டேன் வரலட்சுமி.

''பயல் கை மீறிப் போயிட்டான். கண்டிச்சா நமக்குதான் அசிங்கம்னு கம்முனு விட்டுட்டேன்.''

''வினை விதைச்சவன் வினையறுப்பான்'னு சொல்வாங்க. அவன் பண்ணின பாவத்துக்கு ஏத்த கூலியை பகவான் கொடுப்பாரு.''



'நல்லோர் வாக்கு பலிதமாகும்' என்று சொல்வார்கள். வேதா சலத்தின் வாக்கு அட்சரம் பிசகாமல் பலிக்கத்தான் செய்தது.

## 22

மூக்கு முட்டக் குடித்து விட்டு காரை ஓட்டிய வசீகரனுக்கு... இருப்புக் கொள் ளாமல் மனம் அலை பாய்ந்தது.

சட்டென்று காரை நிறுத்தி விட்டு 'செல்'லை எடுத்து நிவேதாவின் எண்ணுக்கு முயற்சித்தான். இணைப்பே கிடைக்கவில்லை.

''சே! எப்பப் பாரு... சிக்னலே கிடைச்சுத் தொலைய மாட்டேங்குது. டாமிட்'' என்றபடி காரை விட்டு இறங்கி சாலை யின் நடுவில் தள்ளாடியபடி நின்றான். மீண்டும் முயற்சித்தான்.

இரவு நேரமாதலால் வாகனப் போக்குவரத்து ஏதுமின்றி தார்ச் சாலை அமானுஷ்யமான அமைதியில் மூழ்கிக் கிடந்தது.

''ஹலோ'' நிவேதாவின் குயிலைப் பழித்த குரலைக் கேட்டதும்... குதூகலம் குமிழிட்டது.

''என்ன நிவேதா? உன் ஆளு 'டிக்கெட்' வாங்கிட்டானா? இல்லையா? இன்னும் இழுத்துட்டிருக்கா? கவலையே படாதே செல்லம்... சீக்கிரமா சங்கு சத்தம் கேட்டுடும்.

''அப்புறமா நீ முழுசா...'' குழறியபடி பேசினான்.

''சீ... நாயே! வைடா போனை...'' மறுமுனையில் அவள் பட்டென்று இணைப்பைத் துண்டித்தாள்.

''திட்டறியா? நல்லா திட்டு! போனை ஸ்விட்ச் ஆப் பண் ணிட்டியா? இன்னமும் உன் திமிர் அடங்கலை இல்லையா?

''காந்தன் செத்தாலும் நீ அடங்க மாட்டியா? இரு... உன் தங்கச்சிகளை ஒரேயடியா தூக்கிடறேன்... அப்புறம் பாரு... தன்னால வழிக்கு வருவே.''

குடி போதையிலும் கோபத்திலும் உளறிக் கொட்டியபடி... தள்ளாடியவாறு சாலையின் குறுக்கும் நெடுக்குமாக நடந் தான் வசீகரன்.

அவனது கோபம் உக்கிரமடைந்து உச்சிக்குப் போயிருந்தது.

''ஏய்... நான் யாருன்னு காட்டறேன்டி... நாளைக்கு உனக்கு நல்லா விடியப் போகுது'' உச்ச ஸ்தாயியில் கத்தினான்.

நள்ளிரவு நேரத்தில் ஆற்று மணலைத் திருட்டுத் தனமாக ஏற்றிக் கொண்டு... கண்மண் தெரியாமல் அசுரத்தனமாக அந்த சாலையில் விரைந்து வந்தது ஒரு லாரி.

''அண்ணே? யாரோ ஒரு குடிகாரப் பைத்தியம் ரோட்டுல குறுக்கே நடமாடிட்டிருக்கானே?'' கிளீனர் எச்சரித்தான்.

''நின்னு நிதானிக்க நமக்கேது நேரம்? அடிச்சுத் தூக்கிப் போட்டுட்டு போயிட்டே இருக்க வேண்டியது தான்'' குடி போதையில் அவசரமாக ஓட்டிய டிரைவர்... 'மனிதாபிமானம்' என்றால் 'கிலோ என்ன விலை?' என்று கேட்கும் ரகம்!

விளைவு? கண் இமைக்கும் நேரத்தில் தூக்கி எறியப் பட்டான் வசீகரன்.

* * *

இரவெல்லாம் நிவேதா தூங்கவே இல்லை. அதிகாலை மூன்று மணிக்கு எழுந்து பரபரவென்று சமையலை முடித்தாள். பாட்டி சீதம்மாளை தன்னுடன் அழைத்து வந்து விட்டாள்.

''லீலா.... நீலா! மதியச் சமையல் கூட முடிஞ்சு போச்சு. தாயம்மா வந்ததும் சூடு பண்ணி பரிமாறச் சொல்லு... அம்மாவுக்கு நேரத்துக்கு மாத்திரை எடுத்துக் கொடுக்கச் சொல்லு...

''பாட்டி வயசானவங்க முடியாதவங்க... அம்மா கூடவே இருக்கட்டும். நான் ஆஸ்பத்திரிக்குப் போயி மாமாவையும் தாத்தாவையும் அனுப்பி வைக்கிறேன்'' சொல்லி விட்டுக் கிளம்பினாள்.

அவள் ஆஸ்பத்திரியை அடைந்தபோது... மலர்ந்த முகங்களுடன் மாமாவும் தாத்தாவும் அவளை எதிர்கொண்டனர்.

''நிவேதா கண்ணு! நீ சொன்னாப்பல... ஒரு பெரிய அதிசயம் நடந்தாச்சு... நம்ம காந்தனுக்கு இதய மாற்று அறுவை சிகிச்சை பண்ணிட்டாங்க...



''இனி அவன் பொழைச்சுப்பான். உன் நம்பிக்கை வீண் போகலை கண்ணு'' சந்தோஷம் தாளாமல் விரல்கள் நடுங்க அவளது கரத்தைப் பற்றினார் ராமசாமி.

''என்ன தாத்தா சொல்றீங்க? நிஜமாவா? ஒரே நாள் இரவுக்குள்ளே மகமாயி அற்புதத்தை நிகழ்த்திட்டாளா? யார் அந்த டோனர்?

''அவங்களுக்கு முதல்லே நன்றியைத் தெரிவிக்கணுமா? மனித ரூபத்துல வந்த அந்த தெய்வத்தைக் காட்டுங்க மாமா... நான் உடனே பார்க்கணும்...'' தழுதழுத்தாள் நிவேதா.

அதுவரை கனன்ற மனதில்... சில்லென்ற அபிஷேகப் பாலை வார்த்தாற் போன்றிருந்தது. சுவரில் சாய்ந்து விழிகளை மூடி நீண்ட பெருமூச்செறிந்தாள்.

''அதோ அந்த அறையில தானிருக்காங்க... போய் பாரு நிவேதா'' மாமா சுட்டிக் காட்டினார்.

அறைக்குள் நுழைந்தவளுக்கு தூக்கி வாரிப் போட்டது.

''வாம்மா! நேத்து வசீகரன் குடி போதையில சாலையில வரும்போது... வி... விபத்து நேர்ந்துட்டதும்மா... தலையில பலத்த காயம்... மூளைச் சாவு ஏற்பட்டிருச்சு...

''அவன் பண்ணின பாவத்துக்குப் பரிகாரமா இருக்கட்டும்னுதான்... நாங்க இந்த முடிவுக்கு வந்தோம். அவனோட இதயம் சிறுநீரகங்கள், கண்கள்னு எல்லாத்தையும்... பாதிக்கப்பட்டவங்களுக்கு பொருத்துங்க டாக்டர்'னு சொல்லிட்டோம்.

''காந்தனோட கதிக்கு அவன் தானே காரணம்? உயிரோட இருந்த வரைக்கும் நல்லவனா வசீகரன் வாழலை... அவனோட உடல் உறுப்புகளால நாலு ஜீவன்கள் உயிர் பிழைக்கட்டும்னு... இந்த முடிவுக்கு வந்தோம்.

''அம்மாடி நிவேதா! வசீகரனை நாங்க தவமிருந்து பெத்தோம். அவன் கெட்டவன் தான்... இருந்தாலும் எங்க பிள்ளை இல்லையா? அவன் இறந்தாலும்... காந்தன் மூலமா மறைமுகமா வாழ்ந்துட்டு தானே இருக்காங்கிற திருப்தி!

''அவனுக்கு இந்த தண்டனை தேவை தான்... இருந்தாலும் எங்க பெத்த மனசுக்கு ஒரு ஆறுதல்... அவனோட இதயம் இன்னமும் துடிச்சுட்டிருக்கு,

''காந்தனை எங்க வளர்ப்பு மகனா தத்தெடுக்கப் போறோம். ராமசாமி ஐயா கூட சம்மதிச்சுட்டாரு. நீ எங்க வீட்டுக்கு நாங்க ஆசைப்பட்டபடியே மருமகளா வரப் போறே...

''வசீகரன் பேர்லே ஒரு அறக்கட்டளை ஆரம்பிச்சு... நீயும் காந்தனும் ஏழை எளியவங்களுக்கு நல்லது செய்யணும். நீங்க ரெண்டு பேரும் சந்தோஷமா அமோகமா வாழறதை... பெரியவங்க நாங்க எல்லாரும் கண் குளிரப் பார்த்து மகிழ்ச்சி அடையணும். அதான் எங்க ஆசை'' கண்ணீர் வடியப் பேசிய வரலட்சுமியின் பாதங்களைத் தொட்டாள் நிவேதா.

''நீங்க தெய்வம் அம்மா'' என்றவளை வாரியணைத்துக் கொண்டார்.

அந்தி வானம் வானவில்லை மாலையாகச் சூடியிருந்தது.

காந்தனைச் சந்திப்பதற்கு அனுமதிக்கப்பட்டாள் நிவேதா.

அவனது விழிகள் அவளுடைய நெஞ்சுக் கூட்டைத் துளைத்து இதயத்தைத் தீண்ட.... மனதிற்குள் சுகமான நேச மழைச் சாரல்!

''என் நம்பிக்கை பொய்யாகலை பார்த்தீங்களா? ஐ லவ் யூ காந்தன்'' என்றபோது விழிகளாலேயே சிரித்தான் காந்தன்.

மனதிலிருந்த பெரும் பாரம் இறங்கி மனம் இறகு போல் லேசானது.

''உள்ளங்கள் ஒன்றாகித் துள்ளும் போதிலே... பொங்கும் இன்பமே சுவர்க்கம் வாழ்விலே...'' என்று வாய்விட்டுப் பாட வேண்டும் போலிருந்தது.

அந்த அன்பு உள்ளங்கள் காதலுடன் தங்கள் கரங்களைக் கோர்த்த போது... பொதிகைத் தென்றல் ஜவ்வாது வீசியது. சரம் சரமாய் பிச்சிப் பூ வாசம் பூசி கிறக்கியது.